டிராஃபிக் டிக்கெட்
Car Accidents / வாகன விபத்துகள் கிரிமினல் வழக்குகள் (Summary), Provincial Offences / By-law Offences மற்றும் இதர சட்டப்பிரச்சனைகளுக்கு அழையுங்கள்
VINOTHKUMAR
LICENSED PARALEGAL
647.667.6034
WWW.TRAFFICKUMAR.CA
TK LEGALS

29வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 29 பாலம்: 02 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 15, 2019

# தேர்தல் பிரசாரத்தில் மாசு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல்?

மாசு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக லிபரல் அரசு காபன் வெளியேற்றத்திற்கு விலை விதித்துள்ளது, கனேடியப் பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்துமே அல்லாமல் மாசுவெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தமாட்டாது என சஸ்கச்சுவான் மாகாணத்தின் Regina நகரில் உள்ள ஒரு Giant Tiger வர்த்தகநிலையத்தில் கனேடிய மக்களுக்கு வெளியிட்ட புதுவருடச் செய்தியில் கனேடிய நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவரான பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த Andrew Scheer தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் ஒக்ரோபர் மாதத்தில் கனேடிய நாடாளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் நடைபெற இருப்பதால் கனேடிய எதிர்க் கட்சித்தலைவரின் புதுவருடச் செய்திபற்றிக் கருத்துத் தெரிவித்த ஊடகவியலாளர்கள் இம்முறை பொதுத் தேர்தலில் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தக் கட்சிகள் முன்வைக்கும் மாசு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள் காரசாரமாக விவாதிக்கப்படுவதுடன் அவை தேர்தல் பிரசாரத்தில் முன்னிலை வகிக்கும் எனத் தெரிவிக்கின்றனர்.

கனடாவில் வேலை தேடுவோரின் எண்ணிக்கை கனேடிய சரித்திரத்திலேயே கடந்த 43 வருடகாலத்தில் மிகக்குறைந்த அளவான 5.6%ஆகத் தற்போது இருப்பதாகக் கனேடியப் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2019 ஜனவரி 4ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. கடந்த மாதம் மட்டும் 9,300 புதிய வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கனேடிய மத்திய அரசு நடத்திய மக்கள் கருத்துக்கணிப்பு ஒன்றை மேற்கோள் காட்டி Globel செய்தி ஊடகம் வெளியிட்ட தகவல் ஒன்றில் கனேடியப் பெண்கள் தமக்கு முக்கியமான கரிசனைக்குரிய விடயங்களாக சுற்றுப்புறச்சூழல் - காலநிலை மாற்றமும் மற்றும் மருத்துவ சுகாதார வசதிகளும் இருக்கின்றன எனத் தெரிவித்துள்ளனர். அதேவேளை ஆண்கள் தமக்கு முக்கியமான கரிசனைக்குரிய விடயங்களாகப் பொருளாதார வளர்ச்சியும் மற்றும் சுற்றுப்புறச்சூழல் - காலநிலை மாற்றமும் இருக்கின்றன எனத் தெரிவித்துள்ளனர்.



லிபரல் அரசின் மாசுவெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை விமர்சித்த Andrew Scheerஐ ஊடகவியலாளர்கள் பழமை வாதக்கட்சியின் மாசு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம் என்ன என்று கேட்டதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் காபன் வெளியேற்றத்திற்கு விலை விதிப்பதாக அது இருக்காது, அது புதிய தொழில்நுட்பங்களை உபயோகித்து பசுமை வாயுக்கள் வெளியேறுவதைக் (Emissions) கட்டுப்படுத்துவதாகவே இருக்கும். இத்திட்டத்தை தேர்தலுக்குப் பல மாதங்களுக்கு முன்னரே பொதுமக்களுக்கு வெளியிடுவோம் என்றார்.

தற்போதைய கனேடிய லிபரல் அரசின் மாசு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின்படி மாசு வெளியிடும் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் அவர்கள் வெளியிடும் காபனீரொட்சைட்டு வாயுவின் அளவிற்கு ஏற்ப அரசுக்குப் பணம் கட்ட வேண்டும். இங்கு பெரிய தொழிற்சாலை எனப்படுவது வருடம் ஒன்றுக்கு 50 ஆயிரம் Tonnes காபனீரொட்சைட்டை சூழலில் வெளியிடும் தொழிற்சாலைகளாகும். இவர்கள் சூழலில் வெளியிடும் ஒவ்வொரு Tonnes காபனீரொட்சைட் வாயுவிற்கும் 2019 ஜனவரி 01இல் இருந்து வருடம் ஒன்றுக்கு $20 வரியாக அரசுக்கு செலுத்த வேண்டும். இவ்வாறு அறவிடப்படும் பணம் வருடம் தோறும் மேலதிக $10ஆல் அதிகரிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் இருந்து சூழலில் வெளியிடப்படும் ஒவ்வொரு Tonnes காபனீரொட்சைட் வாயுவிற்கும் வருடம் ஒன்றுக்கு $50 வரியாக அரசிற்குக் கட்டவேண்டும்.

இதைவிட எரிபொருளை உற்பத்திசெய்யும் நிறுவனங்களுக்கு அவர்கள் வெளியிடும் காபன் மாசுக்கும் 2019 ஏப்பிரல் மாதத்தில் இருந்து புதியவரி அறவிடப்படுகிறது. இவ்வரி விதிப்பால் பெற்றோலின் (Gasoline) விலை 2022ஆம் ஆண்டளவில் லீற்றர் 11.6 சதத்தாலும், டீசலின் (Diesel) விலை லீற்றர் 12.4 சதத்தாலும் அதிகரிக்கப்படும்.

ஏற்கனவே மாகாண அரசுகளால் தமது மாகாணங்களில் இவ்வகையான காபன் வரித்திட்டம் அமலாக்கப்பட்டிருந்தால் அம்மாகாணங்களை கனேடிய மத்திய அரசின் மாசுவெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக காபன் வெளியேற்றத்திற்கு விதிக்கப்பட்ட வரி பாதிக்கமாட்டாது.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com
Kumar Jegasothy
Sales Consultant

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgages)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
HomeLife/Future Realty Inc.

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129 Markham & Steeles Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5 Markham & Eglinton Tel: 416.264.3232
Dentistry for children, adults and seniors
Dr. Iru Vijayanathan BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Monday to Saturday 10am to 8pm
Dr. Rashmi Jenojan BDS, University Of London, UK

உவகை
மணமக்கள் இணைப்பு
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104
email: uvakai100@gmail.com

JAFFNA COMFORT INC.
WE INSTALL ALL BRAND AC & Furnace. Gas line
REBATE Available
THEEPAN TSSA Licensed Contractor
416-358-5240
647-300-8550

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
MORTGAGE ALLIANCE
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC

CIBC For All your Mortgage Needs...
Mahesh Thangarajah
Mobile Mortgage Advisor
647.524.5237
Toll Free: 1.844.669.6094
mahesh.thangarajah@cibc.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமது இல்லமும் - 526

## 50 வருடங்களின் பின் வீட்டை விட்டு வெளியேறும் முதியோர்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கணவனும், மனைவியுமாக அவர்களுக்கு 30 வயது இருக்கும்போது வாங்கிய வீட்டை விட்டு, மனைவி வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட பெண்ணிற்கு முதுமையில் வரும் மறதி நோய் (dementia) வந்ததே இதற்குக் காரணம். வீட்டிலிருந்த பொருட்கள் அனேகமானவை 40-50 வருட பழமையானை. வீட்டின் சுவர்கள் பழைய நினைவுகளை ஞாபகப்படுத்தும் படங்களாலேயே நிரப்பப்பட்டிருந்தன. சுவரைப் பார்க்கும்போது, இவர்களின் குடும்பஙத்தின் தலைமுறைகளை நினைவில் கொண்டுவரக் கூடியதாக இருந்தது. மேலும் ஓவியம், அரசியல் தலைவர்களின் படங்கள், பெரிய மணிக்கூடு ஆகியனவும் காணப்பட்டன. என்னுடன் வந்திருந்த குடும்பம், தாயகத்தில் தமது வீட்டிலும் இவ்வாறே இருந்ததாகவும் 1987இல் சகலதும் எரிக்கப்பட்டு விட்டன என்றும் தமது மனப்பாரத்தை இறக்கினர். ஒவ்வொரு Closetகளும் பழைய பொருட்களாலும், உடுப்புக்களாலும் நிரம்பிக் காணப்பட்டன. இவை மனித வாழ்க்கையை கண்முன் கொண்டு வந்தன.

இது அறைகளில் தளபாடங்கள் நீக்கப்பட்ட இடங்களில் பாவிக்கப்படாத தரைவிரிப்பின் (Carpet) பழையவடிவத்தையும் பாவிக்கப்பட்ட பகுதிகளில் வெளிறிய நிறத்தையும் காட்டின.

குடும்பத்தின் நான்கு பிள்ளைகளில் மூவர் கனடாவின் வெவ்வேறு மாகாணங்களில்



வாழ்வதாகவும், ஒருவர் இறந்து விட்டதாகவும் கணவன் தெரிவித்திருந்தார். நிலக்கீழ்பகுதியில் (Basement) பிள்ளைகளின் பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள் (Toys), Puzzles, Games படைபடையாக அடுக்கப்பட்டிருந்தன. ஓர் அறையும், குசினியும் மட்டுமே, அண்மைக்காலமாக பாவிக்கப்பட்டதான நிலையை எடுத்துக் காட்டியது. இது வாழ்வின் பல நினைவுகளை, ஞாபகப்படுத்திய வண்ணம் இருந்தது.

முதியவர்கள் வாழும் இடத்திற்கு (Retirement home) கணவன், மனைவி செல்ல இருப்பதால், இங்கிருந்து ஒரு சில பொருட்களை மட்டுமே எடுத்துச்செல்ல இருப்பதாகத் தெரிவித்தார். மற்றைய பொருட்கள் போகவேண்டிய இடத்திற்கு அதற்குரியவர்கள் தமது தொழிலை செய்து கொண்டிருந்தனர்.

உலக மகாயுத்தம் காரணமாக, ஐரோப்பிய நாட்டிலிருந்து வந்து குடியேறிய இந்தக் குடும்பத்தினரின் வாழ்க்கையும் எமது பலரின் வாழ்க்கையுடன் ஏதோவிதத்தில் தொடர்புகொண்டு இருப்பதனை எம்மால் இணைத்துப் பார்க்க கூடியதாக இருந்தது. $100,000 குறைவாக வாங்கிய இந்த ஆதனம் இன்று 50 வருடங்களின் பின்பாக $1 மில்லியனிற்கு மேலாக சந்தைப்படுத்தப்பட்டுள்ளது. ஏறக்குறைய 50 வருடங்களில் 10 மடங்கு அதிகரித்துள்ளது. 1986-87களில் $250,000 அளவில் எம்மவர் வாங்கிய வீடுகள் இன்று $800,000இற்கு மேலாக விற்பதனுடன் ஒப்பிடக்கூடியதாக உள்ளது.

ஆதனத்தில் முதலீடு நீண்டகாலத்திற்கு சிறந்தது என்பதனை இதுபோன்ற பல உதாரணங்கள் மூலம் காணலாம். ஆதனத்தில் முதலிடும்போது, தகுந்த இடத்தில் (Location) முதலீடு செய்வதே சிறந்தது. ஆதனம் என்பது நீண்டகால முதலீடு என்பதனை நினைவில் கொண்டு, முதலீடு செய்வது எப்பொழுதும் நல்ல பலனையே கொடுக்கும்.

## வட்டி அதிகரிப்பு வாகன வியாபாரத்திலும் பாதிப்பு

நவம்பர் 2018வரையிலான எட்டு மாதங்களாக வாகன வியாபாரத்தில் தொடர்ச்சியான இறக்கம் ஏற்பட்டு வந்துள்ளது. Global Auto Maker Canada (GAC)இன் அறிக்கையில் இது 9.5% இறக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 மாதங்களில் கனடிய மத்திய வங்கி 5 தடவை வட்டி வீதத்தை அதிகரித்துள்ளது. இதன் தொடர்ச்சி 2019இலும் நிகழலாம் என் எதிர்பார்க்கப்படுகிறது. வட்டி வீத அதிகரிப்பால் மாதாந்தக்கொடுப்பனவு அதிகரித்துள்ளது.

கனடாவின் மிகப் பெரிய வாகன உற்பத்தியாளரான GM இன் வாகன வியாபாரத்தில் 18.3% இறக்கம் ஏற்பட்டுள்ளது. இதற்கும் வட்டி வீத அதிகரிப்புக்கும்

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORTGAGE

- ⇒ $35,000.00 வரை Personal Loan (பெர்சனல் லோன் ) தேவையா?
- ⇒ Private 1st & 2nd Mortgages தேவையா?- No Income Verification
- ⇒ மோட்கேஜ் பலன்ஸ் கட்டாது வீட்டினை பறி கொடுக்கும் நிலையில், அடுத்து என்ன செய்வதென யோசிக்கிறீர்களா?
- ⇒ Refinance / Renewal (ரிபைனான்ஸ் / ரினிவல்) செய்ய வேண்டுமா?
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ் தேவையா?
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா வேண்டுமா?

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

**அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும் ...**

**நீங்களும் வெல்லலாம்**
**$100,000 ***
எம்மிடம் மோட்கேஜ் பெறுவதன் மூலம்.

MORTGAGE
CLINIC



www.mortgageclinicanada.com

**உங்களுக்கு கை கொடுக்க காத்திருக்கிறது**

**416-613-2788 / 416-816-9011**



## ஜெ(Jey)இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage Agent/Real Estate Broker

**Cell : 416 - 624 - 4843**

RIGHT AT HOME REALTY INC.

**1504 Markham Road,**
**Toronto ON M1B 2V9**
**(Markham Road & HWY 401)**

MORTGAGE ALLIANCE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3 Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

*http://www.mortgagealliance.com/JeyRasathurai/minimize-your-mortgage-sweepstakes



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய ஆளுநர்கள் நியமனம் நல்லிணக்கத்திற்கு வழிசமைக்குமா?

**- ஆதித்தன் -**

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் பேசும் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வட மாகாணத்தின் ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி சுரேன் ராகவன் ஒரு கல்விமான். அவர் நேரடி அரசியலில் ஈடுபட்ட ஒருவரல்ல. ஆனால், அரசியல் தெரிந்தவர். அரசியல் ஆய்வுகளில் ஈடுபட்டவர். பிரித்தானியாவின் கென்ட் பல்கலைக்கழகத்தின், அரசியல் மற்றும் சர்வதேச உறவுகள் கல்லூரியில் தனது முதுமானிப் பட்டத்தை பெற்றவர். 'இனத் தேசியவாதத்தில் மதத்தின் பங்கு' என்ற தலைப்பின் கீழ் தனது கலாநிதி பட்டத்திற்கான ஆய்வினை அதே பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தவர்.

2008ஆம் ஆண்டில் ஜேம்ஸ் மடிசன் அறக்கட்டளையினால் வழங்கப்பட்ட புலமைப் பரிசில், மற்றும் கனடாவின் ஒன்ராரியோ மாகாண அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புலமைப்பரிசில் ஆகியவற்றையும் சுரேன் ராகவன் பெற்றுள்ளார். ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளராகவும் ஜனாதிபதியின் ஆலோசகராகவும் பணியாற்றியவர்.

புதிய ஆளுநர் தொடர்பான விமர்சனங்கள் எவையும் இன்னும் வடக்கு அரசியல்வாதிகளிடமிருந்து வெளிப்படவில்லை. வட மாகாணத்திற்கு முதன் முதலாக தமிழர் ஒருவர் ஆளுநராக நிமிக்கப்பட்டதை வரவேற்பதாக வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார். இதேபோன்ற கருத்துக்களையே வேறு சில அரசியல்வாதிகளும் தெரிவித்து வருகின்றனர். சில அரசியல்வாதிகள் ஆளுநர் நியமனம் தொடர்பில் எதனையும் கூறாமல் மௌனம் சாதித்து வருகின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது.

சுரேன் ராகவன் பௌத்த துறவிகளுக்கும், யுத்தத்திற்குமான தொடர்புகள் குறித்த இரண்டு நூல்களையும், இன்னும் சில நூல்களையும் எழுதி வெயிட்டுள்ளார். பௌத்தம் குறித்து இவர் நூல் எழுதியிருப்பதால் இவரை பௌத்த சிந்தனைவாதி என்று வடக்கிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டிருந்தது. ஒருவர் பௌத்தம் பற்றி எழுதினால் அவரை பௌத்த சிந்தனைவாதி என்று கூறிவிட முடியாது. அடிப்படையில் பௌத்தம் மோசமான மதமல்ல. அதனைக் கடைப்பிடிப்பவர்களே மோசமானவர்களாக நடந்து கொள்கின்றனர்.

சுரேன் ராகவன் வடக்கின் ஆளுநராக கடமைகளை பொறுப்பேற்றவுடன் தெரிவித்த கருத்துக்களும், பின்னர் அவர் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் தெரிவித்து வரும் கருத்துக்களும் ஊழல் மோசடிகளுக்கு எதிரானதாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் அவர் தமிழ் மொழி மீதான பற்றையும் அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றார். புதிய ஆளுனரின் நிர்வாகத் திறமை குறித்து இனிவரும் காலங்களில் தான் நாம் தெரிந்துகொள்ள முடியும்.



கிளிநொச்சியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் பின்னான நிலைமைகளைப் பார்வையிட ஆளுநர் சுரேன் வந்தபோது கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். அப்போது, இரணைமடுக்குள முகாமைத்துவம் சரியாக இல்லாத காரணத்தினால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு குறித்து தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் அவர் உடனடி கவனத்தை செலுத்தியிருக்கின்றார். இரணைமடு குளத்தின் முகாமைத்துவத்தில் தவறு ஏற்பட்டதா என்பது தொடர்பில் ஆராய புதிய விசாரணைக் குழுவை அவர் நியமித்துள்ளார்.
ஓய்வுப்பெற்ற, வடக்கு, கிழக்கு மாகாண அமைச்சு ஒன்றின் செயலாளராக இருந்த பொறியியலாளர் இரகுநாதன், நியாப் திட்டத்தில் பணியாற்றிய இந்திரசேன மற்றும் மொறட்டுவ பல்கலைகழக பொறியியலாளர் ஒருவருமாக மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் முதற் கட்ட விசாரணை அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ஆளுநரால் பணிக்கப்பட்டுள்ளது. இதனை புதிய ஆளுநரின் நிர்வாக நடைமுறையின் வேகமானதொரு தொடக்கமாகப் பார்க்கலாம்.

இதேவேளை, வடக்கின் ஆளுநராக இது வரை காலமும் பணியாற்றிய ரெஜினோல்ட் குரேயிற்கும் வடக்கிலுள்ள மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவு இருந்ததென்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். சாதாரண பொதுமக்களிடம் அவர் தமிழ் மொழியில் உரையாடக் கூடியவராக இருந்தார். தன்னை ஒரு ஜனநாயகவாதியாகவும் அவர் காட்டிக்கொண்டார். அவருக்கு முதல் வடக்கு ஆளுநராகவிருந்த ஜி.ஏ.சந்திரசிறியுடன் ஒப்பிடும்போது இவர் நல்ல மனிதராகவே பொதுமக்கள் பார்வையில் தென்பட்டார்.

ஆனால், வடக்கின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்தார். ரெஜினோல்ட் குரே சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கான ஓர் அரசியல் நோக்கம் இல்லாமலிருக்க வாய்ப்பில்லை. அவருடன் பழகிய ஒருவர் அவரைப் பற்றிக் கூறும்போது, இனவாத முகத்தை ரெஜினோல்ட் குரே வெளிக்காட்டாமலிருந்தாலும் அவரிடம் இனவாதம் இல்லை என்று கூறமுடியாது என்று குறிப்பிட்டார்.

கட்சி அரசியலில் ஈடுபடாமல் சிறந்த நிர்வாகியாக மட்டும் ஒரு ஆளுநர் செயற்படுவாரேயானால் விமர்சனங்கள், சர்ச்சைகளுக்கு முகம்கொடுக்காமல் பணிகளை மேற்கொள்ள முடியும். எனவே, வடக்கின் புதிய ஆளுநர் சுரேன் ராகவன் எவ்வாறு சவால்களை கடந்து முன்செல்லப் போகின்றார் என்பதை எதிர்வரும் காலத்தில் கண்டுகொள்ளலாம்.

இதேவேளை, இப்போது கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லா கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களின் கடும் எதிர்ப்பிற்கு ஆளாகியுள்ளார். தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் அவர் ஆளுநராக நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். கடந்த 11ஆம் திகதி அவருக்கு எதிராக, மட்டக்களப்பில் தமிழ் மக்கள் வாழும் பல பிரதேசங்களில் ஹர்த்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஹர்த்தாலே ஹிஸ்புல்லாவை கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எந்தளவிற்கு வெறுக்கின்றனர் என்பதற்கு சாட்சியாகும்.

ஹிஸ்புல்லாவும் கல்வியில் புலமைப் பெற்றவர்தான். அரசியல் விஞ்ஞானத் துறையில் கலாநிதி பட்டம் பெற்றவர். இலங்கை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரலாற்றில் அரசியல் விஞ்ஞானத்துறையில் கலாநிதி பட்டம் பெற்ற முதலாவது அரசியல்வாதி என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார் என்று கூறப்படுகின்றது. எனினும் கிழக்கில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் வாழ்கின்ற நிலையில் இன, சமூக ஒற்றுமைக்கு இவரது நியமனம் பொருத்தமானதல்ல என்பதே பொதுவான விமர்சனமாகவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டால், இரத்த ஆறு ஓடும் என கடந்த காலங்களில் ஹிஸ்புல்லா தெரிவித்து வந்த கருத்துக்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கு விரோதமாகவே அமையும் என்பதையும் பலர் இன்று சுட்டிக் காட்டுகின்றனர்.

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற அரசியல் குழப்ப நிலைக்கு ஜனாதிபதி

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 41



குரு அரவிந்தன்

கனடாவின் வட லபரடோர் பகுதியில் ஆதி காலத்தில் வாழ்ந்த முதற்குடி மக்களையே ரூலி (Thule) என்று அழைத்தனர். இவர்கள் இனூட் பிரிவைச் சேர்ந்தவர்கள். வடமேற்குப் பகுதில் வாழ்ந்த சிறிய சமூகத்தின் கலாசாரம்தான் இவர்களிடமும் வந்து சேர்ந்தது. சுமார் 1000 வருடங்களுக்கு முன்பிருந்தே இந்தக் கலாசாரம் இவர்களால் பின்பற்றப்படுகின்றது. அக்காலத்தில் இப்பகுதிகள் இப்போது இருப்பது போன்று பனியால் பெரிதாக மூடப்பட்டிருக்கவில்லை என்று சரித்திர ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அலாஸ்காவில் வாழ்ந்த முதற்குடி மக்கள் கோடை காலத்தில் கிழக்கு நோக்கி நகர்வதற்கு வசதிகள் இருந்ததால் அவர்கள் திமிங்கில வேட்டைக்காக அங்கு வரக்கூடியதாக இருந்தது. அதனால்தான் அவர்கள் சென்ற இடமெல்லாம் இந்தக் கலாசாரம் அப்பகுதிகளில் நிலைத்து நின்றது.

ஐரோப்பாவில் இருந்து வியாபார நோக்கத்தோடு வந்தவர்கள் அங்கு தற்காலிகமாகத் தங்கி இருப்பதற்கு இப்பகுதி முதற்குடி மக்களின் ஆதரவு தேவைப்பட்டது. முதற்குடி மக்களான இவர்கள் வேட்டையாடுவதற்கு வேட்டையாடிய மிருகங்களின் எலும்புகள், பற்கள், கொம்புகள் போன்றவை பயன்படுத்தப்பட்டன. படகுகள் செய்வதற்கும் வேட்டையாடிய மிருகங்களின் தோலும் எழும்புகளும் பாவிக்கப்பட்டன. அவர்கள் குடியிருக்கும் வீடுகள் அமைப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது. குளிரைத் தாங்கக் கூடியதான வகையில் நிலத்தடியில் சுரங்கங்கள் தோண்டப்பட்டு மிருகங்களின் தோலும், பறவைகளின் இறகும் குளிர் காற்றைத் தடுப்பதற்காகப் பாவிக்கப்பட்டன. வீட்டுக்குள் சூட்டைத் தக்க வைப்பதற்காக திமிங்கிலம், சீல் போன்றவற்றின் கொழுப்பில் விளக்குகள் எரிக்கப்பட்டன. மழைகாலத்தில் நிலக்கீழ் வீடுகளில் தண்ணீர் புகுந்து விடுவதால், அக்காலங்களில் வெளியே கூடாரமடித்து கூடாரங்களில் தங்கினர். தொடர்ந்து கோடைகாலத்திலும் இப்படியான கூடாரத்திலேயே தங்கினர். மறுபடியும் அடுத்த பனிக்காலம் வந்ததும் நிலக்கீழ் வீடுகளில் தங்கினர். ஆரம்பத்தில் இந்த முதற்குடி மக்களின் வாழ்க்கை முறை இப்படித்தான் இருந்தது.

வேட்டைக்குப் போகும் போதும், பயணம் செய்யும் போதும் பனிக்கட்டிகளாலான வீடுகளைத் தேவைக்கேற்பக் கட்டினர். பொதுவாக ரூலி இனமக்களின் வேட்டையாடும் தந்திரம் ஆச்சரியம் தரக்கூடியதாக இருந்தது. மிகப்பெரிய திமிங்கிலங்களை மிகக் குறைந்த வசதிகளோடு அவர்களால் வேட்டையாடக் கூடியதாக இருந்தது. அப்படிக் கிடைக்கும் உணவு ஒரு கிராமத்திற்கு குளிர்காலம் முழுவதும் போதுமானதாக இருந்தது. ஒரு கிராமத்தைச் சேர்ந்த சுமார் 20இற்கும் மேற்பட்ட திமிங்கில வேட்டையில் கைதேர்ந்தவர்கள் இந்த வேட்டையில் ஈடுபடுவர். திமிங்கிலத்தைவிட சீல் வேட்டையிலும் தனிப்பட்ட முறையிலும், குழு முறையிலும் ஈடுபட்டனர். சீல் வேட்டையாடும்போது, அவர்கள் மிருகங்களின் கூரிய எலும்புகளால் செய்யப்பட்ட ஆயுதத்தால் கடற்பரப்பை மூடியிருக்கும் பனிபாறையில் துவாரம் போடுவர். அப்போது சீல்கள் சுவாசிப்பதற்காக அந்தத் துவாரத்தை நோக்கி வந்ததும் எலும்புகளால் செய்த ஆயுதத்தால் குத்தி மேலே எடுப்பர். அதன்பின் பனிக்கட்டிகளுக்கு மேலால் இலகுவாக அவற்றைத் தங்கள் இருப்பிடங்களுக்கு இழுத்துச் செல்வார்கள். அவர்களின் வளர்ப்பு நாய்களும் வேட்டையின்போது, மோப்பம் பிடிப்பதற்கு உதவியாக இருக்கும். வேட்டையாடும்போது பனிக்குவியலில் நிற்பதால் வேட்டையாடுபவரின் பாதம் விறைத்துப் போகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக சீலின் தோலில் இருந்து ரூலிப் பெண்களால் தைக்கப்பட்ட பாதவணியை வேட்டையாடுபவர் அணிந்திருப்பர். உள்ளே தண்ணீரோ குளிரோ புகாதபடி இந்தப் பாதவணிகள் தயாரிக்கப்பட்டிருக்கும்.

அலஸ்கா போன்ற வடதுருவப் பகுதியில் அக்காலத்து போக்குவரத்து வித்தியாசமாக இருந்தது. பனிக்குளிர் காலத்தில் வடபகுதி எங்கும் பனி உறைந்து இருப்பதால் பனிப்பகுதியில் சறுக்கிச் செல்லும் வண்டிகளையே (Sleds) இவர்கள் பாவித்தனர். இந்த வண்டிகளை நாய்களே கூட்டமாக இழுத்துச் சென்றன. இப்படியான சறுக்கு வண்டிகளை மிதக்கக்கூடிய பாரமற்ற மரங்களைத் தெரிந்தெடுத்து திமிங்கிலங்களின் கடினமான எலும்புகளையும் பாவித்துத் தயாரிப்பர். இந்த வண்டிகளை ஓட்டிச் செல்பவர் அடிப்பகுதியில் அடிக்கடி தண்ணீரை ஊற்றி உறையவைப்பார், அப்படிச் செய்வதால் அடிப்பகுதியில் பனிக்கட்டி உருவாகுவதால், இலகுவில் சறுக்கி நெடும் தூரம் செல்ல முடியும். இத்தகைய வண்டிகளைவிட கடலில் மீன் பிடிக்கச் செல்பவர்கள் படகுகளையும் பாவித்தனர். தனி ஒருவர் பயணிக்கும் படகை ஹாயாக் (kayak) என்று அழைத்தனர். யுமியக் (umiak) என்று சொல்லப்படுகின்ற படகுகள் பலர் செல்லக் கூடியது. இத்தகைய படகுகள் தோலினாலும், திமிங்கிலத்தின் எலும்புகளாலும் செய்யப்பட்டவை. அனேகமானவை சுமார் 10 _ 15 அடி நீளமானதாக இருக்கும். சில படகுகள் பெரிதாக 30அடி நீளமானதாகவும் இருந்தன. பொதுவாக சீல், திமிங்கிலம் போன்றவற்றை வேட்டையாட இந்தப் படகைப் பாவித்தனர். அவற்றின் தோல்களையே படகு செய்யவும் பாவித்தனர். கரிபோவின் வலுவான தசை நாரைத் தோல்களைத் தைப்பதற்காகப் பாவித்தனர். இரண்டு மூன்று வருடங்களுக்குத்தான் இவை தாக்குப் பிடிக்கக் கூடியதாக இருந்தன. கோடைகாலங்களில் இடம் பெயரும்போது, பெண்கள் பயணிக்கவும் இந்தப் படகுகளைப் பாவித்ததால் ‘பெண்கள் படகு’ என்றும் இதை அழைப்பர். 19ஆம் நூற்றாண்டில் அலஸ்கா போன்ற வடபகுதியில் இத்தகைய படகுகளே பாவனையில் இருந்தன. இன்று நவீன படகுகள் பாவனைக்கு வந்து விட்டன.



பனிச்சறுக்கு வண்டி

முதற்குடி மக்களின் போக்குவரத்து முறைகளைப் பார்க்கும்போது ஈழத்தமிழர்களின் ஆதிகாலத்து வாழ்க்கை முறையைப் பற்றியும் சிறிது அறிந்து வைத்திருக்கலாம். இலங்கை நாடு வெப்ப சுவாத்தியத்தைக் கொண்டது என்பதால், ஈழத்தமிழர் வாழ்ந்த பகுதிகளில் கல் வீடுகள் கட்டப்படுமுன் சிறு குடிசைகள்தான் பாவனையில் இருந்தன. கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை இருந்த இடங்களில் அந்தக் குடிசைகள் சற்றுப் பெரிதாக இருந்தன. வைக்கோல் இலை குழைகளால் கூரை வேயப்பட்ட காலத்தின்பின் பனை மரங்களும், தென்னை மரங்களும் நிறையவே இருந்ததால் குடிசைகள் பனை ஓலையால் அல்லது தென்னம் கிடுகுகளால் வேயப்பட்டிருந்தன. கிராமப் பகுதிகளில் தென்னோலைகளை இரண்டாகப் பிளந்து அதை அழகாகப்பின்னி அதில் இருந்து செய்வதைக் கிடுகு என்பர். செம்மண்ணைக் குழைத்து சுற்றிவர வீட்டிற்குத் தேவையான சுவர்களை அமைக்கப் பாவித்தனர். வீட்டைச் சுற்றிப் பாதுகாப்பு எல்லை வேலிகளையும் அமைத்திருந்தனர். இத்தகைய வேலிகளுக்கு கதியால் என்று சொல்லப்படுகின்ற மரங்களை நட்டனர். குறிப்பாக கிளுவை, முள்முருக்கை, பால்முருக்கை, பூவரசு, சீமைக்கிளுவை போன்ற மரங்களை வேலிகளுக்குப் பாவித்தனர். மேலதிக பாதுகாப்புக்காக கிடுகு, பனையோலை, இலந்தைமரக்கிளைகள், பூநாறிக் கிளைகள், பனையோலை மூரிமட்டை போன்றவற்றைப் பாவித்தனர். இத்தகைய வேலிகளைக் கிடுகு வேலி, பனையோலை வேலி, இலந்தைமுள்வேலி, மூரிமட்டை-வேலி என்றெல்லாம் அழைத்தனர்.

முதற்குடி மக்களின் போக்குவரத்து முறைகளை ஆராயும்போது, ஈழத்தமிழர்களின் போக்குவரத்து முறைகளையும் ஓரளவு ஒப்பிட்டுப் பார்க்க முடிகின்றது.



ஒற்றை மாட்டு வண்டி

தைமாதத்தில் வரும் தைப்பொங்கல் தமிழரின் திருநாளாகவும், மறுநாள் பட்டிப் பொங்கல் தினமாகவும் இருக்கின்றது. இதையே மரபுத்திங்கள் என்று கனடிய அரசினர் பிரகடனப்படுத்தி இருக்கின்றனர். பாரம்பரியமாக பட்டிப்பொங்கல் என்றால் உழவர்களுக்கும் ஏனையோருக்கும் உதவிய கால்நடைகளுக்கு நன்றி கூறுவதாகும். இன்று நவீன போக்குவரத்து வசதிகள் குறைந்து போனாலும், தொன்று தொட்டு, அதாவது அரசர்கள் ஆட்சிக் காலத்தில் கூட குதிரைகளும் மாடுகளும், வன்னிப் பகுதிகளில் யானைகளும் போக்குவரத்திற்குப் பாவிக்கப்பட்டன. முதற்குடி மக்கள் பனிப்பிரதேசத்தில் வாழ்ந்ததால் நாய்கள் இழுத்துச் செல்லும் சறுக்கும் வண்டி களைப் போக்குவரத்திற்குப் பாவித்தது போல, ஈழத் தமிழரும் வெப்பப்பிரதேசத்தில் வாழ்ந்ததால், சில்லுகள் பூட்டிய மரத்தால்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

1st & 2nd MORTGAGES... that meets your needs
MORTGAGE ALLIANCE
Mortgage Alliance
1585 Markham Road, Unit 110,
Scarborough, ON. M1B 2W1
Tel 647-350-7050
• Commercial Mortgages.
• Construction Mortgages
• Secured Credit line
• Consolidate 1st, 2nd, 3rd mortgages
SAM SURENDRAN
Mortgage Broker Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca

Corporate Office: Mortgage Alliance, 2005 Sheppard Ave. E. Suite 200, Toronto ON. M2J 5B4 Tel: 1-877-366-3487



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பகுதியில் மாறிவரும் குடும்பக் கட்டமைப்பு

## நாடும் நடப்பும் - 01

- நற்குணலிங்கம் -

குடும்பம் என்பது ஒரு சமூக நிறுவனம். குடும்பமானது பல்வேறு தேவைகளை நிறைவு செய்யும் ஓர் அடிப்படை நிறுவனம். குடும்பம் என்பது இணைந்து வாழும் நிலையைக் குறிக்கும். குடும்பங்கள் அனைத்தும் ஒரே மாதிரியானவை அல்ல. யாழ்ப்பாண பிரதேசத்தில் குடும்பக் கட்டமைப்பு மாறி வருகின்றது. குடும்பக்கூறுகளாக கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம், சிதறிய குடும்பம் என்பன விளங்குகின்றன. பல்வேறு காரணங்கள் கருதி மாறிவரும் குடும்பக்கட்டமைப்பைக் காண முடிகின்றது.

மாறும் குடும்பக் கட்டமைப்பு என்பது ஆரம்பத்தில் பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள், பேரன், பேத்தி போன்றோர் ஒரே வீட்டில் வாழ்ந்தனர். இன்று கட்டமைப்புக் குலைந்து வேறு வேறு இடங்களில் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ வாழும் நிலை தோன்றியுள்ளது. ஆரம்பத்தில் கூட்டுக்குடும்பங்கள் அதிகமாகக் காணப்பட்டன. இவை பல தனிக்குடும்பங்களாகி, தனிக்குடும்பங்கள் பல சிதறிய குடும்பங்களாகத் தற்போது காணப்படுகின்றன. மாறும் குடும்பக் கட்டமைப்பு சமூக, பொருளாதார அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

சமூகத்தில் பெரிய குடும்ப அமைப்புக்கு மதிப்பு குறைவாகவும், சிறிய குடும்ப அமைப்புக்கு மதிப்பு கூடுதலாகவும் உள்ளன. இந்த மனநிலையும் பெரிய குடும்பம் சிறிய குடும்பமாக மாறும் நிலைக்குக் காரணமாக அமைகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் குறைந்த வயதிலேயே பிள்ளைகள் பல்வேறு காரணங்கள் கருதி வேறு இடங்களுக்குச் செல்வதால் குடும்பத்தின் மூலம் சமூகத்தில் வாழும் பயிற்சியை ஆணோ, பெண்ணோ பெறும் நிலை அற்றுப் போகின்றது. இவை சமூக சீரழிவுக்கு அவர்களை இட்டுச் செல்கிறது. கட்டிளமைப் பருவத்தில் உள்ளோர் பெற்றோரைவிட்டு விலகிச் செல்வதால் பெற்றோர்களை விட நண்பர்கள்தான் முக்கிய இடம் வகிப்பர். தீர்மானம் எடுப்பதில் அவர்கள்தான் முக்கிய பங்கு வகிப்பர். அவர்கள் சொல்லே இனிக்கும். அவ் நட்பு கூடா நட்பாக அமைவதுதான் அதிகம். அவ்வாறாயின் நட்பு அவர்களை சேதப்படுத்தி வாழ்க்கையின் போக்கையே மாற்றியமைத்துவிடுகின்றது.




குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரமே பிள்ளைகள் பெற்றோருடன் வாழ்கின்றனர். உயர்கல்வி, வேலை வாய்ப்பு, நாட்டுப் பிரச்சினை போன்ற காரணிகளால் பெற்றோரைப் பிரிந்து வேறு இடங்களுக்கோ அல்லது நாடுகளுக்கோ செல்கின்றனர். வீட்டில் தந்தை, தாய் மட்டுமே வாழ்கின்றனர். தந்தை வேறு மாவட்டத்துக்கு வேலை நிமித்தம் செல்வதால் அச்சந்தர்ப்பத்தில் தாய் மட்டும் தனிமை நிலையில் காணப்படுவார். இந்த நிலையில் எமது பிரதேசம் சிதறிய குடும்பங்களைக் கொண்டதாகவே காட்சியளிக்கின்றது.

ஆரம்பத்தில் மீள் புதுப்பிக்கப்பட்ட குடும்பங்கள் குறைவாகவே காணப்பட்டன. கணவனை இழந்த பெண்களும் மனைவியை இழந்த ஆண்களும் தனியாகவே வாழ்ந்தனர். கூட்டுக் குடும்பம் காரணமாக அவர்கள் தமது நிலையை மறந்து ஏனைய அங்கத்தவர்களுடன் இணைந்து வாழ்கின்றனர். கூட்டுக் குடும்ப நிலை மறைந்து செல்ல பல்வேறு தேவைகள் கருதி மீள் திருமணம் நடந்தேறுகின்றன. அத்துடன் விவாகாரத்துக்கள் மூலம் அதிகமான குடும்பங்கள் குலைந்து தனித்து வாழும் நிலை காணப்பட்டது. இன்று இந்த நிலை இல்லையென்றும் கூறமுடியாது. விவாகரத்தால் சார்ந்து வாழும் நிலையிலும் சமூகத்தில் உரிய இடம் வழங்கப்படாத நிலையிலும் வாழ்ந்தவர்கள் தற்போது மறுமணத்துக்கு உட்பட்டு குடும்ப அமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

தனிக்குடும்பம் சிதறிய குடும்பம் ஆகிய நிலை குடும்பத்தில் தோற்றம் பெறுவது பாதகமான விளைவுகளையே அதிகம் தோற்றுவிக்கின்றன. தனிக்குடும்ப அமைப்பில் வயதுக்கு மூத்தோர் காணப்படும் நிலை குறைவு. எனவே அவர்களது வழிகாட்டல்கள் ஆலோசனைகள் கிடைக்காத சந்தர்ப்பங்கள் அதிகமாகி பாதக விளைவுகளை குடும்பம் எதிர்நோக்குகின்றன. குடும்பம் சிதறி வாழும்போது வயது வந்தோரின் நிலை பரிதாபத்துக்கு உரியதாக மாறுகிறது. முதியோர் கைவிடப்படும் நிலையே தோற்றம் பெறுகிறது.

ஆரம்பத்தில் உறவினர்கள் சூழ குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. தற்போது அயலில் உறவினர்கள் மிகக்குறைவு. அதாவது அயலில் ஆழமான பின்புலம் இல்லை. வர்க்க உணர்வுடனான உறவே அயலவர்களுடன் பெரும்பாலும் காணப்படுகின்றன. இதுமட்டுமல்ல குடும்பங்களிலும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதன் விளைவாக உறவுகளும் குறைவடைந்து செயலாற்றலும் குறைவடைந்துள்ளது. ஓர் உதவிக்குக்கூட ஆளில்லா நிலை ஏற்பட்டுள்ளது.

சிதறி வாழ்தல் என்பது ஒரு புதிய கட்டமாகவே உள்ளது. இது மனதுக்கு வேதனை தருவதாகவே உள்ளது. பிரிந்திருப்பவர்களது எண்ணம் மனதில் ஏக்கத்தை ஏற்படுத்தி மன அழுத்தம், மனக் குழைவு, மனஇறுக்கம் என்பவற்றுக்கு உட்படுகின்றனர். அத்துடன் கூட்டுக்குடும்ப முறை இல்லாது போவதாலும் பாதிப்பே நிகழ்கிறது. இத்தன்மை இல்லாது போவதால் விவசாயம் செய்வோரின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றது. பிரதான காரணம் ஒத்துழைப்பு வழங்க குடும்ப உறுப்பினர்கள் போதியளவு இன்மையே ஆகும். விவசாயத்தொழிலில் கூலி கொடுத்து வேலை செய்விப்பதால் இலாபம் மிகவும் குழறவாகவே உள்ளது. இதனால் விவசாயம் செய்வோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து செல்கின்றது. எனவே குடும்பக் கட்டமைப்பில் குடும்ப உறுப்பினர்கள் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். ஆரோக்கியமான குடும்ப கட்டமைப்பே மகிழ்வான வாழ்வுக்கு வழியமைக்கும்.

## பொங்கல் வாழ்த்து

போகி வருது, போகியோடு
போகட்டும் துன்பமெல்லாம்
பொங்கல் வருது பொங்கலோடு
பொங்கட்டும் இன்பமெல்லாம்

தமிழருக்குத் திருநாள் - இது
தரணி போற்றும் பெருநாள்

உழவருக்குத் திருநாள் - இது
உவகையூட்டும் பெருநாள்

ஆடியிலே விதை விதைச்சி
தைமாதம் கதிரறுத்து

வெய்யில், மழை இரண்டாலும்
விவசாயத்திற்குதவிய

ஆதவனுக்கு நன்றி சொல்ல
வயக்காட்டில் பொங்கலிட்டு

மாடுகளுக்கு நன்றி சொல்ல
மாட்டுப்பொங்கல் கொண்டாடி

உறவுகளோடு உறவாட
காணும்பொங்கல் கொண்டாடி

கரிநாளில் கறிவிருந்து உண்டு
களிக்கின்ற பண்டிகை.

துள்ளிக்கிட்டு ஓடிவரும்
ஜல்லிக்கட்டுக் காளைகளை
மல்லுக்கட்டி தானடக்கி
அள்ளிக்கொள்வார் பரிசுகளை.

மாட்டுப்பொங்கலன்று
மாற்றுக் குறையாத
உலகப்பொதுமறையாம்
உத்தமத் திருக்குறளை
உலகிற்கு அருளிய
புலவர் திருவள்ளுவரை
போற்றிப் புகழ்பாடும்
திருவள்ளுவர் தினம் கொண்டாடி



தமிழுக்குப் பெருமை சேர்க்கும்
தமிழ் கூறும் நல்லுலகம்
அரும்பசி தீர்க்கின்ற
விவசாய மக்களுக்கும்,
அறிவுப் பசி தீர்க்கின்ற
அன்னைத் தமிழுக்கும்,
ஒருசேர நன்றி சொல்லும்
திருநாள்தான் பொங்கலன்றோ.

உழைப்பின் பெருமையும்
நன்றிகாட்டும் நற்பண்பும்
விருந்தோம்பும் நற்செயலும்
வீரத்தின் பெருமாண்பும்
தமிழனின் உயர்வென்று
தரணிக்கு எடுத்துக்காட்டும்
பன்முகத் திருவிழாவாம்
பொங்கல்தன்னைப் போற்றுவோம்.

வாழ்க தமிழ், வாழ்க தமிழகம்
வாழ்க உழவர், வாழ்க வையகம்.

- சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம் -

விளம்பரம்
VLAMBARAM
Canyon Press Inc.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர்களாகும் சமூக ஆர்வலர்கள்!

**- கண்ணன் -**

தமிழகத்தில் திரைத்துறையினர் அரசியலுக்கு வருவது விமர்சனங்களை சந்தித்து வருவது ஒருபக்கம் என்றால், அந்த விமர்சனங்களை முன்வைத்த சமூக அரசியல் செயற்பாட்டாளர்களே இப்போது திரைத்துறைக்கு நடிக்க செல்வது ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. பியூஸ் மனுஷ் போன்றவர்கள் ஏ.ஆர். முருகதாஸின் 'சர்கார்' படத்தில் தோன்றியதைத் தொடர்ந்து, தற்போது ராஜு முருகன் இயக்கிவரும் 'ஜிப்ஸி' திரைப்படத்தில் திருமுருகன் காந்தி, நல்ல கண்ணு, பாலபாரதி, வளர்மத், பியூஸ் மனுஷ் உட்பட பலர் நடித்துள்ளனர். அவர்களிடம் பேசினோம்.

திருமுருகன் காந்தி, தலைவர், மே 17 இயக்கம்: இயக்குநர் ராஜு முருகன் மீதான நம்பிக்கையால்தான் 'ஜிப்ஸி' திரைப் படத்தில் நடிக்க சம்மதித்தேன். ராஜு முருகன் சமூக மாற்றத்திற்கான இயக்குநர். வியா பார ரீதியான இயக்குநர் கிடையாது. நான் தோன்றுவது அவரது கருத்துக்கு வலிமை சேர்க்கும் என்பதால், இதற்கு சம்மதித்தது வந்தேன். அரசு எங்களைச் சமூக விரோதி என்று சொல்கிறது. ஆனால், சமூக அங்கீகாரம் இல்லாத ஆளைத் திரைப்படத்தில் வைக்க முடியாதே? நாங்கள் சமூக விரோதிகளா? இல்லையா என்பது திரைப்படம் மூலம் அம்பலமாகும். அரசு தான் தோற்றுப் போகப் போகிறது.

பாலபாரதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்: 'ஜிப்ஸி' படத்தில் கருத்துரிமையை பாதுகாப்பதை வலியுறுத்தி 'வெரி; வெரி பேட்' என்ற ஒரு பாடல் இடம் பெறுகிறது.



அப்பாடலில் சில காட்சிகளில் தான் நாங்கள் வருகிறோம்.

திரைப்பட நடிகர்கள் அரசியலுக்கு வருவதை நாங்கள் எதிர்க்கவில்லை. அப்படி வருபவர்கள் மக்கள் பிரச்சினைகளுக்காக வரவேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. ஸ்டெர்லைட், எட்டு வழிச் சாலை என தமிழகம் பல போராட்டங்களை தினமும் சந்தித்து கொண்டிருக்கிறது. இந்த போராட்டங்களுக்கு எந்த நடிகர்களாவது வந்தாரா?

அதிகாரத்தைப் பிடிக்கும் ஆசையிலேயே நடிகர்கள் அரசியலுக்கு வருகிறார்கள். திரைப்படத்திலிருந்துநேராகக் கோட்டைக்கு சென்றுவிடலாம் என்று நினைக்கிறார்கள். அது இனிக் கூடாது என்றுதான் சொல்கிறோம். மக்கள் பிரச்சினைகளில் களம் கண்டு, போராட்டங்களில் கலந்த பிறகு அரசியலுக்கு வரட்டும். அதன்பிறகு, நாங்கள் வரவேற்கிறோம். இப்போது தமிழக அரசியலில் என்ன நடக்கிறது. நடிகர்கள் அறிக்கை விடுவதோடு முடித்துக்கொள்கிறார்கள்.

எங்களைப் போன்ற சமூக செயற்பாட்டாளர்கள் நடிப்பை ஒரு தொழிலாகப் பார்த்து வருவதில்லை. திரைப்படம் ஒரு பெரிய ஊடகம். போராட்டங்கள் மாதிரி, அதுவும் ஒரு பங்கேற்பு மேடை என்பதாலேயே சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்கின்றனர். எப்போதும், சமூக ஆர்வலர்கள் மக்களோடு மக்களாகத்தான் இருக்கின்றனர்.

வளர்மதி, சமூக செயற்பாட்டாளர்: தமிழகத்தில் முன்பெல்லாம் நடிகர்கள் மட்டும் தான் நாயகனாக தெரிந்தனர். ஆனால், இப்போதுள்ள இளம் தலை முறையினருக்கு சமூக ஆர்வலர்கள்தான் நாயகனாகக் தெரிகிறார்கள். இதனால், திரைப்பட இயக்குநர்கள் சமூக ஆர்வலர்களை தங்கள் படங்களில் நடிக்க வைக்க ஆர்வம் காட்டுகின்றனர்.

சமூக ஆர்வலர்கள் நடிப்புக்கு செல்வதில் எனக்கு உடன்பாடில்லை. ஆனால், மக்களுக்கான படங்களை எடுத்த இயக்குநரா? மக்கள் மத்தியில் இயக்குநருக்கான ஆதரவு எப்படி? என்பதைப் பார்த்து நடிக்கலாம் என நினைக்கிறேன். ராஜு முருகனின் 'ஜோக்கர்' மக்களுக்கான படம்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)


JOBS! JOBS! JOBS!

TEMP EMPLOYMENT AGENCY



- General Labor
- Packers
- Machine operator
- Forklift operator

NOW HIRING

Tel: 416-292-2929 Fax: 416-292-9857 OR

Email: tempemployagency@gmail.com

80 Nashdene Rd. Building - D Unit 89 Scarborough ON. M1V 5E4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TBC Toronto Business College

You May Be Eligible For A
GOVERNMENT GRANT OF $28000
FOR STUDYING & LIVING
(unemployment or maternity)
திருப்பிச் செலுத்தத் தேவையில்லை



Second Career candidates & International Students Welcome

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities
STARTS JAN. 7TH, 2019

EARLY CHILDCARE ASSISTANT (ECA)
40 Weeks Diploma
Accredited by the National Association of Career Colleges
Immediate Job Opportunities
STARTS JAN. 7TH, 2019

PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Immediate Job Opportunities
Accredited by the National Association of Career Colleges
STARTS JAN. 7TH, 2019

PERSONAL SUPPORT WORKER (WEEK END)
38 Weeks Certificate
Immediate Job Opportunities

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities
STARTS JAN. 7TH, 2019

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma

PART TIME COURSES
WINDOWS 2010, WORD 2016, EXCEL 2016
POWER POINT 2016, ACCESS 2016
QUICK BOOKS 2017
SAGE 50 ACCOUNTING 2017
SAGE 300 2017, AUTO CAD
FIRST AID & CPR
FOOD HANDLER CERTIFICATION

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Placement Assistance
- Ample Free Parking

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
(Sheppard & Brimley) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# தேர்தல்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அல்பேட்டா, குவிபெக், பிரிட்டிஸ் கொலம்பியா ஆகிய மாகாணங்களில் ஏற்கனவே மாகாண அரசுகள் இவ்வாறான காபன் வரித்திட்டத்தை அமலாக்கியுள்ளன. எனவே இம்மாகாணங்களுக்கு கனேடிய மத்திய அரசின் காபன் வரிவிதிப்பு அமலாக்கப் படமாட்டாது.




பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணம் 2008ஆம் ஆண்டில் இருந்தே ஒரு Tonnes காபன் வெளியேற்றத்திற்கு $10 வீதம் அறவிடத் தொடங்கியது. இவ்வரி கிரமமான அதிகரிப்பின் பின்னர் 2019 ஏப்பிரலில் ஒரு Tonnes காபன் வெளியேற்றத்திற்கு $40 ஆகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் 2012ஆம் ஆண்டில் காபன்வரி ஒரு Tonnesஇற்கு $30ஆக இருந்தபோது பெற்றோலின் விலை லீற்றர் 6.7 சதத்தாலும் டீசலின் விலை லீற்றர் 7.7 சதத்தாலும் அதிகரிக்கப்பட்டது. பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் காபன் வரி விதிப்பால் ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்தி செய்ய மாகாண அரசு நிறுவன வரியில் (Corporate Taxes) குறைப்புச்செய்தது.

2019ஆம் ஆண்டில் இருந்து அமலுக்கு வரும் கனேடிய மத்திய அரசின் காபன் வெளியேற்றத்திற்கு விதிக்கப்பட்ட வரி ஏற்கனவே மாகாண அரசுகளால் காபன் வரித்திட்டம் அமலாக்கப்படாத மாகாணங்களான: ஒன்ராரியோ, மனிற்ரோபா, சஸ்கச்சுவான் மற்றும் நியூ பிரவுண்ஸ்விக்கில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மத்திய அரசின் இக்காபன் வெளியேற்றத்திற்கு விதிக்கப்பட்ட வரி 2019ஆம் ஆண்டில் அமலுக்கு வந்ததும் அதனால் பொதுமக்கள் பாதிப்படைவதைத் தவிர்க்கும் முகமாக அரசு அவர்களுக்கு வருமான வரியில் கழிவு தர முடிவெடுத்துள்ளது.

கனேடிய லிபரல் அரசின் தகவல்களின்படி சுற்றுப்புறச்சூழலை மாசுபடுத்தும் நிறுவனங்களில் இருந்து அறவிடப்படும் காபன் வரியில் 90% மக்களுக்கு வருமான வரிவிலக்காகக் கொடுக்கப்படும். இந்த வருமான வரி விலக்கின் பிரதிபலனை கனேடியர் 2018ஆம் ஆண்டு வருமானவரிக் கொடுப்பனவுகளை சமர்ப்பிக்கும் போதே பெறத் தொடங்கிவிடுவர்.

மத்திய அரசின் கணிப்புகளின்படி இப்புதிய காபன்வரியால் ஒவ்வொரு குடும்பமும் வருடம் ஒன்றுக்கு மேலதிகமாக நியூ பிரவுண்ஸ்விக்கில் $202உம், மனிற்ரோபாவில் $232உம், ஒன்ராரியோவில் $244 உம் மற்றும் சஸ்கச்சுவானில் $403உம் செலவிடுவர். இதனால் இம்மாகாணங்களில் வாழும் குடும்பங்கள் தமது வருமான வரியில் கழிவாக நியூபிரவுண்ஸ்விக்கில் $248உம், மனிற்ரோபாவில் $336உம், ஒன்ராரியோவில் $300உம் மற்றும் சஸ்கச்சுவானில் $598உம் பெறுவர்.

கல்கரி பல்கலைக்கழகத்தில் சுற்றுப்புறச்சூழல் தொடர்பான கல்விக்கு நிர்வாக முகாமையாளராக இருக்கும் Jennifer Winter ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், தங்களது செலவினக்கணிப்பீடுகள் அரசு வெளியிட்டத்தை விட சற்று அதிகமாக இருந்தாலும் அரசின் வருமான வரிக் கழிவால் ஒரு குடும்பம் சேமிக்கும் அளவை விட குறைவாகவே அவர்களுக்கு செலவு அதிகரிப்பு இருக்கும் என்றார். காபன் வரியில் பெறப்பட்ட பணத்தின் மிகுதி 10% பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற ஏனைய வரியால் பாதிக்கப்பட்ட சிறு நிறுவனங்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படும்.

Andrew Scheer ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில் லிபரல் அரசு இவ்வாறு அதிகூடிய காபன் வரியை பெரிய தொழிற்சாலைகளுக்கு விதிப்பதால் அவர்கள் கனடாவில் தமது தொழிற்சாலைகளை மூடிவிட்டு சுற்றுப்புறச்சூழல் தொடர்பாக இறுக்கமான கட்டுப்பாடுகள் இல்லாத சீனா போன்ற மற்ற நாடுகளில் தமது தொழிற்சாலையைத் திறப்பர். இதனால் உலகளாவிய ரீதியில் மாசு வெளியேற்றத்தில் எவ்வித முன்னேற்றமும் அடையப்பட மாட்டாது. ஆனால் நாங்கள் வேலை வாய்ப்புக்களை இழந்தது தான் முடிவு என்றார்.

கனேடிய சுற்றுப்புறச்சூழல் நிறுவனத்தின் தலைவரான Chris Ragan ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் இவ்வாறு காபன் வெளியேற்றத்திற்கு விலை விதித்த ஐரோப்பிய ஒன்றியம், கலிபோர்ணியா மாநிலம், மற்றும் சுவீடன் போன்ற இடங்களில் இருந்து தொழிற்சாலைகள் வெளியேறியதாக உலக வங்கியின் அறிக்கை தெரிவிக்கவில்லை என்றார். மாறாக இவ்விடங்களில் மாசு அற்ற புதிய தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டு தொழிற்சாலைகள் தமது உற்பத்திகளை ஏனையோருடன் போட்டிபோட்டு விற்கக்கூடிய முறையில் தயாரிக்கத் தொடங்கி விட்டன என்றார்.




கனேடிய தற்போதைய அரசு காபன் வரித்திட்டத்தையும் மற்றும் பொதுமக்களுக்கான வருமான வரிக்குறைப்புத்திட்டத்தையும் வெளியிட்டபின்னர் Angus Reid நிறுவனம் ஒரு நாடுதழுவிய கருத்துக் கணிப்பை நடத்தியிருந்தது. அதில் கனேடியர் சுற்றுப்புறச்சூழல் மற்றும் மாசுக்கட்டுப்பாடு தொடர்பான திட்டங்களில் மாகாண அரசுகளை 37%உம், மத்திய அரசை 45%உம், ஊடகங்களை 47%உம், ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச நிறுவனங்களை 56%உம், சுற்றுப்புறச்சூழல் தொடர்பான நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகளை 80%உம் நம்புகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் நடை பாதையில் விழுந்து காயமுற்றால் எவர் பொறுப்பு?

## கனடிய தகவல் தொடர் 299



சிவ. பஞ்சலிங்கம், B.Com,
(Licensed Insurance Broker)
416.321.0999

நகரசபைக்கு சொந்தமான இடங்களில் ஏற்படும் பாதிப்புகள், காயங்களுக்கு நகரசபை பொறுப்பு. ஆனால் நடந்த பாதிப்பில் நகரசபையின் கவனக்குறைபாடுகள் அசட்டையீனங்கள் காரணமாக இருந்தன என்பது ஆதார பூர்வமாக நிரூபிக்கப்படல் வேண்டும். அதேபோல் தனியாருக்கு சொந்தமான இடங்களில் மூன்றாவது நபர் எவராவது ஏதாவது வழியில் உடல் பாதிப்பு, காயங்களுக்கு உட்பட்டால் அந்த இடத்தின் சொந்தக்காரர் பொறுப்பு. அவரது சொத்துக் காப்புறுதி தமது சட்டவரையறையினுள் நின்று இதனை கையாளும்.

நட்டஈடுகோரல் என்பது சட்டவிதிகளை அனுசரித்து பாதிப்புக்களின் காரணகாரிய தொடர்புகளுடன் நியாயமாக நிரூபிக்கும் போதே சாத்தியமாகும். ஏனெனில் இப்படியான நட்டஈடுகள் எல்லா சந்தர்பத்திலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சாத்தியமாக அமையமாட்டாது.

கனடாவின் ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளிவந்த ஒரு கேள்வியுடன் எங்கள் தகவலுக்கு வருவோம்.

**கனடாவில் வீடுகளுக்கு முன்பாக உள்ள நடைபாதையில் பனிக் கட்டிகள் துப்பரவாக்காத நிலையில் எவராவது விழுந்து உடல் காயமடைந்தால் அந்த நிலைக்கு வீட்டு உரிமையாளர் பொறுப்பு ஆகின்றரா?**

இவ்வினாவுக்குரிய விடைக்கு வருவதற்கு முன்பு 'ரொறன்ரோ' நகரசபையின் ஒரு சட்டப்பிரிவினை இங்கு முதலில் பார்ப்போம்.



ஒருவர், தனது வீட்டிற்கு முன்பு உள்ள நடைபாதையில் இருக்கும் பனிக்கட்டிகளை அவை கொட்டி முடித்து 12 மணித்தியாலத்தினுள் துப்பரவாக்காமல் விட்டால் நகரசபை $125 தண்டனைப் பணம் செலுத்துமாறு அறவிடும். எவராவது, அயலவர்கள் துப்பரவாக்காது விட்டால், நகரசபையின் 311 என்ற இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (Municipal code by law chapter 719). இதே சட்டவிதி கனடாவின் அனேகமான நகரசபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இப்படியான தவறுக்கு பலரும் கனடாவில் நகரசபைகளின் தண்டனைக்கு ஆளாகியிருப்பர்.

**நகரசபை எல்லைக்குள் இருக்கும் நடைபாதையில் எவராவது சறுக்கி விழுந்து உடல் காயமுற்றால் அதற்கு யார் பொறுப்பு? வீட்டு உரிமையாளரா? அல்லது நகரசபையா?**

மேற்குறிப்பிட்ட கேள்விக்கு விடையாக ரொறன்ரோ நகரின் பிரபல சட்டத்தரணி திரு. போப் ஆரூண் (Mr. Bob Aaron) என்பவர் பின்வரும் இரு தலைப்புகளில் கனடாவின் உயர் நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பினை அடிப்படையாக வைத்து இரு வெவ்வேறு வகையான ஆய்வுக் கட்டுரையினை 'ரொறன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் வெளியிட்டிருந்தார்.

நடைபாதையின் இடையூறுக்கு வீட்டு உரிமையாளர் பொறுப்பல்ல (Home owners not liable for sidewalk mishaps) என்ற கட்டுரை 2000 டிசம்பர் 14இல் பிரசுரிக்கப்பட்டது. இன்னொருவரின் காணிக்குள் தவறி விழுந்தால் எவர் இழப்பீடு வழங்குவார் (Who pays you slip and fall on someone else's property' 2018 ஜனவரி 20இல் பிரிசுரிக்கப்பட்டது. பின்வரும் கனடிய நீதிமன்றத்தின் தீர்ப்பினை அடிப்படையாக வைத்தே இவ் இரு ஆய்வுக் கட்டுரைகளும் வெளியாகியிருந்தன.

பற்ரேர்சன் எதிர் வின்ஸர் (Paterson Vs Windsor என்னும் வழக்கின் தீர்ப்பு கடந்த 2005 டிசம்பர் 13 இல் வெளியாகியிருந்தது. 'வோர்ன்' (Vaughan) நகரில் உள்ள வீட்டின் முன்பு துப்பரவாக்கப்படாத பனிக் கட்டிகள் காரணமாக நடைபாதையில் விழுந்து உடல் காயமுற்ற பற்ரேர்சன் அந்த வீட்டு உரிமையாளருக்கு எதிராக நட்டஈடு கோரி வழக்குத் தொடர்ந்திருந்தார். அந்த வழக்கின் தீர்ப்பில் நடைபாதை என்பது நகரசபையின் எல்லைக்குள் இருப்பதால், அச்சம்பவத்தில் நகரசபை பொறுப்புக்கு உள்ளாகின்றது என்பது மட்டுமே பரிசீலனை செய்யப்பட்டது. வீட்டு உரிமையாளருக்கு இதில் எதுவிதமான பொறுப்பும் இல்லை எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் இவ்வாறான சந்தர்ப்பத்திலும் உரிமையாளர் இரு இடங்களில் பொறுப்பாகின்றார்.

1. சில்லறை கடைகள், வர்த்தகம் நடக்கும் இடமாக இருந்தால் அங்கு வரும் வாடிக்கையாளர்கள் அதனை உபயோகப்படுத்துவதால் அந்த நிலையில் அவர் பொறுப்பு ஆகின்றார்.

2. வீடுகளிலிருந்து பெருக்கெடுத்து ஓடும் நீர் அந்த இடத்தில் நடைபாதையில் உறையும் நிலையினை உருவாக்கி, அங்கு விழுந்து உடல் காயமுற்றால் வீட்டு உரிமையாளர் பொறுப்பு ஆகின்றார்.

இங்கு புரிந்துகொள்ள வேண்டிய முடிவு.

- நகரசபைக்கு சொந்தமான நடைபாதையில் கொட்டிய பனிக்கட்டிகளை துப்பரவாக்காமல் விட்டால் நகரசபையின் தண்டனை ரிக்கற் கிடைக்கும்.

- எவராவது தவறி விழுந்து உடல் காயமுற்றால் நட்டஈடு வழங்கும் பொறுப்பு உரிமையாளருக்கு கிடையாது.

**ஹிறின்ஸ் எதிர் ரொறன்ரோ நகரசபை** (Crinsion vs Toronto City) என்னும் வழக்கு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டு, இறுதியில் பாதிக்கப்பட்டவருக்கு அப்பீல் நீதிமன்றத்தில் $288,000 நட்டஈடு வழங்க வேண்டும் என 2010ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

2004 பெப்ரவரி 04ஆம் திகதி இரவு நடந்த சம்பவம் இதுவாகும். திரு.ஜோன் டிரெக் ஹிறின்சன் (Mr. John Derek Crinsion) என்பவருக்கு ரொறன்ரோ நகரின் Dundans/Dufferin பகுதியில் நகரசபைக்கு சொந்தமான துப்பரவு செய்யப்படாத நடைபாதையில் விழுந்து காயமடைந்து தொடர்ந்து ஐந்து நாட்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

2004 பெப்ரவரி 03இல் இருந்து மறுநாள் இரவுவரை கொட்டிய சிறு பனித்துகள்கள் (Ice Pellets) யாவும் உருகும் நிலைக்கு மாறி சறுக்கி விழுத்தும் நிலையினை உருவாக்கியது. நகரசபை இதைக் கரைக்கும் உப்பு தூவுவதற்கு காலதாமதம் எடுத்தது என நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது. அத்துடன் சுமார் 34 மணித்தியாலங்கள் காலதாமதமாகியே அந்த இடம் துப்பரவு செய்யப்பட்டது என்பதும் நகரசபையின் கால வரையறை சட்ட வரம்பினை மீறப்பட்டது என்பதும் நீதிமன்றில் நிரூபிக்கப்பட்டது.

சுமார் ஆறு வருடங்கள் கழித்து, பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்க வேண்டியது ரொறன்ரோ நகரசபையின் பொறுப்பு என அப்பீல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆதாரம் - Global News, March 06, 2014.

தனியார் உடமைகள் என்ற நிலைக்கு அப்பால், பனிக்கட்டியில் சறுக்கி விழுந்து உடல் காயமுற்றவர்கள் நகரசபையிடம் நட்டஈடு கோரும்போது பிரிவு 44(9) ரொறன்ரோ நகரசபைச்சட்டம் (Sec.44 (9) of the Municipality act) என்பதன்படி பின்வரும் நிபந்தனைகளை பின்பற்ற வேண்டும்.

- காயமடைந்து பத்து நாட்களுக்குள் நகரசபை நிர்வாகத்திற்கு (City Clerk) அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டும். (காலதாமதமானால் ஏற்றுக்கொள்ள வேண்டிய காரணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்)

- இரு வருடத்தினுள் சட்டரீதியான நடவடிக்கைகளை நகரசபைக்கு எதிராக எடுக்கப்படல் வேண்டும்.

- உடல் காயம், பாதிப்புகள் என்பது வாழ்வின் அன்றாட செயல்பாடுகளை முன் எடுக்க முடியாது என்பது மருத்துவ ஆதாரங்களுடன் நிரூபிக்கவேண்டும்.

- சறுக்கி விழுந்த இடத்தினை துப்பரவாக்குவதில் நகரசபை காலதாமதமானது என்பதும் நிரூபிக்கப்படல் வேண்டும்.

TUTORING
Math / Science / English
Over 8 years of Experience (M.Sc., Mathematics)
*Discounted rates for
Grades 1 to 6: $55/month.
*Grade 9:MPM-1D *Grade 10:MPM-2D
*Grade 11:MCR-3u(Functions)
*Grade 12:MHF-4U(Advanced Functions)
*Grade 12:MCV-4U(Calculus and Vectors)
University Courses:Calculus 1,2 &3 and Linear Algebra
* Learn from a person who holds masters degree in Mathematics(M.Sc,Maths)
* Limited students per session
University Courses for: York,Rayerson,UOFT,UOIT Waterloo and McMaster
University Calculus and Linear Algebra
Call today to find out more!
Δ Grade 1-8: Math/Science/English
Δ Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
Δ Principles of Mathematics. Δ Calculus. Δ Vectors.
Δ Functions. Δ Advanced Functions.
Δ University: Calculus-1, Calculus-2, Calculus -3
PARAM JYOTHI ACADEMY
7393 Markham Road . Door #90
647.426.6329



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல் நீக்கும் இயற்கை - 41



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!.

கலாநிதி பால சிவகடாட்சம் அவர்களின் 'தமிழர் மருத்துவம் அன்றும் இன்றும்' என்ற நூலில் நெஞ்சு நோ, இருமல் ஏற்படும்பொழுது பசுப்பால், மிளகு, தூது வளை போட்டு புழுங்கலரிசிக் கஞ்சி உப்பில்லாது காய்ச்சி இறக்கும்பொழுது சீனியும், நெய்யும் சேர்த்துக் குடித்தால் பலன் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

மூட்டு வாதம் உள்ளவர்கள் மீன் எண்ணெய்க் குளிசைகள் அல்லது மக்கறெல் (Mackeral), சமன் (Salmon) போன்ற மீன்களைச் சாப்பிடுதல், விட்டமின் சீ அல்லது தோடம்பழம், முழுநெல்லி ஆகிய வற்றைச் சாப்பிடுதல் மூலம் பலன் பெறலாம் என்றும் அந்த நூலில் கூறப் பட்டுள்ளது. மேலும் மூட்டுவாதம் உள்ள வர்கள் கத்தரிக்காய், தக்காளி, உருளைக் கிழங்கு, கறிமிளகாய், மிளகாய் ஆகிய வற்றையும், எண்ணெய்ச் சாப்பாட்டையும் குறைத்துச் சாப்பிட வேண்டும் என்றும் இந்த நூலில் கூறப்பட்டுள்ளது.

மூட்டுவாதத்தால் ஏற்படும் வலியைக் குறைக்க கரட்சாறு, கோவாச்சாறு ஆகிய வற்றை மட்டும் அருந்தி, உண்ணாது இருந்து வருவது நல்லது என்றும் இந் நூலில் கூறப்பட்டுள்ளது. நோ குறைக்கும் எண்ணெய்களும், குளிர், சூடு ஒத்தணங் களும் வலியைக் குறைக்கப் பெரிதும் உதவும் வீட்டுச் சிகிச்சை முறைகளாகும்.

சமிபாட்டுச் சிக்கல், வாயுக் கோளாறு உள்ளவர்கள் பாலுக்குப் பதிலாக தயிரைச் சாப்பிடுவது நல்லது. மேலும் பால் மூலம் கிடைக்கும் கல்சியத்தைப் பெறுவதற்கு பசளி, புறோகோலி, முட்டைகள் உள்ள சாடின் மீன் ஆகியவற்றைச் சாப்பிடலாம். போஞ்சி, பயறு, உளுந்து, கடலை, கோவா, புறோ-கோலி, கோலிபுளோவர், வெங்காயம், முள்ளங்கி, வாழைப்பழம், போன்றவற்றில் வாயுத்தன்மை இருப்பதால் அதிகமாக உண்ணக் கூடாது.

இஞ்சித்துண்டு ஒன்றை சிறிதளவு உப்புடன் சேர்த்துச் சாப்பாட்டுக்கு ஐந்து நிமிடத்திற்கு முன்னதாக வாயில் வைத்து சுவைத்தல், ஒரு தேக்கரண்டி இஞ்சிச்சாறு, சமவளவு எலுமிச்சம்பழச்சாறு, சிறிதளவு உப்பும் சேர்த்து நாளொன்றுக்கு இரண்டு தடவை சாப்பாட்டுக்குப் பின்பு குடித்தல், ஓமத்தூள் ஒரு தேக்கரண்டி எடுத்து வெந்நீருடன் இரண்டு தடவை சாப்பாட்டுக்குப் பின்பு அருந்துதல், ஒரு நாளில் இரண்டு தடவை வெந்தயம் ஒரு தேக்கரண்டி வாயில் போட்டு நீரைக்குடித்து விழுங்குதல் போன்ற வழிமுறைகள் வயிற்றுப் பொருமலுக்கு நிவாரணம் கொடுக்கும் என்பதாக இந்த நூலில் கூறப்பட்டுள்ளது.

சமிபாட்டுக் குறைபாடு உள்ளவர்கள் நற்சீரகத்தை இலேசாக வறுத்து இடித்துத் தூளாக்கி ஒரு தேக்கரண்டி நீருடன் அருந்தலாம். இப்பொழுது சித்த மருத்துவர் டாக்டர் அருண் சின்னையா அவர்கள் 'ஆரோக்கியம் அருளும் சித்த மருத்துவக் குறிப்புக்கள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ள சில விடயங்களை அறிந்து வைத்துக் கொள்வோம்.

மூக்கில் சளி, அடைப்பு ஏற்படும்பொழுது சிறிது மிளகுத்தூளினைத் தேனுடன் சேர்த்து நெல்லிக்காய்ச் சாற்றுடன் கலந்து சாப்பிட நிவாரணம் கிடைக்கும்.

நகத்தில் ஏற்படும் காயங்களுக்கு மஞ்சள் தூளும், கற்பூரமும் கலந்து சிறிது நல்லெண்ணெய் விட்டுக் கொதிக்கச் செய்து காயப்பட்ட இடங்களுக்குத் தடவிவர நகக்காயம் குணமாகும்.

கோதுமையைப் பொன்னிறமாக வறுத்த பின்பு இடித்து மாவாக்கி வைத்துக்கொண்டு நாளாந்தம் சிறிது மாவை தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் இடுப்பு வலி, மூட்டு வலி ஆகிய பிரச்சினைகள் நீங்கும்.

இரவில் படுக்கைக்குச் செல்லுவதற்கு முன்பாக செவ்வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் தொற்றுநோய்கள் ஏற்படாது.

நீரிழிவு நோயாளிகள் காலை நேரச் சாப்பாடாக இட்லி சாப்பிடுவது நல்லது.

ஒன்று விட்ட நாட்களில் வெறும் வயிற்றில் மாதுளம்பழம் சாப்பிட்டு வந்தால் எலும்புகளும், பற்களும் உறுதியடையும்.

மூலவாயில் கடுப்பு, வயிற்றுக் கடுப்பு ஆகிய பிரச்சினைகளுக்கு நெல்லிக்காய்ச் சாறு நல்லது.

பப்பாளிப்பழம் சாப்பிடுவதால் சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் கற்கள், அடைப்புக்கள் கரையும்.

மஞ்சள் தூளும், மிளகுத்தூளும் கலந்து காய்ச்சிய பசும்பாலுடன் சேர்த்து இனிப்புக்காக பனங்கற்கண்டுடன் சேர்த்து அருந்த இருமல் குணமாகும்.

வாயில் ஏற்படும் புண்களுக்கு துளசி இலையை சுத்தப்படுத்தி அரைத்து தேங் காய் எண்ணெயுடன் கலந்த தடவி வரக் குணமாகும்.

கொத்தமல்லியை அரைத்து இரவு நித் திரைக்குச் செல்ல முன்பு உதட்டில் தடவி வர உதடு சிவப்பாக மாறும்.

துளசி இலை ரசத்தைச் சூடாக்கி சிறிது தேன் கலந்து குடித்தால் உடற்பருமன் குறையும்.

மூக்கில் நீர் வடிதல் ஏற்பட்டால் ஏலம், பசு நெய் ஆகியவற்றைச் சேர்த்துச் சூடாக்கி ஆறியதும் இரண்டு துளி மூக்கில் விட நிவாரணம் கிடைக்கும்.



இப்பொழுது கறிவேப்பிலையில் உள்ள மருத்துவக் குணங்களைப் பற்றி ஆராய் வோம். கறிவேப்பிலையை கருவேப்பிலை என்றும் அழைப்பர். கறிவேப்பிலையில் 60 சதவீத நீர்ச்சத்து, 6.9 சதவீத புரதச்சத்து, 6.3 சதவீதம் நார்ச்சத்து, 5 சதவீதம் தாதுப்பொருட்கள் ஆகியவை உள்ளன. கறிவேப்பிலையில் கோயினிகள் என்ற இரசாயனப் பொருள் உள்ளது. இந்த இரசாயனப்பொருள்தான் கறிவேப்பிலைக்கு வாசனையைக் கொடுக்கின்றது. கறிவேப் பிலையில் மருத்துவ குணமும் உண்டு. கறி வேப்பிலை மரத்தின் தண்டு, வேர், இலை என எல்லாப் பகுதிகளிலும் மருத்துவ குணங்கள் உண்டு. கறிவேப்பிலையைச் சுத்தமாக்கி சப்பிச் சாப்பிட்டு வந்தால் வயிற்றுப்போக்கு குணமடையும். கறிவேப் பிலையை கஸ்தூரி மஞ்சள், கசாகசா பட்டை ஆகியவற்றுடன் சேர்த்து அரைத்து அம்மன் நோயால் வந்த தழும்புகளுக்கு பூசினால் தழும்புகள் மறையும். கறிவேப் பிலையில் விட்டமின் பி, ஏ, கல்சியம் ஆகி யவை உள்ளன. கறிவேப்பிலையில் இரும்புச்சத்தும் உண்டு. கறிவேப்பிலை பலநோய்களை வராமல் தடுக்க உதவு கிறது. கறிவேப்பிலை இரத்தத்தில் உள்ள கொழுப்பைக் கரைக்கக் கூடியது. இதனால் கறிவேப்பிலை உண்டு வரும்பொழுது இருதய நோய்கள் வராது. கறிவேப்பிலை போட்டு தேங்காய் எண்ணெயைக் காய்ச்சி தலைக்குப் பூசி வந்தால் தலையில் நரை முடி வராது. உடல் உஷ்ணம் குறையும். கறிவேப்பிலையைப் பச்சையாகச் சாப் பிட்டால் இனிமையான குரல் ஏற்படும். கறி-வேப்பிலையைச் சாப்பிட்டால் சளி நீங்கும். கறிவேப்பிலை சாப்பிட்டு வந்தால் கண்பிரச் சினைகள் நீங்கும். வெறும்வயிற்றில் கறி-வேப்பிலையைச் சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும். நீரிழிவு நோயாளி களுக்கும் கறிவேப்பிலை நிவாரணம் அளிக்கும்.

கறிவேப்பிலைச் சாற்றுடன், எலுமிச்சம் பழச்சாறு கலந்து குடித்தால் குமட்டல், தலைச்சுற்று ஆகியவை குறையும். கறி-வேப்பிலையை உண்ணுவதால் கல்லீரல் ஆரோக்கியமாக இருக்கும் மற்றும் செரி-மானம் சீராகும். குழந்தைகளுக்கு கறி-வேப்பிலைச் சாற்றை வயிற்றுவலி ஏற்படும் பொழுது மருந்தாகக் கொடுக்கலாம். கறி-வேப்பிலையை நீரில் கொதிக்கவிட்டு தேன் கலந்து குடித்தால் மலச்சிக்கல் நீங்கும். வயிற்றுப் பொருமலை கறிவேப்பிலை குறைக்கும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப் பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோ சனையை மேற்கொள்ளுங்கள் என்று வலி யுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற் கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

**இந்த உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்தது உன் ஆழ் மனது தான்...**
அது என்ன நினைக்கிறதோ அதற்காக முயற்சி செய்ய வைத்து அதை நோக்கியே உன் வாழ்க்கை பயணத்தை அமைக்கிறது.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat



Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாள் அன்பால் நிறைந்த இனிய நாள்

## வாசித்ததில் பிடித்தது

- ராஜா மகேந்திரன் -

ஏனெனில் இதுதான் மிகப் பெரிய சாதனை களின் இரகசியம். பலம் பலவற்றைத் தகர்த்து அழிக்கும். ஆனால், அன்பின் கண்ணுக்குத் தெரியாத பலம் பல இதயத்தின் கதவுகளைத் திறக்கும் சக்தி வாய்ந்தது. அதில் நான் வெற்றி பெறா தவரை நான் சந்தையில் திரியும் அற்ப வியாபாரியாகத்தான் இருப்பேன். நான் அன்பை என் ஆயுத்தமாகிக் கொண்டால் அதை எந்த சக்தியாலும் எதிர்க்க முடியாது.

நான் சொல்லும் காரணங்கள் மறுக்கப் படலாம், என் பேச்சை நம்பாமல் போக லாம், என்னுடைய உடைகள் அவர் களுக்கு ஏற்புடையதில்லாமல் இருக்கலாம், என் முகத்தை அவர்கள் வெறுக்கலாம், என்னுடைய பேரம் பேசும் விதம் சந்தேகத்தைக் கிளப்பலாம். ஆனால், அன்பு எவர் மனதையும் உருகச் செய்யும், வெயிலில் பனி உருகுவதுபோல்.

இந்த நாள் அன்பால் நிறைந்த இனியநாள். ஆனால், இதை நான் எப்படி நடை முறைப்படுத்தப் போகின்றேன்? இன்றி லிருந்து நான் ஒவ்வொன்றையும் நேசிப் பவனாகிறேன். என் உடலை வெது வெதுப்பாக்கும் சூரியனை நேசிக்கிறேன். என் மனசை சாந்தப்படுத்தும் மழையையும் நான் விரும்புகிறேன். எனக்கு வழிகாட்டும் ஒலியும் எனக்கு உகந்ததே. ஆனால் இருட்டும் எனக்குப் பிடிக்கும். ஏனென்றால் அப்போது தானே மினுமினுக்கும் நட்சத் திரங்களை என்னால் காணமுடியும்? மகிழ்ச்சி என் மனசை விசாலப்படுத்து மானால், சோகம் என் ஆத்மாவை உணரச் செய்கிறது. வெற்றிகள் எனக்குரியவை. தோல்விகள் எனக்கு சவால்.

இந்த நாள் அன்பால் நிறைந்த இனியநாள். நான் எப்படி பேசப்போகின்றேன்? நான் என் எதிரிகளையும் புகழ்ச்சியினால் நண்பர் களாக்கிக் கொள்வேன். நண்பர்கள் என் சோதரர் ஆவர். பாராட்டுகளுக்குக் கார ணங்களைத் தேடியபடி இருப்பேன். வீண் வம்புக்காக அலையமாட்டேன். நான் எவரை யானும் குறை கூற நேர்ந்தால் நாக்கைக் கடித்துக் கொள்வேன். புகழ வேண்டுமா? கூரை மீது நின்று கூவிப் பாராட்டுவேன்.

பறவைகளும், காற்றும், கடலும், இயற் கையின் அழகுகளும் தன்னைப் படைத் தவனின் புகழைப் பாடியபடி இல்லை? அதே குரலில் நானும் என் கடவுளின் குழந்தைகளைப் பற்றி பாடக் கூடாது? இனி இந்த ரகசியமே என் வாழ்க்கையின் போக்கை மாற்றப் போகின்றது.

இந்த நாள் அன்பால் நிறைந்த இனியநாள். நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? ஒவ்வொரு மனிதனிடமும் பாராட்ட வேண் டிய குணங்கள் மறைந்து இருக்கிறது. அதனால் நான் அவர்களை நேசிக்கப் போகிறேன். அவர் மனசில் எழும் சந்தேகங் களையும், வெறுப்பையும் எடுத்தெறிந்து அன்பால் அவர்கள் இதயத்திற்கு ஒரு பாலம் அமைப்பேன்.

ஆவல் நிறைந்த மனிதர்கள் என்னைப் புத்துணர்வு கொள்ளச் செய்கின்றனர். தோல்விகள் எனக்கு பாடங்களை போதிக் கின்றன. அரசர்களை மதிக்கும் நான் வலி மையற்றவர்களையும் அவர்களின் புனிதத் திற்காக நேசிக்கிறேன். பணம் படைத்த வர்கள் தனிமையானவர்கள், ஏழைகளோ ஏராளம். இருவருக்குமே என் அன்பு உ ண்டு. சிறியவர்களை அவர்களின் நம்பிக் கைக்கும், பெரியவர்களை அவர்களின் அனுபவத்திற்கும் மதிக்க வேண்டும். அழ கானவர்களின் கண்களின் சோகம் தெரியும். ஆனால் அழகற்றவர்களின் மனதின் புனிதம் புரியும்.

இந்த நாள் அன்பால் நிறைந்த இனியநாள், நான் மற்றவர்களின் நடவடிக்கைகளை எப்படி எதிர் கொள்ளப்போகின்றேன்? அன்பினால். அன்பே மனிதர்களின் இதயத் தைத் திறக்க வைக்கும் ஆயுதம். அதே அன்பு தான் என்னை வெறுப்பு எனும் அம்புகளிலிருந்தும், கோபம் என்னும் ஈட்டியிலிருந்தும் பாதுகாக்கும் கவசமும், எதிர்ப்பையும், தைரியமிழக்கச் செய்யும். செயல்களையும் இந்தப் புதிய கேடயம் தடுத்து பலமிழக்கச் செய்து விடும். இது என்னை வியாபாரச் சந்தையில் தனிமை யிலிருந்து காக்கும். பொறுப்பைக் குறைத்து, அமைதியைக் கொடுக்கும். இந்த அன்பு நாளடைவில் இன்னும் அதிக பலம் பெற்று நான் வெற்றி நடை போட்டு, கோபுரத்தின் உச்சியை அடையக் காரணமாகி விடும்.

இந்த நாள் அன்பால் நிறைந்த இனியநாள். நான் ஒவ்வொருவரையும் எப்படி எதிர்கொள்ளப் போகின்றேன்? ஒரே வழி தான். நான் என் மனசில் சொல்லிக் கொள்ளப் போவது நான் உன்னை நேசிக் கிறேன் என்பதையே. என் விழிகள் அதை அவர்களுக்கு உணர்த்தும், மொழிகளில் அவை எதிரொலிக்கும். புன்சிரிப்பில் அவர்கள் புரிந்துக் கொள்வார்கள். அவர்கள் அதன் பின்னர் என் பொருளை மறுக்க முயலுவார்கள்.?



இந்த நாள் அன்பால் நிறைந்த இனியநாள். எல்லாவற்றுக்கும் மேலாக நான் என்னையே மிகவும் நேசிக்கிறேன். நான் செய்யும் ஒவ்வொரு செயலும் என் உடம பால், மனத்தால், இதயத்தால், ஆத்மா வினால் பரசீலிக்கப்பட்டது. என் உடலின் வேட்கைகளுக்கு முதலிடம் தரமாட்டேன். அதற்கு வேண்டியது சுத்தமும், அடக்கமும், மனசை தீயவையோ, வெறுப்போ தீண் டாமல் பாதுகாப்பேன். அதற்குத் தேவை அறிவும் விவேகமுமே. என் ஆத்மாவைச் சோர்ந்து போய் சோம்பிக் கிடக்கவிடேன். தியானமும், பிரார்த்தனையும் அதை உயர்த்தும். என் இதயத்தில் சின்னத் தனமோ, கசப்போ இராது. அதை அன்பால் அரவணைத்து உலகத்துக்கு உபயோகப் படுத்துவேன். இந்த நாள் அன்பால் நிறைந்த இனியநாள். இன்றிலிருந்து நான் மானுடத்தைக் காதலிக்கப் போகின்றேன். என்னிடமிருக்கும் வெறுப்பு முழுவதுமாய்ச் சென்று அன்பு அன்பு என்னை ஆக்கிர மிக்கும். நான் இன்றிலிருந்து மனிதர்களிலே ஒரு மனிதன். என்னுடைய வியாபாரத்தை நூறு மடங்கு பெருக்கி ஒரு மிகச் சிறந்த வணிகன் என்று பெயர் வாங்க இது தான் முதல்படி, அன்பினால் எதையும் வெல்ல லாம். ஆனால் அன்பற்ற இடத்தில் உள்ள அறிவோ திறமையோ பயன்படாது.

இந்த நாள் அன்பால் நிறைந்த இனியநாள்.

**நன்றி – 'உங்களுக்குள் உள்ள விலையில்லா ஆற்றல்' -ஒக் மான்டினோ, நூலிலிருந்து**

BEST DEAL FROM ROGERS
ROGERS™
✔ High Speed Unlimited Internet
Free advanced WiFi Modem
$49.99
150 mbps speed
✔ Home phone/Internet Digital Basic TV
$84.99
✔ Tamil Channels
Starting From
$8.00
✔ Home Phone
$9.99
Students Internet Offer is Back
Call for the Best Deal
150 இற்கு மேற்பட்ட தமிழ் அலைவரிசைகளின் பொதி
மாதம் $15 மட்டுமே !
TV Wallmount குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படும்
தமிழில் தொடர்புகளுக்கு:
SANJAY : 416.315.2917

## நாமும்...

04 ஆம் பக்கத்தொடர்ச்சி

தொடர்பு உள்ளதாகத் தெரிய வருகின்றது.

நவம்பர் 2018 இறுதி வாரத்தில் Oshawa GM தனது உற்பத்தியை 2019ஆம் ஆண்டு இறுதில் நிறுத்தப்போவதாகத் தெரிவித் துள்ளது. இதனால் 3000 வரையானவர்கள் தமது தொழிலை இழக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக ஆதன வியாபாரத்திலும் இறக்கம் ஏற்பட்டுள்ளது. Tesla கார் நிறுவனம் அந்த இடத்தில் தமது தொழிலை நடத்தலாம் என ஆலோசித்து வருவதாக அதன் தலைவர்




தெரிவித்துள்ளார். எனினும் உடனடியாக அந்தப்பகுதியில் ஆதன வியாபாரத்தில் மந்த நிலையே ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

# இளமையைக் காக்கும் யோகா பயிற்சி

ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
(Diploma in Yoga Therapy) India)
416.617.5721/416.289.2033
(After 7 pm)



மனோதத்துவ அடிப்படையில் ஏற்படும் நோய்கள்தான் மிகவும் சிக்கலானவை என்று இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது. நமது உடலானது சரிவர செயல்படுவதற்கும், அதன் சக்தியை நாம் முழுமையாகப் பெறுவதற்கும் மனமானது உடலுடன் ஒத்துழைக்க வேண்டும். மனத்தை அமைதிப் படுத்துவது, புத்திக்கூர்மையை அதிகரிக்கச் செய்வது, சிந்தனைகளைத் தெளிவாக்குவது என்பனவற்றிற்கு இன்றைய நவீன மருத்துவத்தில் தெளிவான வழிமுறைகள் இல்லை. ஆனால் யோகா பயற்சியில் எந்த மருந்தும் இல்லாமல் இவற்றை நம் முன்னோர் மிகவும் எளிதாக அடைந்திருக்கின்றனர்.

### மன அழுத்தமும் மருந்தில்லா மருத்துவமும்

மனமும் உடலும் ஒன்றுக்கொன்று அனுசரணையானவை என்பதை இன்றைய மருத்துவம் தெளிவாக்குகின்றது. மனநிலை சரியாகவோ, அமைதியாகவோ இல்லாதவர்களுக்கு இரத்த அழுத்தம், ஆஸ்துமா போன்ற நோய்கள் வந்து சேர்கின்றன. இன்றைய வாழ்க்கை முறையில் நாம் எவ்வளவோ வசதிகளை அனுபவித்து வருகிறோம். அதிக உடல் சிரமமின்றி வாழ்க்கையை நடத்துகின்றோம். ஆனால் இந்த நாகரிக வாழ்வில் உருவாகியிருக்கும் அவசரம், பதட்டம், வேகம், தடுமாற்றம் ஆகியவை சுகத்தை தேடி நமது உடலை உலுக்கியெடுத்து வருகிறது. இன்றைய வாழ்க்கையில் நாள் முழுவதும் படபடப்பு (Tension) அதிகமாகவுள்ள மனநிலையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.



அப்போது நமது நரம்புகள் முறுக்கேறுகின்றன. இரத்த ஓட்டமும் அழுத்தத்தால் எல்லையை மீறும் அளவுக்கு அதிகரிக்கின்றது. இருதய துடிப்பும் நாடித்துடிப்பும் அளவு கடந்துபோகின்றன. ஒரு செயல் நிகழ்ந்து வெகு நேரத்தின்பின் அதன் பாதிப்பால் மன உழைச்சல் ஏற்படுகின்றது. அதன் விளைவுகளைப் பற்றிச் சிந்தித்தும் அதனை தவிர்க்கலாம். ஆனால் மனம் அதனை ஏற்றுக்கொள்ளாது.

நாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் எல்லா பிரச்சினைகளையும் யாரிடமும் மனம் விட்டுச் சொல்ல முடிவதில்லை. அப்போது மனதிற்குள்ளே அந்த சூழ்நிலையும் அதனால் நமக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களையும் எண்ணிப் பார்த்து கற்பனையில் விபரீத நிலைகளை உருவாக்கிப் பார்த்துக் கொள்கிறோம். இவ்வாறு அடிக்கடி நாம் பெறும் அனுபவம் உடல்நிலையில் சிக்கலான கோளாறுகளை ஏற்படுத்தி விடுகிறது. வயிற்றில் அமிலம் கூடி குடல்புண் (Ulcer) ஏற்படுதல், தலை வலி, மூட்டுவலி, நீரிழிவு போன்ற பலவும் இப்படி நாளடைவில் நமது உடலில் வந்து சேர்கின்றன.

இவ்வாறு அவதிப்படுபவர்களை இன்றைய மருத்துவ நிபுணர்கள் வைத்தியம் செய்து விடுவிக்க முயற்சி செய்யும்போது வெளிப்படையான அடையாளங்களை மட்டுமே கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர் அல்லது சோதனைகள் மூலம் புரிந்து கொள்கின்றனர். அவர்கள் செய்யும் வைத்தியமும் அந்த வெளிப்படையான அடையாளங்களைக் குணப்படுத்தும் முயற்சியுடன் நின்றுவிடுகிறது. அவர்கள் பரிந்துரைக்கும் மருந்துகளும் நோயின் அடிப்படை சிக்கலிலிருந்து நோயாளிகளை விடுவிப்பதில்லை.

உதாரணமாக இரத்த அழுத்தம் (Blood Pressure) கூடுவதை எடுத்துக் கொள்வோம். இது தொடர்ந்து ஒருவருக்கு இருந்துவரும் மனக்கவலை, மனக்கலக்கம் என்பனவற்றின் அடிப்படையில்தான் ஏற்படுகிறது. அதனால் அவரது உடல்நிலையும், நரம்பு மண்டலங்களும் பாதிப்படைகின்றன. ஆனால் இதற்கு மருத்துவர் என்ன செய்கிறார்? மருந்துகளைக் கொடுத்து இரத்த அழுத்தம் கூடாமல் பார்த்துக் கொள்கிறார். அதாவது உடலின் இயக்கம் மருந்துகளின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆனால் அடிப்படையான சிக்கலைத் தவிர்க்கவோ, உடல் நிலையைப் பலப்படுத்தவோ அது உதவுவதில்லை. இங்கேதான் நம் முன்னோர் நமக்களித்த யோகாசன பயிற்சிமுறைகள் கைகொடுக்கின்றன.

இன்று உலகம் பூராகவுமுள்ள புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்களினால் யோகா முக்கிய-மானதாகப் பரிந்துரைக்கப்படுகிறது. பிரபல மருத்துவமனைகள் பலவற்றிலும் யோகாசன சிகிச்சை (Yoga Therapy) முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


### இளமையின் இரகசியம்

யோகாசன பயிற்சியினை தொடர்ந்து செய்து வருபவர்கள் கோபம், வெறுப்பு, பொறாமை போன்றவற்றில் ஈடுபடுவதில்லை. இந்தப் பயிற்சி ஒரு தனி மனிதனை உயர்த்துவதோடு அவனது ஆளுமையை, அழகை, ஆற்றலை ஆயுளை, இளமைப் பொலிவை அதிகரிக்கச் செய்கின்றது.

யோகாவிலுள்ள ஒவ்வொரு ஆசனங்களும் உடல் உள்உறுப்புகளையும் முதுகுத் தண்டையும் பலப்படுத்துகிறது. அதனால் நோயற்று வாழ முடிகிறது. முள்ளந்தண்டு நன்கு வளைந்து பூரணமான இயக்க சக்தியுடன் இருக்கும்வரை மனிதனின் இளமை நிலைத்திருக்கும். அத்துடன் இராஜ உறுப்புக்களான கல்லீரல், இதயம், மண்ணீரல், நுரையீரல், சிறுநீரகம் போன்றவை திறம்பட தமது வேலையைச் செய்யும் வரையில் முதுமையையும் மரணத்தையும் தள்ளிப் போடலாம். நீண்டநாள் வாழலாம்.




# மகான் காந்தி மகான்



ஏழ்மையை ஒழித்து இந்தியா வளம் பெற
ஏற்ற வழிமுறைகளை எடுத்துரைத்து அயராது
நாட்டுக்காய் உழைத்து நன்மைகளை செய்தவர்


அடிமை உணர்வினை அடியோடு வெறுத்து இவர்
சுதந்திரம் ஒன்றை நாட்டுக்கு சுகம் தருமென உணர்ந்து
நாழும் பொழுதும் சுழன்று சுழன்று உழைத்தவர்

வாய்மையை காத்து உயர் தாய்மையை போற்றிய வள்ளல்
கொண்ட கொள்கையில் கொஞ்சமும் நழுவாது வாழ்ந்து
ராட்டையை சுற்றி பல நாட்டையும் சுற்றியவர்

வெள்ளை கொடியவர் அஞ்சிட மேடையில் இடியென முழங்கி
கதிர் வேட்டியை உடுத்துமே வெள்ளையர் ஆட்சியை
விரட்டியே அகற்றி நாட்டினை பற்றியவர்

தத்துவ போதனையும் சத்திய சோதனையும் தந்தவர்
அகிம்சையின் சின்னமென அகிலத்தால் போற்றப்பட்டு
அண்ணல் காந்தி என அழைக்கப்பட்டவர்

இதம் தரும் சுதந்திரம் இந்தியாவில் பிறந்த பின்பே
வென்றெடுத்த சுதந்திரத்தால் வெற்றிக்கொடி நாட்டினிட்டு
பின் இறப்பினை தழுவிய மகா ஆத்மாவான
காந்தியின் நினைவு தினம்



கவிநாதம் பரந்தாமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என்கண்கள், அனைத்துமளந்த எம்முன்னவர்களை அறிய விரிந்து கொள்கின்றன்."

# கீழடி அகழ்வாய்வுகள்

## கிளறப்படும் உண்மைகள்-பன்முகப் பார்வை.



- கனி -
pions@hotmail.ca
416.261.1348

தைமகள் பிறந்து விட்டாள். வழி பிறக்கும் என்ற நம்பிக்கை தமிழர் அனைவரிடமும் எழட்டும். இன்னமும் பல வழிகள் பிறந்து விடும், வரப் போகும் இனிய நாட்களிலே என்ற நம்பிக்கையுடன் தொடருவோம், இனிதாக வாழ்வினை.

கீழடியைப் பற்றிய விடயங்களைப் பார்த்துக் கொண்டுவரும் எங்களின் பார்வையில் தட்டுப்பட்ட கூடியம் குகைகள் பற்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சென்ற தடவையில் கூடியம் குகைகள் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டோம். இன்று கூடியம் குகைகளைப் பார்க்கச் சென்றவர்கள் கூறும் சுவையான சில விடயங்களை அறிந்து கொள்வோம்.


கூடியம் குகைகள் (தொடர்ச்சி)

கூடியம் குகைகள் பற்றிப் பெரியதாக ஒருவரும் அறிந்திராத பொழுதிலும், இந்நாட்களில் சிலர் இவை பற்றித் தெரிந்து கொண்டு அவ்விடத்திற்குச் சென்று தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துள்ளனர். ஊடகத் துறையினர் சிலரும் இவ்விடத்திற்குச் சென்று பதிவுகளைச் செய்திருக்கிறார்கள். அவ்வண்ணம் சென்றவர்களில் தீபக் திவ்யராஜன், ரமேஸ் வந்திரா, வசந்தி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஆர்வமுள்ளோர், கூகிளுக்குச் சென்றோ அல்லது youtubeஇற்குச் சென்றோ GUDIYUM CAVES என்ற தலைப்பில் தேடி, இவ்விடயங்கள் பற்றிய சுவையான விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.



குட்டிக் கிராமமான கூடியம் கிராமம் செல்வதற்கான வசதிகள் நன்றாகவே இருக்கின்றன. கூடியம் கிராமத்தில் இருந்து குகையை அடைவதற்கு இன்னமும் ஆறு அல்லது எட்டு கிலோமீற்றர் வரைக்கும் அடர்ந்த புதர்க்காட்டின் ஊடாக, ஒற்றையடிப் பாதையிலே செல்ல வேண்டும். பொருத்தமான உடையணியாதுவிடில், முட்செடிகள் உடலினைப் பதம் பார்த்துவிடும். அப்பாதையிற் சென்று உடலிற் காயங்கள் இல்லாது திரும்பியவர்கள் யாரும் இல்லை என்கின்றனர். அவ்வளவுக்கு நெருக்கமாக, அப்பாதையுடன் இணைந்து புதர்கள் மண்டியிருக்கின்றன. கவனக் குறைவாக இருந்தால், விசப்பூச்சிகள், பாம்புகள் என்பவற்றின் இடைஞ்சல்கள் கூட வந்துவிடும். சில இடங்களிற் குனிந்தும், சில இடங்களிற் தவழ்ந்தும் கூடச் செல்ல வேண்டிவருமென்கின்றர். மேலும், பாதை முழுவதும் கூழாங்கற்கள் இருப்பதாலும், கிட்டத்தட்ட துணிகரப் பயணங்கள் செய்பவர்களுக்கு ஒத்ததான பயணமாகவே கூடியம் குகைகளுக்குப் போகின்ற பயணம் இருக்கும். இருப்பினும் இப்பாதையில் செல்கையில் நூறாயிரம் ஆண்டு முன்னராக எமது முன்னவர்களின் நடந்து சென்ற பாதை, அவர்களின் காற் தடங்கள் பதிந்த பாதை எண்ணம் அவர்களைப் புல்லரிக்கச் செய்து கொண்டே இருந்தது என்கின்றனர், அங்கு சென்றவர்கள்.

பாதையிற் சில இடங்கள் செவ்வாயின் மண் போல செந்நிறமாக இருக்கும். சில இடங்கள் வெண்ணிறமாக இருக்கும். இப்படி, செந்நிற வெண்ணிறப் பகுதிகளாக இருப்பது, அந்தந்த இடங்களில் முறையே இரும்புத் தாதுக்களும், அலுமினியத் தாதுக்களும் அதிகமாக இருப்பதே காரணம் என்கின்றனர், ஆய்வாளர்கள். முதல் படம் கூடியம் குகைக்குச் செல்லும் பாதையைக் காட்டுகிறது. அடுத்து வருகிற படத்தைப் பாருங்கள். ஆச்சரியமான விடயம் ஒன்றினைக் காண்பீர்கள்.



படத்தில் இரண்டு நாய்களைக் காண்கிறீர்கள் அல்லவா! அதுதான் அந்த அதிசயம். இந்தக் கூடியம் குகைகளுக்குப் புதிதாக, வழிகாட்டிகள் யாருமின்றி யாரும் சென்றுவிட முடியாது. அப்படிச் சென்றால் அவர்கள் வழிதவறிப் போய்த் தொலைந்துவிடுவர். இப்படியிருக்க, இக்கூடியம் குகைகளுக்குச் செல்வதற்கு வழிகாட்டிகளாக, சில சிறுவர்கள் இருந்தாலும் இந்த நாய்களே அதிகம் வருகின்றனவாம். பாதை தவறிப் போனால் அவை குரைத்து, செல்பவர்களைச் சரியான பாதையிற்குக் கொண்டு வந்திடுவினமாம். இந்த அதிசயம் நாற்பது ஆண்டாக நடந்து கொண்டே இருக்கிறது என அனுபவப்பட்டவர்கள் கூறுகின்றனர். இவற்றிக்குத் தேவையானவை செல்லும் வேளையில் நீரும் உணவும் மட்டுமே.

குகைகள் நோக்கிச் செல்லும் பாதையில் இரண்டு விடயங்களைக் காணலாம். ஒன்று மரமொன்றுக்கான கோவில். இம்மரத்தினைச் சுற்றி வேலியமைத்து, அதனை வழிபடுகின்றர். மற்றையது தெய்வமாகக் கருதப்படும் கூழாங்கற்களாலான தனிக் குன்று. கிராமத்தவர்கள் அங்கு வந்து இக் குன்றுக்குக் குங்குமம், சந்தனம், திருநீறு என்பன இட்டு, பூசைகள் செய்கின்றர். இவற்றினைக் கடந்து மேலும் சில கிலோ மீற்றர்கள் செல்ல முதலாவது குகை வரும். அதனைப் பார்த்துவிட்டு, மற்றக் குகைக்குச் செல்லலாம். மற்றக் குகைக்குச் செல்லும் பாதையில் அந்த வழிகாட்டி நாய்கள் கூட்டிச் செல்லும். இன்னொரு அதிசயம் என்னவெனில், அதற்கு அப்பால் அந்த வழிகாட்டி நாய்கள் யாரையும் செல்ல விடுவதில்லை. இன்னமும், திரும்ப வேண்டிய சரியான நேரத்தில் அவை குரைத்துத் திரும்புவதற்கான சமிக்கையைக் கூடத் தருகின்றன. இவற்றை எல்லாம் youtubeஇல் 'பொக்கிஷம் ரீவி'இல் தீபக் திவ்யராஜன் என்பவரின் ஒளிப்பதிவுகளிற் காணலாம்.

குகைகளின் அமைப்பு, அதன் வடிவம் என்பவற்றை எல்லாம் ஏற்கனவே அறிந்து விட்டோம். இனி இங்கு காணப்படும் வேண்டப்படாத விடயங்கள் பற்றிப் பார்ப்போம். முதலாவது குறிப்பிடக் கூடிய விடயம் என்னவெனில், கிராமத்தவர்கள் அக்குகைக்குள் வந்து, குகையின் சுவர்களில் அம்மனின் படம் வரைந்து அதற்கு பூசைகள் செய்கின்றர். இன்னமும், அங்கிருக்கும் கூழாங்கற்களைப் பொறுக்கி, ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கிறார்கள். அப்படிச் செய்வதால், அவர்களுக்குச் சொந்தமாக வீடு கட்டக் கூடியதான அருளினை அந்த அம்மன் கொடுப்பாள் என நம்புகின்றனர். இச்செயற்பாடுகளின் ஆபத்து மிகவும் பாரதூரமானது. மெதுமெதுவாக, அக் குகைகள் மதங்களின் ஆதிக்கத்துள் வந்து மதச்சடங்குகள் பெரிய அளவிற் செய்யப் பட, அவ்விடத்தின் உண்மைத் தன்மை நாளாவட்டத்தில் அழிந்து போய்விடும் அபாயம் வந்துவிடும். அவ்விடத்தின் பெறு மதியினை நாங்கள்தான் காக்க வேண்டும். இந்திய வனத்துறையும் தொல்பொருள் துறையினரும் இதுபற்றி பெரிய அளவில் அக்கறைப்படாது போனதால், நூறாயிரம் ஆண்டு பழமையான எங்களின், மனித இனத்தின் சுவடுகள் ஏதோ ஒரு விதத்தில் அழிந்துவிடும் அல்லது அழிக்கப்பட்டுவிடும்.

இன்னமும் சிலர், அவ்விடத்திற்கு வந்து மதுவருந்தி விட்டு, வெற்றுப் போத்தல்களையும், குப்பைகளையும் அவ்விடமெல்லாம் பரவி விட்டுச் செல்கின்றர். மிகவும் அற்புதமான அறிவியல் ஆய்வாளர்களுக்குத் தேவையான, உல்லாசப் பிரயாணிகளைக் கவரக் கூடியதான இவ்விடம், இதுபோன்ற செய்கைகளினால் குப்பைத் தொட்டியாகவும் மாறிவிடும் அபாயமும் உண்டு. இவ்விதம் இவ்விடம் கேட்பாரற்றுப் பாதுகாப்பின்றிக் கிடப்பது தமிழர்களுக்கு இழப்பாகவே இறுதியில் அமைந்துவிடும். இதுபற்றிய விமர்சனங்களை அதிகம் நான் கூறவில்லை. நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். ஒப்பிடக் கூடியதான ஒரு விடயத்தைத் தருகிறேன். ஜெர்மனியின் நியண்டர்தால் பகுதியிலும் 19ஆம் நூற்றாண்டில் இப்படியான ஒரு குகை

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

மைத்திரிபால சிறிசேனவையே எல்லோரும் குற்றம்சாட்டி வருகின்றனர். குறிப்பாக தமிழ், முஸ்லிம் சிறுபான்மை சமூகங்கள் ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தன.

இந்த சூழலில், வடக்கு கிழக்கில் வாழும் சிறுபான்மை மக்களை கவரும் நோக்குடன் அம்மாகாணங்களுக்கு ஆளுநர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர். இந்த ஆளுநர்கள் நியமனம் நல்லிணக்கத்தை வளர்க்கும் விதமான ஜனாதிபதியின் ஒரு நடவடிக்கை என்று மைத்திரி ஆதரவாளர்கள் கூறுகின்றனர். ஆனால், கிழக்கு ஆளுநராகத் தெரிவுசெய்யப்பட்டவரால் குழப்பான நிலைமையே இன்று தோன்றியுள்ளது. இதனால் கிழக்கிற்கு பொருத்தமான வேறு ஒருவரை ஆளுநராக





நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

# நடிகர்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

எனக்கு பிடித்தது. அவரை ஆதரிக்காமல் இருந்தால் எப்படி? நல்ல இயக்குநர்களுக்கு மக்கள் ஆதரவு முக்கியம் என்பதால்தான் நான் 'ஜிப்ஸி' படத்தில் நடித்தேன்.




பியூஷ் மனுஷ், சமூக செயற்பாட்டாளர்: நான் திரைப்படங்களில் நடிக்கவில்லை. பியூஷ் மனுஷாகவே வருகிறேன். என்னை 'சர்கார்' படத்தில் மூக்கனேரி பின்புலத்தில்தான் காட்டினார்கள். அந்தப் படத்தை உலகத் தமிழர் பார்த்து விழிப்புணர்வு அடைவார்கள் என்பதால் சம்மதித்தேன். மற்றபடி நானாகச் சென்று வாய்ப்பு கேட்கவில்லை.

முருகதாஸ் என்னிடம் வேட்பாளராக நிற்கச் சொல்லிக் கேட்டார். நான், வேண்டாம் என்று கூறிவிட்டேன். அதனால், என்னுடைய வசனமாக "எந்தக் கட்சி, எந்தக் கொடியும் இல்லாமல், அந்தந்த ஊரில் இருக்கும் சமூக ஆர்வலர்களை தன்னுடைய வேட்பாளராக மக்கள் தேர்ந்தெடுக்க வாழ்த்துகள்" என்று கூறினேன். "நல்ல மனிதருக்குத் தேர்தலில் போட்டியிடக் கட்சிகள் சீட் கொடுக்க வேண்டும்" என்ற கருத்தை நான் ஆதரிக்கிறேன். ஆனால், சாதி, மத அடிப்படையில்தான் கட்சிகளில் இடம் கொடுக்கின்றனர்.

நடிகர்கள் அரசியலுக்கு வருவதை எதிர்க்க யாருக்கும் உரிமை கிடையாது. திரைப் படத்துறையைச் சேர்ந்த அண்ணா, கருணாநிதி, ஜெயலலிதாவால்தான் தமிழ் நாடு பல துறைகளில் இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது. நடிகர்கள் அரசியலுக்கு வருவதை எதிர்ப்பது தவறானது. ராஜுமுருகன் மிகச்சிறந்த இயக்குநர். 'ஜிப்ஸி' வெளிவந்தால் எல்லோருமே பாராட்டுவார்கள்.

குற்றம் காணத் தொடங்கினால்
அன்பு செய்ய
நேரம் இருக்காது

# கனடா...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்யப்பட்ட வண்டில்களைப் பாவித்தனர். வண்டில்கள் பாவனைக்கு வந்ததும் குதிரைகளும் மாடுகளும் வண்டி இழுப்பதற்குப் பயன் படுத்தப்பட்டன. வண்டில்களில் தள்ளு வண்டில், ஒற்றை மாட்டு வண்டில், இரட்டை மாட்டு வண்டில் என்று மூன்று வகை வண்டில்கள் பாவனையில் இருந்தன. ஒற்றை மாட்டு வண்டில் குடும்பங்களின் போக்குவரத்திற்கும், இரட்டை மாட்டு வண்டில் பொருட்களை ஏற்றிக்கொண்டு செல்லவும் பயன்பட்டன. தமிழ் மன்னன் எல்லாளன் காலத்தில் பாரங்களைத் தூக்கவும், போர்களில் ஈடுபடுத்தவும் தேவையான யானைப்படை அவரிடம் இருந்தது. அக்காலத்தில் வன்னிக் காடுகளில் இருந்த



ஏராளமான யானைகள் காலப்போக்கில் அருகிவிட்டன.

# கீழடி...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

கண்டு பிடிக்கப்பட்டு ஆய்வுகள் செய்த வேளையில்தான் நியாண்டத்தல்கள் என்ற, மனிதரை ஒத்த, மனிதருக்குச் சகோதரமான உயிரினங்கள், சில ஆயிரம்



வருடங்களின் முன்னர், மனிதர் வாழ்ந்த காலப்பகுதில், புவியில் வாழ்ந்ததை அறிஞர் கண்டு பிடித்தனர். ஜெர்மனியின் அந்தநியண்டர்தால் பள்ளத்தாக்கும், குகையும் பாதுகாக்கப்பட்டு, ஆய்வாளர்களின் ஆய்வுகளுக்கு உரிய இடமாகவும், உல்லாசப் பயணிகளின் பார்வைக்குரிய இடமாகவும் அறிவிக்கப்பட்டுப் பாதுகாக்கப்டுகிறது. ஆனால், இங்கோ ஏன் இந்த நிலை என்பதனை நினைத்துப் பாருங்கள்.

கீழடியின் விளைவாகக் கிளறப்பட்டு வெளிவந்த கூடியம் குகைகள் பற்றித் தெரிந்து கொண்டோம். வரும் நாட்களில் கீழடியுடன் இணைந்து இன்னமும் மறைக்கப்பட்ட ஆய்வுகள் பற்றிய விபரங்களையும் தமிழரின் தொன்மை பற்றிய உறுதிப்பாடுகளையும் அறிந்து கொள்வோம்.

விளம்பரம் வாசகர்களே! உங்களது ஆக்கபூர்வமான கருத்துகளை வரவேற்கிறோம். ஓரிரு நிமிடங்கள் செலவு செய்து உங்கள் கருத்துகளை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ பதிவு செய்யுங்கள். அப்பதிவுகள், உங்களுக்குத் தேவையானவற்றைக் கொடுப்பதற்கும் உதவியாக இருக்கும். நன்றி.

**தகவல்**

1829ஆம் ஆண்டே நியாண்டர்தல் படி மங்கள் பெல்ஜியம் நாட்டில் கண்டு பிடிக் கப்பட்டாலும் அவை கற்கால மனிதர்களின் படிமங்களாக அங்கீகரிக்கப்படவில்லை. பின்னர் 1856ஆம் ஆண்டு ஜெர்மனியின் நியாண்டர் பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப் பட்ட படிமங்கள்தான் தற்காலத்திய மனி தரின் முன்னோர்களாக அங்கீகரிக்கப் பட்டன. இப்படிமங்கள் நியாண்டர்தல்-1 என்று அழைக்கப்பட்டன.

1886ஆம் ஆண்டு பெல்ஜியத்தில் கிட்டத் தட்ட முழுமையான இரண்டு நியாண்டர்தல் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. அன்றிலிருந்து இன் வரை பல நியாண் டர்தல் படிமங்கள் கிடைத்திருக்கின்றன. நியாண்டர்தல்கள், சுமார் நான்கு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னரிலிருந்து சுமார் 30,000-24,000 ஆண்டுகளுக்கு முன்புவரை வாழ்ந்ததாகக் கணக்கிட்டுள்ளனர். அதாவது இந்த இனம் சுமார் 30,000-24,000 ஆண்டுகளுக்கு முன்னர் அழிந்து விட்டது. எப்படி அழிந்தன?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# Spiderman - திரை விமர்சனம்




ஞா. ஆரணி

பலருக்கு நன்றாகத் தெரிந்த Spiderman கதை இதுவாகும். Peter Parker என்ற ஓர் உயர்தர பாடசாலைச் சிறுவன் தனது பெற்றோர் இறந்ததால் தனது மாமா மற்றும் மாமியுடன் வாழ்கின்றார். பின்னர் ஒரு நாள் ஒரு 'radioactive' சிலந்தியினால் கடிபட்டு சிலந்தியின் சக்திகள் அனைவற்றையும் பீற்றர் பெறுகிறார். அவரது மாமா ஒரு திருடனால் கொலை செய்யப்பட்டபிறகு, Spiderman என்று வேடம் அணிந்து பீற்றர் மக்களைப் பாதுகாக்கும் Superhero ஆகிறார்.

Spiderman - Into the Spiderverse என்று தற்போது வெளியான Animated திரைப்படக் கதை இது அல்ல. மேலே கூறியது, வாசகர்களுக்கு Spiderman என்ற கதா பாத்திரம் எவ்வாறு உருவானது என்று கூறும் கதையாகும். தற்போது வெளியான Into the Spiderverseஇன் கதையைப் பார்ப்போம்.

Miles Morales என்பவர் ஆபிரிக்க-இலத்தீன் அமெரிக்கக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன். பரீட்சையில் சிறப்பாகச் செய்ததால் ஒரு தனியார் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்படுகிறார். தனது இனமக்கள், நண்பர்கள் இல்லாமலும் பணக்காரப் பிள்ளைகளுடன் படிப்பதாலும் Milesஇற்கு அப்பள்ளிக்கூடம் பிடிக்கவில்லை. வேண்டும் என்றே பள்ளிக்கூடத்தில் பிழையான பதில்களைப் பரீட்சைகளில் எழுதுகிறார்.

பொலிஸ் அதிகாரியான அவரது அப்பாவும், மகன் சிறந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக Milesஐ மிகவும் கண்டிப்புடன் வளர்க்கிறார். ஓவியங்களில் ஆர்வம் கொள்ளும் Miles தனது மாமாவிடம் தனது பிரச்சினைகளை மனம் விட்டுக் கூறுகிறார். அவரது மாமாவும் Milesஐ அழைத்துக் கொண்டு ஒரு குகையில் உள்ள சுவரில் graffitti வரையுமாறு செய்கிறார். அவ்வாறு வரைகையில் Milesஐ ஒரு radioactive சிலந்தி கடிக்கின்றது.



Milesஉம் Spiderman போல சிலந்திகளின் சக்திகளைப் பெறுகிறார். சாதாரண சிறுவனாகவே வாழ விரும்பும் Milesஇற்கு Spidermanபோல வாழ ஆசையே இல்லை. தான் சிலந்தியால் கடிப்பட்ட இடத்திற்கு மறுபடியும் செல்கையில் அவர் Peter Parker ஆகிய Spidermanஐ சந்திக்கிறார். வில்லனிடம் சிக்கிக்கொள்ளும் பீற்றர், தனது வேலைத்திட்டத்தை Miles இடம் கூறி ஆறு உலகங்களிலும் உள்ள மக்களைக் காப்பாற்றச் சொல்லிக் கேட்டுக்கொண்டு இறக்கிறார். Milesஇனால் வில்லனைத் தடுக்க முடியுமா? அவருக்கு Spidermanபோல சிலந்தியின் சக்திகளை முழுமையாகப் பெற்று அவற்றைக் கட்டுப்படுத்திப் பயன்படுத்த முடிகிறதா? இவற்றை இந்தப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

ஒரு பக்கத்தில் பெற்றோர் Miles ஒரு நல்ல பாடசாலைக்குச் சென்று நன்றாகப் படிக்க வேண்டும் என விரும்புகின்றனர். மறுபக்கத்தில் Miles பல பிள்ளைகள் போல அவரது பெற்றோரின் எதிர்பார்ப்புக்களுக்குள் சிக்கிக்கொண்டு தவிக்கிறார். அவரது ஓவிய ஆற்றலையும், ஆசையையும் வளர்க்க கஷ்டப்படுகிறார். பல சிறுவர்போல தன் நம்பிக்கை இல்லாமல் கஷ்டப்படுகிறார்.

Miles எவ்வாறு தன்நம்பிக்கை பெற்று வாழ்க்கையில் முன்னேறுகிறார் என்று படத்தில் நன்றாக விபரிக்கப்படுகிறது. இதற்கு Milesஇன் தாய், தந்தையின் அறிவுரை, மாமாவின் சினேகிதம், புதிய நண்பர்களின் ஊக்குவிப்பு என்பன மிக முக்கியமாக இருக்கின்றன. அவரது நண்பர்கள் Miles இற்கு இன்னும் தனது சக்திகளை ஒருமுகப்படுத்தி தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரத் தெரியாததால், அவர் வில்லனுடன் சண்டை பிடித்தால் அது ஆபத்தில் முடியும் என்று அறிந்திருந்தாலும் அவரால் முடியாது எனச் சொல்லாமல் உங்களால் முடியும்போது வாருங்கள் என்கின்றனர். அத்தருணத்தில் தந்தை வழங்கும் அறிவுரை அவரின் தன்நம்பிக்கையை ஊக்குவிக்கிறது.


எவ்வாறு பெற்றோரும் இறந்த Spiderman உம் Miles மீது வைத்த எதிர்பார்ப்புக்களை அவர் அனுசரித்துப் போகிறார் என்பதை இப்படத்தைப்பார்த்து அறியலாம். தனது முழு சக்தியையும் ஒருமுகப்படுத்தி கலை ஆர்வத்தையும் வளர்த்துக்கொண்டு ஒரு சிறந்த மாணவனாக Miles எவ்வாறு வருக்கிறார் எனவும் இப்படத்தில் அறியலாம்.

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ஜி.ஆர் மூன்றெழுத்தில் ஒரு மந்திரம்




சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

எம்.ஜி.ஆர். என்ற மூன்று எழுத்தில் ஓர் உலகெங்கிலும் நன்கு அறியப்பட்ட மாபெரும் தமிழக தலைவரின் இயற்பெயர் மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் என்பதாகும். எம்.ஜி.ஆர். என்ற மூன்று எழுத்து, ஒரு மந்திரமாகவே இன்றுவரை உச்சரிக்கப்படுகிறது. நினைக்கும் போதும் உச்சரிக்கும் போதும் உற்சாகத்தையும் உன்னதத்தையும் தரும் இம்மந்திரக் காரருக்கு மக்கள் திலகம், பொன்மனச் செல்வர், புரட்சித்தலைவர், இதயக்கனி என்றெல்லாம் பட்டங்கள் உண்டு. தமிழக சினிமாவையும், தமிழக அரசியலையும் ஒன்று சேரப் பயணிக்கவைத்த வெற்றியாளர் இவர் மட்டுமே. நீண்டகாலமாக சினிமாவில் அழகு ததும்பிய நடிகராகவும், அரசியலில் அப்பளுக்கற்ற தன்னலமறுப்பாளராகவும் திகழ்ந்து சமான்ய மக்களின் வாழ்வோடு தன்னை பிணைத்துக் கொண்ட இம்மாபெரும் தலைவரது நூற்றாண்டு விழா சென்ற வருடம் உலகெங்கிலும் உணர்வுபூர்வமாக கொண்டாடப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர். இலங்கையில் கண்டிக்கு அருகில் உள்ள நாவலப்பிட்டியில் மருதூர் கோபாலமேனன் சத்தியபாமா தம்பதிகளுக்கு மகனாக ஜனவரி 17, 1917இல் பிறந்தார். எனினும் அவருடைய சிறிய வயதில் தந்தையாருடன் கேரளம் சென்று அவர் காலமாகிவிடவே தமிழ்நாடு கும்பகோணத்தில் குடியேறினார். குடும்பசூழ்நிலை காரணமாக படிப்பை தொடராது சக்கரபாணி என்ற சகோதரருடன் சேர்ந்து 7வயதிலேயே நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். நாடக துறையில் நன்கு அனுபவம் கொண்ட இவர் திரைப்படத்துறையில் காலடி எடுத்து வைத்தார். அயராது உழைத்து முன்னேறி முதன்மை நடிகரானார். இவரது நடிப்பினை நேசித்த தமிழக மக்கள் அவர் பின்னால் வழிநடந்தனர்.

1936இல் சதி லீலாவதியே அவரது முதல் திரைப்படம். எனினும் 1947இல் அவர் கதாநாயகனாக நடித்து வெளிவந்த ராஜகுமாரி திரைப்படம் பெரும்வெற்றியை ஈட்டிக் கொடுத்தது. தொடர்ந்து மிக நீண்ட காலவரலாற்றினை கொண்ட அவரது திரைப்படங்கள் 136 ஆகும். இதில் 100 நாட்களுக்கு மேலாக ஓடி வெற்றிகண்டவை மட்டும் 86 படங்களாகும். இவரது படங்களில் ப. நீலகண்டன் 17 படங்களை இயங்கியவர். ஜெ. ஜெயலலிதா 28 படங்களில் நாயகியாகவும் சரோஜாதேவி 26 படங்களில் நாயகியாகவும் லதா 13 படங்களிலும் நடித்துள்ளார். தொடர்ந்து 25 ஆண்டுகளாக நடித்த பெருமை அவருக்கு உண்டு. இவரது சக நடிகர்களுள் ஒருவரான எம். ஆர் ராதாவினால் சுடப்பட்டு தெளிவாக பேசும் திறனை இழந்தபோதும் அவரது நட்சத்திரவலிமை குறையவே இல்லை. அவரது புதியபாணி பேச்சினை மக்கள் ஏற்றுக் கொண்டனர். 1956இல் தென்னிந்தியாவில் முழுநீள வர்ணப்படமான 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' வெளிவந்து பெரிய சாதனை படைத்தது. நூறுநாட்கள் ஓடி தமிழ் படவரலாற்றில் சாதனையை, முதல்சாதனையை 'நாடோடி



ஜனவரி 17, 1917 - டிசம்பர் 24,1987

மன்னன்' பெற்றது. 16 படங்களில் இரட்டை வேடம் தாங்கி தமிழில் அதிக திரைப்படங்களில் இரட்டைவேடம் தாங்கிய ஒரு சாதனையாளராகவும் எம்.ஜி.ஆரே இன்றுவரை உள்ளார். மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனே அவரது இறுதிப்படம். 1977 ஆம் ஆண்டு, முதல்அமைச்சரானதும் அவரது சினிமா வாழ்வு முடிவுக்கு வந்தது.

சினிமாவை பொறுத்தவரையில் 1952 முதல் 'தென்னிந்திய துணை நடிகர்கள் சங்கம்' இவர் மூலம் உருவானது. படிப்படியாக தென்னிந்திய நடிகர்சங்கம் என மாற்றம் பெற்று இன்றுவரை வரலாறு படைத்துள்ளது. உபதலைவர், பொதுச்செயலாளர், செயலாளர் தலைவர் என பல உயர் பதவிகளை இவர் வகித்துள்ளார். முதல் நன்கொடையாக 501 ரூபாவை அளித்த பெருமையையும் அவருக்கே உண்டு.

எம்.ஜி.ஆர் நடித்த 50 படங்களுக்கு கண்ணதாசன் பாடல்களை எழுதியுள்ளார். தஞ்சை ராமையாதாஸ் பஞ்சி அருணாசலம் வரை 25 கவிஞர்கள் இவரது திரைப் படங்களுக்கு பாடல்கள் எழுதியுள்ளனர். இவ்வளவு கவிஞர்களின் பாடல்களுக்கு நடித்த வேறு எவரும் தமிழக சினிமாவில் இல்லை.

எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் என்ற திரைப்பட நிறுவனத்தை ஆரம்பித்தவர் இவர். அதன் மூலமே நாடோடி மன்னன், அடிமைப்பெண், உலகம் சுற்றும் வாலிபன் படங்களை வெளியிட்டார். நாடோடி மன்னன், உலகம் சுற்றும் வாலிபன், மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் ஆகிய திரைப்படங்களை இயக்கவும் செய்தார்.

சினிமாப்படங்களில் இவரது பல சாதனைகளை எவரும் இன்னும் அணுகவில்லை என்றே கூறலாம். இவரது படங்களில் சிகரட் பிடிப்பதை தவிர்த்தார். முதலமைச்சர் பதவியை 10 நாட்கள் தள்ளிப்போட்டு "மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்" படத்தை நடித்து முடித்தார். புராணப்படங்களில் நடிக்க மறுத்தவர், சரோஜாதேவி, ஜெயலலிதா ஆகியோருடன் கூடுதலாக நடித்தார். முதல்முதலாக ஜனாதிபதி விருது பெற்ற 'மலைக்கள்ளன்' படத்தில் நடித்திருந்தார். 'காஞ்சித்தலைவன்' படம் முதலாக தனது கட்டுமஸ்தான உடலைக் காட்டி நடித்தார். மூன்று படங்களுக்கு இயக்குநராக இருந்தார். 'பொன்னியின் செல்வன்' படத்தை தமிழ் ஆங்கில மொழிகளில் எழுதி நடிக்க முற்பட்ட நடிகர். ஆங்கில வசனத்தை அறிஞர் அண்ணாவால் முடிக்க முடியவில்லை. தனது ராமாவரம் தோட்டத்தில் ஆடு, மாடு, கோழி, நாய், கரடி, சிங்கம் என்பவற்றை வளர்த்த மனிதாபிமான நடிகர். 'அடிமைப்பெண்' படத்தைத் தயாரிக்க ஜெய்ப்பூர் சென்றவர் குளிருக்காக தொப்பி அணியத் தொடங்கி இறுதிவரை தொடர்ந்தார், தொப்பியும் கறுப்பு கண்ணாடியும் இவரது முக்கிய அடையாளங்கள். ஆனந்த விகடனில் 'நான் ஏன் பிறந்தேன்' தொடரையும் பின்னர் எழுதிய எனது வாழ்க்கைப் பாதையிலே தொடரையும் முடிக்க முடியாது போனார். எத்தனையோ முதன்மையான முக்கியமான சாதனைகளை நிகழ்த்திய அவரது பெருமைகளும் முற்றுப்பெறாமல் போயுள்ளது. அவரைப்பற்றி சொல்ல ஆயிரம் ஆயிரம் சுவாரஸ்யமான விடயங்கள் உள்ளன.

திருமணவாழ்விலும் புரட்சி செய்தவர் எம்.ஜி.ஆர். முதலில் தங்கமணி என்பவரை மணந்தார். உடல் நலகுறைவால் அவர் இறந்துவிட சதானந்தவதியை திருமணம் செய்தார். இவருக்கும் குழந்தைகளை இல்லை. அவரும் நோய்காரணமாக இறந்தார். மூன்றாவதாக நடிகையான வைக்கம் நாராயணி ஜானகி என்பவரை திருமணம் செய்தார். 'ராஜமுக்தி' திரைப்படத்தில் (1948) அவரே நாயகியாவார். ஜானகி முதலில் திருமணமான ஒருவர். அவரது பிள்ளை அப்பு என்ற சுரேந்திரனை வளர்ப்பு மகனாக்கிக் கொண்டார். உண்மையில் இரண்டாவது மனைவி உயிருடன் உள்ளேபாதே எம்.ஜி.ஆர் வின். என். ஜானகி ஆகியோர் ஒன்றாக வாழ்ந்து 12 வருடங்களின் பின்பு இரண்டாவது மனைவி இறந்ததும் 1962 யூன் 14ஆம் சட்டப்படி திருமணம் செய்தனர். ஜானகியின் மகனான சுரேந்திரனுடன் ஜானகியின் தம்பியாகிய நாராயணனின் குழந்தைகளான ராஜேந்திரன், மதுமோகன், கோபாலகிருஷ்ணன், ஜானகி, தீபன் ஆகிய ஐவரையும் வளர்ப்பு பிள்ளைகளாக எம்.ஜி.ஆர். தத்து எடுத்துக் கொண்டார்.


எம்.ஜி. ஆரின் அரசியல் வாழ்வு தமிழக வரலாற்றில் மிக முக்கியமானதொன்றாகும். இவர் ஒரு மலையாளி என்றாலும் தமிழ்த் தேசியவாதியாகவே திகழ்ந்தார். அதனால் 1949 செப்ரெம்பர் 17இல் உருவாக்கியிருந்த திராவிட முன்னேற்ற கழகத்தில் ஈடுபட்டு செயல்பட்டார். முற்போக்கு எண்ணங்களை கொண்ட இவர் இதில் இணைந்தது

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தி



விதுசிகா அருள்தாசன்
அகவை - 13

மகாத்மா காந்தி இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் என்னும் கிராத்தில் 02ஆம் திகதி ஒக்ரோபர் மாதம் 1869ஆம் ஆண்டு பிறந்தார். அவரது இயற்பெயர் மோகன்தாஸ். அவரது தாயின்



பெயர் புத்லிபாய், தந்தையின் பெயர் கரம்சந்த் காந்தி. அவரது தாய் மொழி குஜராத்தி. அவர் தனது 13ஆவது வயதில் கஸ்தூரிபாயை திருமணம் செய்தார். 16 வயதில் தந்தையை இழந்தார். மகாத்மா காந்திக்கு 4 பிள்ளைகள். அவர்களின் பெயர்: ஹரிலால், மணிலால், ராம்தாஸ், தேவதாஸ்.

காந்தி உயர்நிலை பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு. 1888இல் கப்பல் மூலம் லண்டன் சென்று அங்கு பல்கலைக்கழக சட்டப்படிப்பு (Law) முடித்தார். 1891இல் அவர் இந்தியா திரும்பி வந்தார். வந்த பின்புதான் தாய் இறந்த செய்தி அவருக்கு தெரியும். பின் மும்பையில் சிறிது காலம் வழக்கறிஞராக வேலை செய்தார். அந்த வேலையும் பின்னர் இல்லாமல் போனது.

தாதா அப்துல்லாஹ் கம்பெனி மூலம் தென்னாபிரிக்காவுக்கு 1893ஆம் ஆண்டு கப்பலில் சென்றார். அங்கு சென்று தாதா அப்துல்லாஹ் உறவினருக்கு வழக்கறிஞராக இருந்தார். 21 வருடம் தென் ஆபிரிக்காவில் வாழ்ந்து வந்தார். அப்போது அங்கு ஆங்கிலேயர் ஆட்சியில் நிறம், இன பாகுபாடு இருந்தது. அந்த சூழல் அவரையும் அவர் மனதை பாதித்தது. அங்கு குடியேறிய இந்திய மக்களுக்கு வாக்குரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். பல அற-வழிப் போராட்டங்கள் நடத்தினார் அதனால் சிறைக்கும் சென்றுவந்தார். இப் போராட்டங்களின் உண்மையை உணர்ந்த ஆங்கில அரசு இவர்கள் கோரிக்கைகளை ஏற்கத் தொடங்கியது. பின் இந்தியா திரும்பினார். இந்தியா வந்தவர் ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டார். இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் உப்புக்கு வரி விதித்தது. 6,000 மக்களுடன் 388 மைல் நடந்து கடற்கரை சென்று கடல் நீரை எடுத்து அதை காய்ச்சி உப்பு தயாரித்து விற்றார். அதனால் சிறக்கும் சென்று வந்தார். அவரின் போராட்டங்களால் பிரிட்டிஷ் அரசாங்கம் உப்புக்கான வரியை நீக்கியது. 1942ஆம் ஆண்டு 'வெள்ளையனே வெளியேறு' போரட்டத்தில் பங்குபற்றினார். 1947ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி சுதந்திரம் அடைந்தது.

காந்தி 1948ஆம் ஆண்டு தை மாதம் 30 பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

## Spiderman...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

வந்தது போல புதிதாக இப்படம் எடுக்கப்பட்டுள்ளது. 2019 ஜனவரி 06இல் நிகழ்ந்த Golden Golbes விருது வழங்கும் விழாவில் இப்படம் Best Animated Film விருதைப்பெற்றது. Animation படங்களை



Animationஐ நிஜத்தில் எடுத்த படம்போலத் தோன்ற வேண்டும் என எடுக்கப்பட்ட வழமையான animated படங்கள் போல அல்லாமல் ஒரு comic புத்தகம் உயிருக்கு விரும்புபவர்களும் comic கதையைப் படமாகப் பார்க்க விரும்புபவர்கள் இப்படத்தைப் பார்க்கலாம்.

VENI CANADIAN IMMIGRATION SERVICES

UTHAYAVENI THURAIRAJA
416-587-6971
2425 Eglinton Ave. East, Suite 211, Toronto, Ontario M1K 5G8, Canada
Email: immigrationconsultant.veni@yahoo.ca
Fully Licensed & Regulated Canadian Immigration Consultant

- Family Class Sponsorship
- Parent and Grandparent Super Visa Applications
- Student/Visitor/Worker - Temporary Resident Visas
- Work Permit Applications with Job Offers
- Skilled Worker Application and Employers Hiring Foreign Workers
- Business Applications - Investor/ Entrepreneur/Self Employed
- Provincial Nominee Program
- Refugee Claim
- Live-in caregiver program
- Spousal Sponsorship
- Visitors Visa - Invitation - Statuatory Declarations
- Canadian Citizenship Applications
- Canadian Experience Class
- Permanent Resident Card Renewal
- Removal Order Hearings
- Humanitarian and Compassionate Application and PRRA
- Sponsorship Appeals





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Wishing you & your family a very Happy Pongal.

## எமது வளர்ச்சிக்கு என்றும் ஆதரவு தரும் நண்பர்கள், வாடிக்கையாளர்கள், முகவர்கள், ஊடக நண்பர்கள் மற்றும் யாவருக்கும் பொங்கல் நல்வாழ்த்தினை தெரிவிக்கிறோம்




New and Experienced Sales reps/Brokers are welcome to join our successful team.

Free Real Estate classes start every week.
• Office open 7 days • 9:00 am - 9:00 pm
• Over 5,000 Sqft. office • Conveniently Located in GTA Square Mall

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

HOMELIFE HIGHER STANDARDS

For More info. Call 416.321.6969

HomeLife / GTA Realty Inc. *Brokerage

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Buying Home / Selling / Investing

Knowledge . Experience . Dedication



இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள் மற்றும் தை பொங்கல் வாழ்த்துக்கள்


உங்கள் ஆதரவுக்கு நன்றி!

HOMELIFE HIGHER STANDARDS

Indra Michael Xavier
Sales Representative
647 995 6829
indra.m.xavier@gmail.com

HomeLife/ Future Realty Inc., Brokerage*
205-7 Eastvale Dr. Markham ON, L3S 4N8
Office: 905-201-9977 Fax: 905 201 9229
*Independenlty Owned and Operated


# நிறம் மாறும் கடல்களும்... நதிகளும்



சுந்தரம் இந்திரராஜா

வானத்தின் நிறம் நீலம். நீல நிறத்தைப் பிரதிபலிப்பதால் மட்டும் கடல் நீலநிறமல்ல. சிறு குளம், குட்டை அல்லது வாசலின் முன் ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்ட நீர் இவையெல்லாம் நீல நிறத்தில் இருப்பதில்லை. ஆனால் கடல் மட்டும் ஏன் நீல நிறம்?

வானின் வெளிச்சம், தண்ணீரில் கரைந்துள்ள துகள்களின் அடர்த்தி,



கடலின் ஆழம், பார்வையாளரின் பார்வைக்கோணம் இவையெல்லாம் சார்ந்துதான் கடல் நிறமளிக்கும். சூரிய ஒளியானது கடல் நீரில் விழும்போது, சில வண்ணங்கள் உட்கிரகிக்கப்பட்டுவிடும். மற்ற வண்ணங்கள் தண்ணீரின் மூலக்கூறுகளில் மோதி சிதறடிக்கப்படும். கடல் மீது ஒளியே படாதிருந்தால் அப்பொழுது கடலின் நிறம் கறுப்புத்தான்.

அதாவது, நீண்ட அலை நீளம் கொண்ட ஒளிகளான சிவப்பு, ஆரஞ்சு மற்றும் மஞ்சள் கதிர்கள் உறிஞ்சப்பட்டுவிடும். குறுகிய அலை நீளம் கொண்ட ஒளி நீலம் மற்றும் பச்சை வண்ணங்கள் மட்டும் பெரும்பாலும் சிதறடிக்கப்படும். இதன் காரணமாகவே பச்சை கலந்த நீலம் அல்லது நீல நிறத்தில் கடல் நீர் தோற்றமளிக்கின்றது. தெளிவான வானம் உள்ளபோது சூரிய அஸ்தமனம் மஞ் சளாகத் தோன்றும். கடலில் சூரியன் மறையும் போது அது இளஞ்சிவப்பாகத் தோன்றக் காரணம் கடலுக்கு அண்மையில் உள்ள வளியில் காணப்படும் உப்புக்களே. வளிமண்டலம் மாசாகிக் காணப்படின் சூரிய அஸ்தமனம் சிவப்பாகக் காணப்படும். இது எவ்வாறு நடைபெறுகின்றது என்பதைப் பார்ப்போம்.

சூரியன் உச்சியில் இருக்கும்போது சூரிய னுக்கும், நமக்கும் இடையிலான தூரம் மிகக் குறைவாகும். இதனால் சூரிய ஒளி யின் அத்தனை நிறங்களும் ஒன்றுசேர்ந்து எமது கண்களை அடைவதால் சூரியன் வெள்ளை நிறமாகத் தோன்றும். சூரிய உதய, அஸ்தமனங்களின்போது சூரியனுக் கும், நமக்கும் இடையிலான தூரம் அதிகமாகும். இதன்போது அலை நீளம் குறைந்த நிறங்கள் எல்லாம் பரவல் தெறிப்படைந்து இறுதியில் அலைநீளம் கூடிய சிவப்பு, சிவப்பு சார்ந்த நிறங்களே கண்ணை வந்தடையும். இதனாலேயே சூரிய அஸ்தமனம் இவ்வாறு காணப் படுகின்றது.



அப்படியிருந்தும் கடல் சில வேளைகளில் பச்சையாகத் தெரிகிறதே. அதற்குக் காரணம் என்ன? கடல் ஆழமாயிருக்கும் இடத்தில் ஒளி நீருக்குள் செல்லாமல் அப்படியே நமக்குத் திரும்பி வந்து சேரும். ஆனால் ஆழமில்லாத இடங்களில் ஒளி யானது உள்ளே சென்று திரும்பும். அதனால் பச்சை நிறமாக மாறிப்போகிறது. சில சமயங்களில் ஒரே இடந்தானே நேரத்துக்கு நேரம் வேறு நிறமாய்த் தெரி யும். அதன் காரணம் என்ன? கடலில் எவ்வித மாறுதலும் இல்லை. சூரியனுடைய ஒளிதான் ஒரு நேரம் செங்குத்தாகவும் ஒரு நேரம் சாய்வாகவும் ஒரு நேரம் மேகங்களின் வழியாகவும் வரும். அதனால் கடலின் நிறம் மாறி மாறித் தோன்றும்.

இரண்டு வெவ்வேறு நீர் நிறங்கள் கொண்ட கடல்நீர் ஒரு குறிப்பிட்ட எல்லையில் சந்திப் பதும் உண்டு. இரண்டு நிறங்கள் கொண்ட மணலைக் கொண்டிருப்பதால் தான் இரண்டு நிறங்கள் கொண்ட கடல்நீர் தோன் றும். கன்னியாகுமரி கடல் பகுதி வங்காள விரிகுடா, அரபிக்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல் மூன்றும் சங்கமிக்கும் இடத் தில் அமைந்துள்ளது. மூன்று நிறங்கள் கொண்ட மணலைக் கொண்டிருப்பதால் அங்கும் மூன்று நிறங்கள் கொண்ட கடல்நீர் தோன்றும்.

**செங்கடல் (Red Sea):** ஆபிரிக்காவுக்கும், அரேபியாவுக்கும் இடையிலுள்ள எரி திரைக்கடலை அல்லது எரித்திரேயக் கடலை செங்கடல் என்றும் அரபிக்கடல் என்றும் குறிப்பிடப்படுகிறது. எரி என்னும் சொல் தீயைக் குறிக்கும். தீ செந்நிறம் கொண்டது. திரை என்பது கடல். எரி போல் காலையிலும் மாலையிலும் செந்நிறக் காட்சி தரும் கடல் செங்கடல். அந்தக் கடல் பகுதியில் சிவப்பு நிற பூஞ்சணம் முளைத்து அது அழுகும் வரை கடல் மட்டம் தீ பற்றி எரிவது போல காட்சியளிக்கும், அந்தப் பூஞ்சையின் அறி வியல் பெயர் (Trichodesmium Erythraeum Algae). இதனால் இந்தவகை பூஞ்சணம் வளரும் கடல் என்பதால் இந்தக் கடல் அப்பெயர் பெற்றது.

**கருங்கடல் (Black Sea):** கருங்கடல் நாற்புறமும் நிலத்தால் சூழப்பட்டுள்ள ஒரு கடல் ஆகும். தென்கிழக்கு ஐரோப்பாவில் இருக்கிறது. கிழக்கு ஐரோப்பாவையும் மேற்கு ஆசியாவையும் பிரிக்கும் வகையில் ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகளை ஒட்டி

(தொடர்ச்சி 35ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்பவை -9
# விழாக்கள் சம்பவங்கள்



- துறையூரான் -

எனது வீட்டுக்கு அருகாமையில், சுவாமியார் வீதி உள்ளது. இது கொழும்புத்துறை மகாவித்தியாலயச் சந்தியிலிருந்து தெற்கு நோக்கிச் சென்று கடற்கரையை அடைகிறது. இது ஒரு மைலுக்கும் குறைவான தூரத்தைக் கொண்டுள்ளது. இதற்கு முன் ஒபனேஜ் றோட் (Orphanage road) என்ற பெயர் இருந்தது. பின்னர் யோகர் சுவாமியின் ஆச்சிரமம் சந்திக்கருதில் இருப்பதால் சுவாமியார் வீதி எனப்பெயர் மாற்றஞ் செய்யப்பட்டது. இந்த வீதியில் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட ஒரு கத்தோலிக்க தேவாலயமும், ஒரு போதகர் பயிற்சிப் பாட சாலையும், கன்னியாஸ்திரிகள் மடமும், வயோதிபர் விடுதியும், ஓர் அனாதைகள் மடமும் இருந்தன. தற்போது தேவாலயம் மட்டும் உள்ளது. மற்றவையாவும் மூடப்பட்டு விட்டன. அனாதைகள் மடம் இருந்ததால் Orphanage Road எனப் பெயரிடப்பட்டிருந்தது.

போதகர் பயிற்சிப் பாடசாலையை Seminary என ஆங்கிலத்தில் கூறுவர். இங்கு பலர் போதகர்களாகப் பயிற்சிக் பெற்றனர். அவர்கள் அங்கேயுள்ள விடுதியில் தங்கிப் படித்தனர். எனவே அவர்களுக்குத் தேவையான பால், தயிர் பெறுவதற்காகப் பெரிய கேப்பசுக்களை (Cape Cows) அங்கு வளர்த்தது வந்தனர். இவை சாதாரண பசுக்களைப் போலல்லாமல் பெரிய உருவத்தை உடையனவாகவும் பல போத்தல் பாலைத்தரக்கூடியனவாகவும் இருந்தன. இவை கேப்பை மாடுகள் என எல்லோராலும் அழைக்கப்பட்டன. இந்த மாட்டுக்கும் எனக்கும் ஒரு தொடர்ப்புண்டு.

ஒரு சனிக்கிழமை நானும் எனது நண்பனும் பாடசாலைக்கு முன்னாலிருந்த ஐயர் கடையில் சாமான் வாங்கிக் கொண்டு வீடு நோக்கிப் போய்க் கொணடிருந்தோம். அப்போது எனக்கு 7 வயதிருக்கும் செமினறிக்குச் சொந்தமான ஒரு பெரிய கேப்பமாட்டை ஒருவன் எங்களுக்குப் பின்னால் கூடடிக் கொண்டு வந்தான். அது அவனையும் மீறி வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தது. இதைப்பார்த்த என் நண்பன் மாடு எங்களை இடிக்க வருகுது நாங்கள் ஓடுவோம் எனச் சொல்லிக் கொண்டு ஓட ஆரம்பித்தான். நானும் அவனுக்குப் பின்னால் ஓடினேன். சிறிது தூரஞ் சென்றவுடன் கால்தடுக்கி நான் றோட்டில் நெற்றி அடிபட விழுந்தேன். றோட்டிலிருந்த ஒரு கூரிய கல் என் நெற்றியில் பட்டுக் காயத்தை ஏற்படுத்தியது. இரத்தம் முகம் முழுவதும் ஓட ஆரம்பித்தது. இதைக்கண்டு பயந்து அவன் என்னை விட்டு விட்டு தனது வீட்டுக்கு ஓடிப்போனான். நான் எழுந்து தலையைப் பிடித்துக்கொண்டு அழுது கொண்டே வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தேன். வழியால் போன ஒருவர் என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். வீட்டில் அம்மா இரத்தத்தைத் துடைத்து விட்டார். ஆனால் காயம் ஆழமாக இருந்ததால் இரத்தம் ஓடிக்கொண்டே இருந்தது.



எமது வீட்டுக்கண்மையில் அப்போது யாழ்ப்பாணத்தில் பிரபலமான மருத்துவர் வெற்றிவேலுவின் தமக்கையார் வீடிருந்தது. அவவின் வீட்டில் முதலுதவிப் பெட்டி இருந்ததை அறிந்த தாயார் என்னை அங்கு கூட்டிச் சென்றார். அவவின் பெயர் சின்னத்தங்கம். உடனே அவ எனது காயத்தை பிளேவின் ( flavin) என்ற மஞ்சள் நீரால் கழுவிவிட்டு பஞ்சை அயடினில் தோய்த்து காயத்துக்கு மேல் வைத்து பிளாஸ்ரர் போட்டு விட்டார். அயடின் பட்டதால் எரிவு அதிகமாக இருந்தது. அதன்பின்னர் இரவு வலிக்க ஆரம்பித்தது. அக்காலத்தில் பெரிய ஆஸ்பத்திரி இல்லை. தனியார் மருத்துவர்கள் தமது மருந்துச்சாலையில் மருந்துகளை வைத்து நோயாளிகளுக்கு மருந்து கொடுத்தனர். அந்நாட்களில் யாழ்ப்பாணத்தில் P.S என அழைக்கப்பட்ட மருத்துவர் சுப்பிரமணியமும் ஒரு பிரபலமானவர். P.S என்பது Provincial Surgeon என்பதன் குறுக்கம். யாழ். குடா நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் அவரிடம் சென்றனர். எனது நெற்றிக்காயம் குணமாவதற்குப் பல நாட்கள் எடுத்தன. ஒவ்வொரு இரண்டு நாட்களுக்கொருமுறை அவவின் வீட்டுக்குச் சென்று பழைய பஞ்சைக் கழட்டிவிட்டுப் புதிய மருந்து போட்டுக் கொள்வேன். பழைய பஞ்சைக் கழட்டும்போது பெரும் வேதனையாக இருக்கும். அவ பிளேவினைப் போட்டுக் கவனமாகக் கழட்டி வைத்தியம் பார்த்தார். காயம் ஆறியபின் அந்த இடத்தில் ஓர் அடையாளம் ஏற்பட்டு விட்டது. அது இன்னும் என நெற்றியில் வடுவாக அந்நிகழ்வை ஞாபகப்படுத்திக் கொண்டு உளது.

கத்தோலிக்க செமினறியைப் பற்றி இன்னுமொரு தகவலை பரிமாறிக்கொள்ள விரும்புகிறேன். போதகர் பயிற்சிக் கல்லூரி சிறிது காலம் மூடிக் கிடந்தது. அவ்விடத்தை வாடகைக்கு எடுத்து யாழ். கல்வித் திணைக்களம் அக்கட்டிடத்தில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியை ஆரம்பித்தும் பல ஆண்டுகளாக நடத்தி வந்தது. அக்கல்லூரியில் நமக்கெல்லோருக்கும் அறிமுகமான அண்மையில் மறைந்த அலெக்சாந்தர் மாஸ்டர் ஒரு விரிவுரையாளராகப் பணியாற்றினார். அக்கல்லூரி இப்போது அங்கு இயங்குவதில்லை. அதை எப்போது மூடினார்கள் என்பது தெரியவில்லை.

அடுத்து நான் 10 வயதாய் இருக்கும்போது யாழ். முற்றவெளி மைதானத்தில் நடந்த கமலா சேர்க்கஸ் என்ற நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. யாழ்ப்பாணத்தில் நடந்த முதல் சேர்க்கஸ் நிகழ்ச்சி இதுவாக இருக்கலாமென நான் நினைக்கிறேன். இந்நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு யாழ். குடாநாட்டிலும் அண்டைய நகரங்களான வவுனியா, குருநாகல, கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து மக்கள் பல்வேறு வழிகளில் வந்து குவிந்தனர். இது மூன்று மாதங்களாக நடைபெற்றது என நினைக்கின்றேன். இது இந்தியாவின் கேளர மாநிலத்திலிருந்து வந்ததாக இருக்கலாம். சேர்க்கசுக்குத் தேவையான கூடாரப் பொருட்கள், விலங்குகள், பங்குபற்றும் சாகச விளையாட்டுக்காரர், பணியாட்கள் யாவரும் ஒரு கப்பலில் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. இக்கப்பல் கேரளாவிலிருந்து வந்திருக்கலாம். ஏனெனில் கமலா சேர்க்கஸ் கம்பனி பரியாலி கண்ணன் என்பவரின் மாணவர்களால் சிரக்காரா என்ற இடத்தில் 1948ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது (விக்கிப்பீடியா). இக்கம்பனியில் ஏறக்குறைய 300 பேர் இருந்தனர் எனவும் பல யானைகள், குதிரைகள், சிங்கங்கள், புலிகள், பறவைகள் ஆகியனவும் இருந்தன என அறியப்படுகிறது. இவ்வளவு பேரும் விலங்குகளுடன் எவ்வாறு யாழ்பாணம் வந்து சேர்ந்தனர் என்ற செய்தி எதுவும் கிடைக்கவில்லை. எனினும் இவர்களை ஏற்றி வந்த கப்பல் காங்கேசன்துறை வந்து இவர்களை விசேட வாகனங்கள் மூலம் யாழ். முற்றவெளி மைதானத்துக்கு கொண்டு வந்திருக்கலாம் என நம்ப இடமுண்டு. இக்கம்பனி ஆட்கள் காட்சிகளை முறையாக ஆரம்பிக்க முன்னர் பல்வேறு அளவுகளில் பல்வேறு கூடாரங்களை அமைத்தனர். இக்கூடாரங்களுக்கு மத்தியில் மாபெரும் கூடாரமென்று அமைக்கப்பட்டது. இதில்தான் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கக்கூடியவாறு வட்டவடிவில் படி வரிசைகளில் (கலறி ஒழுங்கில்) இருக்கைகள் அமைக்கப்பட்டன. இதற்கு 3 ரூபா அனுமதிக் கட்டணமாகவும் கதிரைகளுக்கு 5 ரூபா, 10 ரூபா எனவும் வசூலிக்கப்பட்டன. ஏராளமான மக்கள் வரிசையில் நின்று அனுமதிச் சீட்டுக்கள் பெற்று உள்ளே சென்றனர். ஒரு நாளைக்கு இரு காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

ஊஞ்சல் சாகச விளையாட்டுக்கள், புலிகள், சிங்கங்கள், கரடிகளின் பல்வேறு விளையாட்டுக்கள், ஆண்கள், பெண்களின் சயிக்கிள் ஓட்டம், நெருப்பு வளையங்களுக்கூடாகப் பாய்தல், சிங்கங்களையும் பிற விலங்குகளையும் கொண்டு பல விளையாட்டுக்கள் செய்தபோது அவற்றைச் சுற்றி இரும்புக் கூடுகள் அமைத்துப் பாதுகாப்பாக நடத்தினர். மற்றும் நெருப்பு விளையாட்டுக்களின் போதும் பாதுகாப்பு மிகவும் அக்கறையோடு செய்யப்பட்டது. மேலும் மக்கள் ஏராளமாக வந்து கூடியதால் முற்றவெளி மைதானத்தில் தேநீர்க் கடைகளும் பல்வேறு தின்பண்டங்கள் விற்கும் தற்காலிக கடைகளும் தோன்றின. அந்த இடம் ஒரே சனக்கூட்டமாகக் காட்சியளித்தது இன்னும் நினைவில் உள்ளது. மாட்டு வண்டில்கள், குதிரை வண்டிகள், கார்கள், சைக்கிள்கள் என ஒரே நெருக்கடியாக இருந்தது.


எங்கள் காலத்தில் இரு திலகங்களாகிய நடிகர் திலகம், மக்கள் திலகம் இரு வரினதும் சுவாசம் கலந்த காற்றைச் சுவா சித்தவர்களுள் நானும் ஒருவன். அதிலும் மக்கள் திலகம் எங்கள் தாயக மண்ணின் மைந்தன். மலையகத்தில் பிறந் தவர். அந்த மண்ணின் நீரைப் பருகிய தாய் வயிற்றில் உதித்தவர். தேயிலைத் தோட்டத்தின் ஈரலிப் பான சுத்தமான காற்றைச் சுவாசித்தவர். இலங்கை மக்களுக்குச் சொந்தமான மண்ணின் மைந்தன். இப்படித்தான் அவரை நான் நினைப்பதுண்டு.

பின்னாளில் புகழின் உச்சியில் அவர் உலா வந்து மக்கள் மனதில் தெய்வீக புருஷராக வைத்து வணங்கப்படும்போது அவரை ஒரு முறையேனும் நேரில் பார்த்து விடுவோமா என்று ஏங்கிய காலம் ஒன்றுண்டு.

காலம் கனிந்தது. என் ஐயாவின் (தந்தை) வடிவில் அது வந்தது. எங்களை ஐயா சங்கானையூர் தெய்வேந்திரம் அவர்களுக்கு நன்கு அறிமுகமாகிய அன்பர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் அபிமன்யு ராஜ். சண்டிலிப்பாய் அபிமன்யூ ராஜ் (மோட்டார் வாகனங்கள் திருத்துமிடம்) என்றால் மிகவும் பிரபலம். அந்தக் கராஜ் இல் எனது உடன்பிறப்பு ஒருவர் மெக்கானிக் வேலை பழகி வந்தார். தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்வதற்காக தம்பி நங்க நாதனை அழைத்து வர நானும் ஐயாவும் அபிமன்யூ ராஜ் கராஜ்குப் போயிருந்தோம். அச் சமயம் அன்பர் அபிமன்யூ ஒரு ரிக்கற்றை (நுழைவுச் சீட்டு) ஐயாவுக்கு அன்பளிப் பாகக் கொடுத்தார். "எம்.ஜி.ஆர் யாழ்ப்பாணம் வருகிறார். கோட்டை மைதானத்தில் விழா நடக்கும். போய் பாருங்கோ".

"நான் இப்படியான விழாக்களுக்குப் போவதில்லை" ஐயாவின் பதில்.

"நீங்கள் போகமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்கள் மகன் விரும்புவார்".

கனடாவில் 649 (சிக்ஸ் போர்ட்டி நைன்) விழுந்தால் ஏற்படும் புழுகம் எனக்கு. மிகுதி நிகழ்வுகளை மக்கள் திலகத்தின் இலங்கைப் பயணத்தை என்னால் எழுதப் பெற்ற 'தொலைந்து போன வசந்த காலங்கள்' நூலிலிருந்து சுருக்கித் தருகிறேன். மறக்கத்தெரியாத மனசல்லவா வாசித்து நினைவு கொள்ளுங்கள்.

'மக்கள் திலகம்' எம்.ஜி.ஆர் அவர்களுக்கு அவரது 100ஆவது ஆண்டு பிறந்த நாள் விழாவை புலம்பெயர்ந்த தமிழர் வாழும் நாடுகளில் மொன்றியல் நகரில் கொண்டாடி அமரருக்கு எங்கள் தமிழ் மக்களின் சார்பில்



நன்றி தெரிவித்து மகிழ்ந்ததையும் இங்கு பதிவு செய்து கொள்கிறேன்.

எனக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து அதாவது கலைஞர் மு. கருணாநிதி வசனம் எழுதி சிவாஜி அவர்கள் முதன்முதலில் நடித்து வெளியான 'பராசக்தி' படம் பார்த்த நாள் தொடக்கம் (100 தடவையாவது பார்த்திருப்பேன்) நான் ஒரு சிவாஜிப்பிரியன். ஆனால் மக்கள் திலகத்திடமும் விருப்புக் கொண்டவன். அதனால்தான் என்னவோ மக்கள் திலகத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது போலும்.

**"இன்பமாமுகம் தெரியுது... அது வெற்றிப் புன்னகை புரியுது".** அமரர் எம்.ஜி.ஆர் அவர்கள் தயாரித்து இயக்கிய வெற்றிப் படமான 'நாடோடி மன்னன்' திரைப்படத்தில் இடம்பெற்ற பாடல் வரிகள் இவை.

கதாநாயகன் எம்.ஜி.ஆர் அவர்கள் இரட்டை வேடம் தாங்கி நடித்த முதல் தமிழ் திரைப்படம். ஒருவர் நாடோடி, மற்றவர் இராஜகுமாரன். நாடோடியாக மக்கள் குறைகள் அறிந்தவராக வருபவர் அரசு கட்டில் ஏறும் அற்புதமான திரைக்கதை.

ஒரு காட்சியில் கதாநாயகிகளாக நடித்த மூவரில் ஒருவரான சரோஜாதேவியைக் காப்பாற்ற எம்.ஜி.ஆர் வருவார். அவர் வரவைக் கண்டதும் சரோஜாதேவியும் தோழிகளும் ஆச்சரியம் கலந்த ஆனந்த உணர்வுகளுடன் ஆடிப்பாடும் காட்சியில்... எம்.ஜி.ஆரின் திருமுகத்தைக் காட்டுவார்கள். "இன்பமாமுகம் தெரியுது...அது வெற்றிப் புன்னகை புரியுது..." என்று காட்சிக் கேற்றவாறு பாடல் வரிகள் இடம்பெறும்.

அப்படித்தான் ஒரு தீபாவளி நாளின் பின்மாலைப் பொழுதில் யாழ். முற்றவெளி

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)

# EDUCATION

## Review Questions19-2

### ➢ PHYSICS 12

A thin film coated on one side of a glass lens to reduce reflection from lens surface. Determine the minimum thickness of the coating that eliminates the reflection. Assume the index of refraction of the coating material 1.32, and glass 1.5., wavelength of light =550nm, light approximately perpendicular to the lens surface.

### ➢ CALCULUS & VECTORS 12

Given that, $\vec{P} = \hat{i} - 2\hat{j} + 3\hat{k}$

$\vec{Q} = 2\hat{i} - 3\hat{j} + \hat{k}$

(i) Find the unit vector in the direction of

$$2\vec{P} - 3\vec{Q}$$

## Answer Key : 19-1

### ➢ BIOLOGY 11 17 2

1. State viruses are not considered in any of the five-kingdom system. Viruses do not reproduce, do not have structures such as cellular membrane or cell organelles. viruses contain genes made of either DNA or RNA but not made of cells- no cell membrane, nucleus, or cytoplasm. no metabolic apparatus and do not digest, respire, and so on. can reproduce but only inside a host.

2. The stroke volume (volume of blood in a single cardiac cycle) increases when the physical fitness increases. Therefore, with the lower heart rate (no cycles/minute) heart can deliver the required amount of to tissues. During exercise body requires more supply of oxygen. This will lead to increases breathing rate and, heart rate and metabolism to speed up.


### ➢ BIOLOGY 12

(i) Mammalian cells don't have mitochondria. Therefore only depend on the Glycolysis for the derivation of energy from glucose molecules.

(ii) Muscle glycogen converted directly to glucose -1-phosphate by glycogen phosphates, which does not consume energy. But the liver glycogen converted into glucose. Therefore, one fewer ATP will be produced when liver glycogen undergoes ATP production.

(iii) 5'cap – modified by addition of 7, methyl guanosine (GTP) that is added to the 5' end. The 3' end, modified by enzymatic addition of a poly-A-tail,
(Poly-A tail – sequence of about 200 adenine nucleotides) to the 3' end of mRNA before it exits the nucleus.
These modifications inhibit degradation of mRNA in the cytoplasm, may facilitate attachment to the small ribosomal subunit and may regulate protein synthesis by facilitating mRNA's export from the nucleus to the cytoplasm.

### ➢ PHYSICS 12




Mechanical energy at point A and B are equal.( conservation of energy).

$$0 + mgR = \frac{1}{2}mv^2 + mgx$$

$v^2 = 2g(R - x)$ ; $\underline{v^2 = 2gd}$ .......(1)

When the peanut slides down normal force decreases . At point B, the peanut leaves the head, and the normal force becomes zero.

Using Newton's 2nd law,

$$mgsin\theta = N + \frac{mv^2}{R} = 0 + \frac{mv^2}{R}$$

$mgsin\theta = \frac{mv^2}{R}$; $\underline{v^2 = gr\ sin\theta}$ ......(2)

$2gd = gR\ sin\ \theta$; $sin\theta = \frac{x}{R} = \frac{R-d}{R}$

$2d = R - d$; $3d = R$ ; $d = \frac{R}{3} = \frac{12}{3} = 4\ cm$

Answer key
19- 2 next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாலை விதிகளை மீறும் பயங்கரவாதிகள்

- பேராசிரியர் கே. ராஜு -

ஆபத்தான ஆயுதங்களைக் கைகளில் ஏந்தி சமூகத்திற்கெதிராக வன்முறையைப் பிரயோகிப்போரை பயங்கரவாதிகள் என்கிறோம். அப்படி ஏதும் ஆயுதங்களைக் கைகளில் ஏந்தாமலேயே அன்றாடம் சாலை விதிகளைத் துச்சமென மதித்து தாங்கள் விரும்பியபடி வளைந்து நெளிந்து நம்மை மிரட்டும் வாகன ஓட்டுநர்களும் ஒரு விதத்தில் பயங்கரவாதிகள்தான்!

சிலர் நம் வீட்டுக்கு முன் தங்கள் காரை நிறுத்திவிட்டு சில மணி நேரம் காணாமல் போய் விடுவார்கள். வேறு சிலர் ஒரு குறுகிய தெருவை பெருமளவுக்கு ஆக்கிரமித்து குறுக்கே இருசக்கர வாகனங்களை நிறுத்திவிட்டுச் சென்றுவிடுவார்கள். இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் தலையை ஒரு புறம் சாய்த்துக் கொண்டு செல்பேசியைக் காதருகில் வைத்தவாறு உரையாடிச் செல்வது நாம் அன்றாடம் காணும் காட்சி. கார் அல்லது பஸ் ஓட்டுனர்களும் செல்பேசியில் பேசிக் கொண்டு அல்லது சற்றே திரும்பி அரட்டை அடித்துக் கொண்டு பயணிகளின் உயிரைப் பணயம் வைப்போரை எந்தக் கணக்கில் வைப்பது? வாகனத்தை ஓட்டிச் செல்லும் போது செல்பேசியில் பேசுவதைத் தவிர்க்குமாறு ஆங்காங்கே விளம்பரங்கள் வைக்கப்பட்டிருக்கலாம். இதையெல்லாம் படித்து அதன்படி செயல்படும் பைத்தியக்கார மேன்மக்கள் பாரினில் சிலரே உண்டு. ஆட்டோ ஓட்டுனர்களில் சிலர் சாலையில்



என்ன நெரிசலான போக்குவரத்து இருந்தாலும் வளைந்து நெளிந்து தலை தெறிக்கும் வேகத்தில் பறந்து உள்ளே இருக்கும் நம்மைக் கலங்கடிப்பார்கள். ஓலா, உபெர் போட்டியில் ஆட்டோக்காரர்கள் பாடு சற்று திண்டாட்டமாக மாறியிருக்கிறது. "மீட்டர் போட்டு ஓட்டினால் நாங்கள் தயக்கமின்றி ஆட்டாவில் ஏறுவோமே?" என்று பேச்சுக் கொடுத்தால் அதெல்லாம் கட்டுபடியாகாது சார் என்று ஒரே வரியில் நிராகரித்துவிடுவார்கள். பிற மாநில நகரங்களில் மீட்டர் போடும் பழக்கம் இருக்கிறது. ஆனால் தமிழக ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மீட்டர் என்றால் காத தூரம்.

நடந்து செல்வோருக்காகவென தனி நடைபாதைகள் பொதுவாக இருக்காது. அப்படியே இருந்தாலும் அவை பாதசாரிகளுக்குப் பயன்பட மாட்டா. அந்தப் பாதைகளை அடைத்துக்கொண்டு கற்கு வியல்கள், சிமெண்ட், மணல், ஜல்லிகள் அல்லது பலரகக் குப்பைகள் கிடக்கும். இடையே பள்ளங்கள் எங்கே இருக்கும் என்பதைக் கவனித்து நடக்கவில்லையெனில் கீழே விழவேண்டியதுதான். சாலையில் இடம் இருக்கும்போதே நடைபாதை மீது ஏறி வரும் இரு சக்கர வாகனங்கள் "நீங்கள் எங்கே போனாலும் நாங்கள் உங்களை விட மாட்டோம்" என்பதைச் சொல்லாமல் சொல்லும். இவை போக சாலையோர வியாபாரிகளின் பிழைப்பே நடைபாதைகளை நம்பித்தான் நடக்கிறது. இவர்கள் போக, துண்டை விரித்துவைத்து விட்டு இறைவனிடம் கையேந்துங்கள்.. அவன் இல்லையென்று சொல்வது இல்லை என்று பாடியபடி நம்மிடம் கையேந்தும் பாவப்பட்டவர்கள் ஒருபுறம் உட்கார்ந்திருப்பார்கள். நடைபாதையை விட்டு இறங்கினால்தான் நடக்க இடம் கிடைக்கும். அப்படி இறங்கினால் பின்னாலிருந்து வரும் வாகனங்கள் நம்மை நெருக்கமாக உரசியபடி கடந்து செல்லும்.

சிக்னலில் சிவப்பு விளக்கு எரியும்போது பதட்டத்துடன் நிற்கும் ஓட்டுநர்கள் மஞ்சள் வண்ணம் தெரியத் தொடங்கியதுமே வாகனத்தைக் கிளப்புவார்கள். அப்படிக் கிளப்பாமல் பச்சை வண்ணம் வரும்வரை காத்திருப்போரை பின்னால் உள்ளவர்கள் விடாமல் ஹோர்ன் அடித்து கலவரப்படுத்துவார்கள். அதைப் பொருட்படுத்தாது நிற்கும் ஓட்டுநர்களை, பின்னாலிருந்து ஓவர்டேக் செய்யும் ஓட்டுநர்கள் சில வசைச் சொற்களை அள்ளி வீசிவிட்டுக் கடப்பார்கள். எல்லோருமே ஒரு அவசர கதியில் எங்கோ ஓடிக் கொண்டே இருப்பதால் சில நொடிகள் நிற்பதற்குக்கூட யாருக்கும் பொதுவாகப் பொறுமை இருப்பதில்லை. அவசரத்தில் பஸ் எங்கே போகிறது என்பதைக் கவனிக்காமல் ஏறி விட்டால், ஓட்டுநரின் வசைச்சொல்லைத் தாங்கும் இதயம் உங்களுக்கு வேண்டும். பேருந்திலோ ரயிலிலோ ஏற, படியருகே நீங்கள் நின்றால் போதும்.. உங்களை மற்றவர்கள் உள்ளே ஏற்றிவிட்டு விடுவார்கள். அதேபோல் இறங்கும்போது படியருகே நீங்கள் சும்மா நின்றாலே போதும். உங்களைக் கீழே இறக்கிவிட்டு விடுவார்கள்.

சாலையில் செல்லும்போது இடது பக்கம் உள்ள ஒரு தெருவில் திரும்ப முயற்சிப்பீர்கள். பின்னாலிருந்து வரும் இருசக்கர வாகனம் ஒன்று உங்களை இடது பக்கம் வேகமாக முந்திச் சென்று இருக்கும் குறுகிய இடத்தில் உங்களைத் தாண்டிப் பறக்கும். நீங்கள் ஒரு வாகனத்தில் செல்லும்போது, முன்னால் செல்லும் வாகன ஓட்டுநர் சிக்னல் எதையும் காட்டாமல் சடாரென்று வலது பக்கம் திரும்புவார். நீங்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் பிரேக் அடிக்கத் தெரிந்தவராக இருந்தீர்கள் என்றால் பிழைத்தீர்கள். காலையில் வீட்டைவிட்டுக் கிளம்புவோர் மாலையில் வீடு திரும்புவது நிச்சயம் இல்லை என்ற நிலையை இந்த சாலை பயங்கரவாதிகள் அன்றாடம் ஏற்படுத்தி வருகிறார்கள்.

இதற்கெல்லாம் என்னதான் தீர்வு?

உதவிய கட்டுரை : பாலாஜி ராவ், 2018 ஒக்ரோபர் 18 ஆங்கில இந்து நாளிதழ்

"இறைவனுக்கு கொடுக்க நினைப்பதை, இல்லாதவருக்கு கொடுங்கள்".
கடவுள் யாரிடமும் கையேந்தி யாசகம் கேட்பதில்லை...



## பண்பாடோடு இணைந்த தைப்பொங்கல்



மூத்த விநாயகர்க்கு முதலில் பூசை
முன்னெடுக்கும் பொங்கலுக்கு முதலா தாரம்
ஆத்தாளின் அரவணைப்பும் அங்கே உண்டு
ஆற்றலுள்ள தந்தையின் பங்கு மாமே
பூத்துக் குலுங்கிய புதுநெல் அறுத்தே
பொன்னி அரிசியைப் புதுப்பானை யிட்டே
காத்திருந்தே பொங்கிடுவோம் கவன மாக
காலைக் கதிரவனின் காட்சி கண்டே.

காடழித்துக் கழனியாக்கிக் கார்செய் வோரின்
கடுமுழைப்புக் கானதோர் நன்றிக் கடனே
வீடதனில் பொங்குகின்ற தைப்பொங் கலாமே
வித்தைகளை மேம்படுத்தும் நன்னாள் இந்நாள்
ஆடலையும் பாடலையும் அங்கெ டுத்தே
அற்புதமாய் மேடைகளில் அணிசேர் கலைஞர்
நாடிவரும் உதயனுக்கும் மாரிசேர் ஆவுக்கும்
நற்பண்பாம் நன்றிசெய் நன்னா ளிதுவே.

பயிர்வளர்த்து களையெடுக்கும் கலைஞ ரெங்கள்
பாசத்தால் மேம்பட்ட கமக்கா ரர்கள்
உயிர்காக்கும் உத்தமர்கள் ஊருக் குழைக்கும்
உண்மையான தொழிலாளர் அவர்கள் தங்கள்
துயரத்தைத் துடைக்காத கார ணத்தால்
தற்கொலைக் காளாகும் துர்ப்பாக் கியமே
வயலின்றேல் வாழ்வில்லை வற்றா நீரும்
வளமான நிலமுமே வாழ்வா தாரம்.

பொங்குதமிழ்ச் சிற்பிகளின் பேச்சும் பாட்டும்
பொலிந்திலங்கும் இந்நாளில் பொதுமே டைகளில்
சங்கம்வைத்துத் தமிழ்வளர்த்த கால மன்று
தனியாரே மொழிவளர்க்கும் கால மின்று
மங்கிவரும் செம்மொழியை மாற்றார் மதிக்க
மாசென்று ஒதுக்குவோரும் எம்முள் உண்டே
பங்கமின்றிக் காப்பதற்குப் பணியொன் றுண்டே
பல்கலைக் கழகமதில் இருக்கை தானே!

பொங்கலன்று கொண்டாடும் சல்லிக் கட்டு
பொதுவிடத்தில் நடத்துகின்ற விளையாட் டுக்கள்
திங்களிது தையினிலே தேர்ந்த நாளில்
சிறப்பாக கொண்டாடும் சீரெழில் பொங்கல்
பங்கமிலாப் பொங்கலிலே பலரும் கலந்தே
பாசமுடன் ஒன்றிணையும் பண்ப தாமே
நம்பியரும் நங்கையரும் ஒன்று சேர்ந்து
நலன்பேணும் சமதர்மப் பொங்க லாமே.

கிளித்தட்டு சொக்கட்டான் கீர்த்த யுள்ள
காளை யடக்கல் காண்பிக்கு மிளைஞர்
களிப்பூட்டும் பொம்மலாட்டம் பொய்க்கால் குதிரை
கெந்திகும்மி சேர்ந்தநற் சேவற் சண்டை
வழிவழியாய் வந்தநற் கிராமியக் கலைகள்
மங்கி மடிவதனை மக்கள் அறிவர்
களத்துக்காய்க் காத்திருக்கும் கலைஞர் வாழ்வைக்
கலையார்வம் கொண்டவரே காத்தி டுவீர்.

முருகேசு மயில்வாகனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72 ஆண்டுகால சாதனை - அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ரெஸ்ட் தொடரை வென்றது இந்தியா!

## விளையாட்டுத் தகவல்கள் 391



**எஸ். கணேஷ்**

அவுஸ்திரேலியா - இந்தியா இடையிலான 4ஆவது மற்றும் கடைசி ரெஸ்ட் போட்டி சிட்னியில் நடைபெற்றது. நாணயச் சுழற்சி-முறையில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த இந்தியா, முதல் இன்னிங்சில் 7 விக்கெற் இழப்பிற்கு 622 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் தமது ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது. பின்னர் விளையாடிய அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 300 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுக்களும் இழந்து மீண்டும் ஒரே அணியை தொடர்ந்து ஆடும்படி கேட்டது. (follow on make them bat again ). 31 ஆண்டுகளுக்கு பிறகு சொந்த மண்ணில் அவுஸ்திரேலியா follow on ஆனது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் 322 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற இந்தியா, follow on வழங்கியது. இதனால் அவுஸ்திரேலியா தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸில் துடுப்பாட்டம் செய்தது.

4ஆவது நாள் ஆட்டத்தின்போது, 2ஆவது செசனில் தேனீர் இடைவேளைக்குப்பிறகு போதிய வெளிச்சமின்மை காரணமாக அவுஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்சில் விக்கெற் இழப்பின்றி 6 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது போட்டி நிறுத்தப்பட்டது. அத்துடன் 4ஆவது நாள் ஆட்டம் முடிவிற்கு வந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ரெஸ்ட் தொடரில் 521 ஓட்டங்கள் எடுத்து புஜாரா முதலிடத்திலும் 350 ஓட்டங்களைக் குவித்த ரிஷப் பந்த் இரண்டாவது இடத்தையும் பிடித்தனர். புஜாரா 4 ரெஸ்டில் 7 இன்னிங்சில் விளையாடி 521 ஓட்டங்கள் குவித்து முதல் இடத்தை பிடித்துள்ளார். அவரது சராசரி 74.42 ஆகும். அவர் இத்தொடரில் 3 சதம் அடித்துள்ளார். முதல் ரெஸ்டில் 173 ஓட்டமும், 3ஆவது ரெஸ்டில் 106 ஓட்டமும், 4ஆவது ரெஸ்டில் 193 ஓட்டமும் எடுத்து முத்திரை பதித்தார். மேலும் ஒரு அரைசதமும் புஜாரா அடித்து இருந்தார். புஜாராவுக்கு அடுத்தப்படியாக ரிசப் பந்த் 7 இன்னிங்சில் 350 ஓட்டங்களைக் குவித்தார். சராசரி 58.33 ஆகும். அதிகபட்சமாக 159 ஓட்டம் (ஆட்டமிழக்காமல்) குவித்து இருந்தார்.

விராட்கோலி 1 சதம், 1 அரைசதத்துடன் 282 ஓட்டங்களைக் குவித்து 3ஆவது இடத்தைப் பிடித்தார். அவரது சராசரி 40.28 ஆகும். அதிகபட்சமாக 123 ஓட்டங்கள் எடுத்தார். வேகப்பந்து வீரர் பும்ரா 21 விக்கெற் ஐ கைப்பற்றி முதலிடம் பிடித்தார். அவர் 33 ஓட்டங்கள் கொடுத்து 6 விக்கெற் வீழ்த்தியது சிறந்த பந்துவீச்சு ஆகும். ஒரு ரெஸ்டில் 86 ஓட்டங்கள் கொடுத்து 9 விக்கெற் ஐக் கைப்பற்றியது சிறந்ததாக இருந்தது. அவுஸ்திரேலிய வீரர்களில் நாதன் லயன் 21 விக்கெட் கைப்பற்றி இருந்தார். கம்மின்ஸ் 14 விக்கெட்டும், ஹாசில்வுட், ஸ்டார்க் தலா 13 விக்கெட்டும் எடுத்தனர்.

### அவுஸ்திரேலிய மண்ணில் இந்திய அணி சாதித்தது என்ன?

இந்திய அணி அவுஸ்திரேலிய மண்ணில் இதுவரை சாதித்தது என்ன? என்பதை இங்கு பார்ப்போம். இதுதான் இந்திய அணியின் முதல் அவுஸ்திரேலியப் பயணம். இந்திய அணிக்கு லாலா அமர்நாத்தும், அவுஸ்திரேலிய அணிக்கு டான் பிராட்மேனும் தலைவனாக இருந்தனர். பிரிஸ்பேனில் நடந்த முதலாவது ரெஸ்டில் இந்திய அணி இரண்டு இன்னிங்சிலும் (58 மற்றும் 98 ஓட்டங்கள்) மூன்று இலக்கத்தைத் கூடத் தொட முடியாமல் படுதோல்வி அடைந்தது. மழையால் பாதிக்கப்பட்ட 2ஆவது ரெஸ்ட் (வெற்றி தோல்வியின்றி முடிவானது) தவிர மற்ற அனைத்து போட்டிகளிலும் இந்தியாவுக்கு தோல்வியே மிஞ்சியது. அவுஸ்திரேலிய மண்ணில் சதம் கண்ட முதல் இந்தியர் என்ற சிறப்பை ஓல்-ரவுண்டர் வினோ மன்கட் பெற்றார். இத்தொடரில் பிராட்மேன் மொத்தம் 715 ஓட்டங்கள் குவித்தார்.

சிட்னியில் நடந்த 2ஆவது ரெஸ்டின்போது இந்திய வீரர் வினோ மன்கட் எதிர்பாராத சர்ச்சையில் சிக்கினார். அவுஸ்திரேலிய துடுப்பாட்டத்தின்போது எதிர்முனையில் நின்ற பில்லி பிரவுன், பந்து வீசப்படுவதற்கு முன்பே கிரீசை விட்டு நகர்ந்து செல்வதை கவனித்த மன்கட், பந்து வீசுவதுபோல் ஓடி வந்து திடீரென ஸ்டம்பு மீது இருந்த பெய்ல்சை தட்டிவிட்டு ஓட்டமிழப்பு கேட்டு அப்பீல் செய்தார். அந்த சமயம் பில்லி பிரவுன் கிரீசை விட்டு வெளியே நின்றதால் ரன்-அவுட் வழங்கப்பட்டது. இது உண்மையான விளையாட்டு வீரர்களுக்கு அழகல்ல என்று அங்குள்ள ஊடகங்கள் குறைகூறின. அதேசமயம் பிராட்மேன் உள்ளிட்டோர் மன்கட்டின் செயலை ஆதரித்தனர். இந்த சம்பவத்துக்கு பிறகே இந்த மாதிரியான ரன்-அவுட்டுக்கு 'Men cutted' என்று அழைக்கப்படுகிறது.

நவாப் பட்டோடி தலைமையிலான இந்திய அணி 4 ரெஸ்டுகளிலும் தோல்வி அடைந்தது. பிரிஸ்பேனில் நடந்த 3ஆவது ரெஸ்டில் மட்டும் இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு தென்பட்டது. இதில் 395 ஓட்டங்கள் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 355 ஓட்டங்களுக்கு எல்லா விக்கெற்றுக்கயையும் இழந்து 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்டது.



பிஷன்சிங் பெடி தலைமையிலான இந்திய அணியில் கவாஸ்கர், வெங்சர்க்கார், குண்டப்பா விஸ்வநாத், மொகிந்தர் அமர்நாத் என தலைச்சிறந்த வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். முதல் இரு ரெஸ்டுகளில் முறையே 16 ஓட்டங்கள் மற்றும் 2 விக்கெற் என்று நூலிழை வித்தியாசத்தில் தோல்வி அடைந்த இந்திய அணி மெல்பேர்னில் நடந்த 3ஆவது ரெஸ்டில் 'செக்' வைத்தது. இதில் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வாகை சூடிய இந்திய அணி அவுஸ்திரேலிய மண்ணில் முதலாவது வெற்றியை பதிவு செய்தது. சுழற்பந்து வீச்சாளர் பக்வத் சந்திரசேகர் இரண்டு இன்னிங்சிலும் தலா 6 விக்கெற் வீதம் வீழ்த்தி பிரமிக்க வைத்தார். சிட்னியில் நடந்த அடுத்த ரெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் வெற்றிபெற்றது. இதனால் தொடர் யாருக்கு என்ற எதிர்பார்ப்பை உருவாக்கிய கடைசி ரெஸ்டில் இந்திய அணி 495 ஓட்டங்கள் இலக்கை நெருங்கிவந்து 445 ஓட்டங்களில் அனைவரும் ஆட்டமிழந்தனர். இந்திய அணி, அவுஸ்திரேலியாவுக்கு கடுமையான சவால் கொடுத்த தொடராக இது அமைந்தது.

3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது. சுனில் கவாஸ்கர் தலைமையிலான அணி முதல் ரெஸ்டில் தோற்றாலும் மெல்பேர்னில் நடந்த கடைசி ரெஸ்டில் வெற்றிபெற்று தொடரை இழக்காமல் தப்பித்தது. இதன் 2ஆவது இன்னிங்சில் அவுஸ்திரேலியாவை இந்திய பந்துவீச்சாளர்கள் 83 ஓட்டங்களில் வீழ்த்தினர். இந்த நாள் வரைக்கும் இந்தியாவுக்கு எதிராக அவுஸ்திரேலியாவின் மோசமான மதிப்பெண்ணாக நீடிக்கிறது. 2ஆவது ரெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.


கபில்தேவ் தலைமையில் அடியெடுத்து வைத்த இந்திய அணி மூன்று ரெஸ்டிலும் சமன் கண்டது. இதில் சிட்னியில் நடந்த கடைசி ரெஸ்டில் இந்தியா முதல் இன்னிங்சில் 600 ஓட்டங்கள் குவித்ததும், முதல்நிலை 3 துடுப்பாட்டக்காரர்களான கவாஸ்கர் (172 ஓட்டங்கள்), ஸ்ரீகாந்த் (116 ஓட்டங்கள்), மொகிந்தர் அமர்நாத் (138 ஓட்டங்கள்) ஆகியோர் சதம் அடித்ததும் குறிப்பிடத்தக்க விடயமாகும். அவுஸ்திரேலிய வீரர் ஸ்டீவ்வாக் இந்தத் தொடரின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டுக்கு அறிமுகமானார்.

முகமது அசாருதீன் தலைமையில் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ரெஸ்ட் தொடரில் பங்கேற்று 4இல் தோல்வியடைந்தது. மற்றொரு போட்டி 'சமன்' ஆனது. இளம் வீரராக வந்த சச்சின் தெண்டுல்கர், உலகின் அதிவேக ஆடுகளமான பெர்த்தில் 111 ஓட்டங்கள் விளாசியது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இதேபோல் சிட்னி ரெஸ்டில் ரவிசாஸ்திரி 206 ஓட்டங்கள் எடுத்து, அவுஸ்திரேலியாவில் இரட்டை செஞ்சுரி அடித்த முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்றார். அவுஸ்திரேலியா சுழல் சூறாவளி ஷேன் வார்னே இந்தத் தொடரின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டுக்குள் நுழைந்தார்.

சச்சின் தெண்டுல்கர் தலைமையில் சென்ற இந்திய அணிக்கு மூன்று டெஸ்டிலும் பலத்த அடி விழுந்தது. 4 போட்டிகள் கொண்ட இந்தத் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது.

இந்திய அணிக்கு சவுரவ் கங்குலி தலைவராகப் பணியாற்றினார். இதில் அடிலெய்டில் நடந்த 2ஆவது ரெஸ்டில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தத் தொடரை அவ்வளவு எளிதில் யாரும் மறந்துவிட முடியாது. அவுஸ்திரேலிய வீரர் சைமன்ட்சை, இந்தியாவின் ஹர்பஜன்சிங் இனவெறியுடன் குரங்கு என்று திட்டியதாக எழுந்த பிரச்சினை இப்பயணத்தில்தான் அரங்கேறியது. அப்பீலுக்கு பிறகு ஹர்பஜன்சிங் அபராதத்துடன் தப்பினார். அதன் தொடர்ச்சியாக பெர்த்தில் நடந்த 3ஆவது ரெஸ்டில் இந்திய அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை தோற்கடித்தது. பெர்த்தில் வெற்றி கண்ட முதல் ஆசிய அணி என்ற வரலாறும் இந்தியா வசம் வந்து சேர்ந்தது. இந்திய அணிக்கு கும்பிளே தலைவனாகவும், டோனி விக்கெட் காப்பாளராகவும் செயல்பட்டனர்.

உலக சாம்பியன் மகுடத்தை சூடியதோடு சென்ற தோனி தலைமையிலான இந்திய அணியை 4 ரெஸ்டிலும் அவுஸ்திரேலிய அணியினர் தெறிக்கவிட்டனர். இதில் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது. 2ஆவது ரெஸ்டில் அவுஸ்திரேலிய தலைவர் மைக்கேல் கிளார்க் முச்சதம் (329 ஓட்டங்கள்) அடித்தார். இன்னொரு போட்டியில் டேவிட் வார்னர் 69 பந்துகளில் சதம் எடுத்தனர். அவுஸ்திரேலியாவில் தெண்டுல்கர் ஆடிய கடைசி தொடர் இதுதான். அவர் 2 அரைசதம் உள்பட 287 ஓட்டங்கள் எடுத்தார். முச்சதம், இரட்டை சதம் என மொத்தம் 626 ஓட்டங்கள் எடுத்த கிளார்க் தொடர் நாயகனாக அறிவிக்கப்பட்டார். இந்தத் தொடரின் முதல் இரு ரெஸ்ட்ரில் தோற்ற இந்தியா கடைசி ரெஸ்ட்ரில் சமன் கண்டது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கத்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

கலை அரங்கில் நானும் அந்த இன்பமா முகத்தைப் பார்த்தேன். பரவசம் கொண்டேன். வெற்றிப் புன்னகை சிந்திய அந்த அழகுத் திருமுகத்தை பார்த்து ரசித்தேன்.

சுமார் 44 ஆண்டுகளுக்கு முன் ஒரு தீபாவளி நன்னாளில் தமிழரின் இதயங்களில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் இதய தெய்வமான ஒரு மாபெரும் கலைஞர், தலைவர், ஏழைகளின் துயர்துடைக்கும் ஆபத்தாந்தவனாக, அநாதை இரட்சகனாக, ஈழத்தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்தை அங்கீகரித்த அண்ணனாக, ஆயிரம் சூரியர்களின் ஒளிசிந்தும் முகமலர்ச்சியுடன் வந்தார். மக்களின் இதயங்களை வென்றார். வெற்றித் திருமகனாக இலங்கைத் தீவெங்கும் வலம் வந்தார் அந்தப் புரட்சித் தலைவர், பொன்மனச்செம்மல், மக்கள் திலகம், எம்.ஜி.ஆர் அவர்கள்.

மருதூர் கோபலகிருஷ்ணமேனன் சத்திய பாமா தம்பதிகளின் தெய்வத் திருமகனாக தன்பால் உயிரன்பு கொண்டு வரவேற்கக் காத்திருக்கும் இரகசிகப் பெருமக்களின் அன்பிற்கு நன்றி தெரிவிக்கவும் வந்தார், வென்றார்.

இலங்கையின் பிரபல சன் (ஆங்கிலம்), தவசா (சிங்களம்), ராத (தமிழ்) ஆகிய மூன்று பத்திரிகை வெளியீட்டு நிறுவனங்களின் அழைப்பை ஏற்று 1965 ஒக்ரோபர் 21ஆம் திகதி கொழும்பு மாநகரில் வந்திறங்கினார். மக்கள் திலகம் அவர்கள் புகழ்பெற்ற திரையுலக நாடகக் கலைஞர் மட்டுமல்ல தி.மு.க.வின் முக்கிய தலைவர்களுள் ஒருவர். இலட்சக்கணக்கில் தி.மு.க. தொண்டர்களை இயக்கத்தின்பால் கவர்ந்திழுத்த காந்தருபன். எனவே அரசியல் காரணங்களால் முதலில் அவர் வருகை விரும்பப்படவில்லை.

எம்.ஜி.ஆர் அவர்கள் "மக்கள் திலகம்" ஆனபடியால் இங்கும் அவர் சிங்கள தமிழ் மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருந்தார். கொழும்பு, கண்டி, நுவரெலியா, மட்டகளப்பைத் தொடர்ந்து ஈழத்தமிழரின் சரித்திரத் தலைநகரமான சங்கிலி மன்னனின் யாழ்ப்பாணம் மாநகர் வந்தார்.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திற்கு விமானம் வந்ததும், நகரசபையினரால் பூரண கும்பம் வைத்து வரவேற்கப்பட்டார்.

மழை பெய்த வண்ணம் இருந்தாலும் திறந்த ஜீப்பில் மக்கள் திலகமும் அவருடைய அப்போதைய திரைக்கதாநாயகி 'அபிநய சரஸ்வதி' சரோஜாதேவி அவர்களும் மழைத் துளிகளில் நனைந்தபடியே பலாலியிலிருந்து வீதியில் இருமருங்கும் கூடியிருந்த நமது தமிழ் மக்களின் வாழ்த்தொலிகளைக் கேட்டபடி யாழ். முற்றவெளி கலையரங்கை வந்தடைந்தனர்.

அவர்கள் மேடையேறியதும் கோட்டை மைதானம் அதிர்ந்தது. மக்களின் வாழ்த்தொலிகள் வானுயர்ந்தொலித்தது. என் விழிகள் மகிழ்ச்சியில் குளமானது. சூரிய வெளிச்சத்தைப் பார்த்துக் கண்கள் கூசுவது போல் அவர் சிவந்த மேனியில் அப்படியொரு ஒளிக்கவர்ச்சி. பட்டு வேட்டியும் ஜிப்பாவும் அணிந்திருந்தார்.

கைக்குட்டையால் தலையைத் துடைத்துக் கொண்டிருந்தார். நாலு திசையும் மக்களை நோக்கி புன்சிரிப்புடன் வணக்கம் செலுத்தினார். கைகளை அசைத்தார். அந்தப் பெரியவரின் இன்பமுகத்தில் புன்சிரிப்பின் ஒளி கண்டேன்.

இலங்கை அரசின் அப்போதைய தலைமை நீதிபதிகளில் ஒருவரான உயர் திரு.H.W. தம்பையா அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

தலைமை நீதிபதி பேசும்போது "தம்முடைய வாழ்நாளிலேயே இப்படியொரு பெருங் கூட்டத்தைத் தான் இப்பகுதியில் கண்டதில்லை என்றும், எம்.ஜி.ஆர் அவர்கள் கலைஞர் மட்டுமல்ல, நல்ல கொடையாளி, மக்கள் இதயங்களிலே வீற்றிருக்கும் நல்லவர். அவரது நல்ல எண்ணங்களே இன்று அவரை மக்கள் மத்தியிலும் வாழ வைக்கிறது" என்று சொல்லிப் பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தார்.

பிரபல நடனக் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரதும் அவரது மாணவன் காங்கேயன்துறை ஆனந்தராஜாமாணிக்கம்



(குத்துவிளக்கு கதாநாயகன்) ஆகியோரது நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ஏற்கனவே தமிழ்பெரியவர்களின் உரை வீச்சுக்களினால் தமிழ்மொழி மீது காதல் கொண்டிருந்த எனக்கு மக்கள் திலகத்தின் தமிழ் வீச்சு புதிய உத்வேகத்தை வழங்கியது.

யாழ். கோட்டை மைதானத்தில் முழங்கும் முதல் குரல் அது. "கலைஞன் என்பவன் தன் வாழ்வை ஒழுங்காக அந்த நாட்டின் பண்பாட்டுக்கிணங்க அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் நாட்டின் தொண்டனாகி வழிகாட்டியுமாகிறான். அதாவது நாம் சொல்லுவது "அண்ணா மா-திரியாகிறான்" என்று குறிப்பிடலாம். இந்த நாட்டில் நான் பிறந்தவன், கேரளம் என்னை வளர்த்தது. தமிழகம் என்னை வாழ வைத்தது. அப்படியானால் நான் யாருக்குச் சொந்தம் உங்களைப் போன்ற நல்லவர்களுக்கெல்லாம் நான் சொந்தமானவன். நான் "நாடோடி மன்னன்" அல்ல. ஒரு நாடோடி என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.
தமிழ்மொழி அழகான, இனிமையானது, அமுதம் போன்றது. அந்த மொழியின் உண்மையான சொந்தக்காரர்கள நீங்கள். மொழியைப் பாதுகாக்க ஒற்றுமையாக வாழுங்கள், ஒன்றுபடுங்கள். வாழும் நாட்டுக்கு நம்பிக்கையாக வாழுங்கள்..." என்று அவர் சுமார் 54 ஆண்டுகளுக்கு முன் பேசிய தமிழ்ப் பேச்சு இன்றும் என் காதுகளில் எதிரொலிக்கின்றது.

சரோஜாதேவி அம்மையாரும் நன்றி கூறினார். "இலங்கைக்கு நான் வந்தது தவறா?" என்று எம்.ஜி.ஆர் கூட்டத்தினரைக் கேட்டபோது "இல்லை, மீண்டும் வாருங்கள்" என்று மக்கள் குரலெழுப்பினர். மீண்டும் அவர் இலங்கை வரமால் இருந்திருக்கலாம். ஆனால் இன்றும் இலங்கைத் தமிழர்களின் இதயங்களில் வாழ்கிறார்.

காலம் மாறியது. இலங்கையில் அரசியல் நிலவரங்களும் திசைமாறின. தந்தை செல்வா, மட்டக்களப்பு திரு. இராஜதுரை போன்ற தலைவர்களுக்கூடாக தமிழ் மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகளைப் பற்றியும் அவர்களின் இனம், மொழி உணர்வுகளை அறிந்து வைத்திருந்தமையாலும் தமிழ் மக்களின் நியாமான போராட்டத்துக்கு வலுசேர்க்கக்கூடிய தகைமை தலைவர் பிரபாகரன் அவர்களிடமே பூரண மாகப் பொதிந்து கிடந்த உண்மைகளையும் கண்டறிந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பகிரங்க ஆதரவாளராக இருந்தார். தமிழக அரசு முதலமைச்சராக இருந்த காலத்தில் இலங்கைத் தமிழினம் சுதந்திர இனமாக வாழ என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அனைத்து உதவிகளை எல்லாம் அள்ளி வழங்கிய வள்ளல் எம்மை விட்டு மறைந்தது எவ்வளவு பேரிழப்பாகும்.

மீண்டும், மீண்டும் எம்.ஜி.ஆர் போன்ற புண்ணிய புருஷர்கள் இந்த மண்ணில் அவதாரம் எடுக்க வேண்டும்
"அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும்
இதோ இந்த அலைகள் போல தவழ வேண்டும்
ஒரே வானிலே ஒரே மண்ணிலே
ஒரே கீதம் உரிமை கீதம் பாடுவோம்..."
என்று மக்கள் திலகத்தின் பாடல் உண்மையாக வேண்டும். மனசு தொடரும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






21 தைப்பூசம்.
வெடிச்சத்தமில்லாமல் பொங்கும் மணம் வீசாமல் பொங்கல் அமைதியாக முடிந்துவிட்டது. ரூபயும் ரூபனும் பொங்கலுக்கு இணைந்து வழங்கிய வெண் பொங்கலும் சாம்பாரும் உலகர் குளாம் விரும்பியோ விரும்பாமலோ சாப்பிட்டு முடித்துவிட்டது...



ஹப்பி பொங்கல் வட்ஸ்அப்பிலும் முகம்தெரியாதவர்களுடன் பேஸ் புக்கிலும் கொண்டாடி முடிந்துவிட்டது... மழை விட்டாலும் தூவாணம் போகவில்லை என்பது போல வட்ஸ்அப்பிலும் அதிலும் இதிலும் வந்துகொண்டேயிருந்தது கலகலப்பான ஆங்கில புது வருட வாழ்த்துக்கள்.



யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது, கொழும்பில் என்ன நடக்கிறது பழையன கழிதலும் புதியன புகுதலும்... உள்நாட்டில் கைதுசெய்யப்பட்ட (அகதிகள்) தமிழர்கள், மறுவாழ்வளிக்கப்பட்ட போராளிகள், பறிக்கப்பட்ட அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் அது இது எல்லாம் மறைந்துபோச்சு...

கேரள கஞ்சா கடத்தலில் தமிழர் கூட்டமைப்புக்கு தொடர்பா... பாராளுமன்றத்தில் வீசப்பட்ட மிளகாய் வன்னிச்செத்தலா.. வடமராட்சி செத்தலா ?? இன்ரப்போல் பொலிஸ் தலையிடுமா எனும் திறில் செய்திகளேயன்றி ஆக்கபூர்வமாக ஒன்றுமில்லை. புதிய சண்டைகள் வரும்போது பழைய சண்டைகள் பின்தள்ளப்படுகிறது.




சுவையான திருட்டு செய்திகள்
உலகண்ணை திருப்பதி வெங்கடாசலபதி கோவில்லை கொம்பி யூட்டரிலை ஏதோ பிழையாம் இருபத்தாறாயிரம் (26000) லட்டு போயிருக்காம்...

உலகர் சிரித்துக்கொண்டு சொன்னார். கடவுள் மனிதனை படைக்கிறான். மனிதன் கடவுளை தனது நினைவுக்கேற்றமாதிரி கடைந்தெடுக்கிறான்.



இருபத்தி ஆறாயிரம் (26000) லட்டு களவு கசப்பான இனிப்புச்செய்தி ஆலயங்களில் வெளியே செருப்பை சைக்கிளை மோட்டார் சைக்கிளை திருடுகிறார்கள். ஆலயத்தின் உள்ளே உண்டியலை ஆண்டவனின் நகைகளை. விக்கிரகங்களை திருடுகிறார்கள்.

மனிதன் பிழைவிடுவது சகஜம் அதற்கு பரிகாரம் உண்டு... ஆனால் ஆலய பலகாரம் இனிப்பையே கையாடுகிறான்...



தொழில் நுட்பம் வளரும் நாடுகளில் மது பானக்கடைகளில் மதுவைத் திருடுகிறார்கள், மேப்பிள் மரத்தில் வரும் மேப்பிள் சிரப் பல லட்சம் டொலர் பெறுமதியானவை திருட்டுப்போகிறது.

"பாவியென்னை மறுபடியும் பிறக்கவைக்காதே செய்த பாவமெல்லாம் தீரும் வரை இறக்கவைக்காதே" உலகரின் மனம் திருப்பதி லட்டு களவிலேயே நின்றது


உலகண்ணை இஞ்சை கடையள்ளை ஒரு பேனை பென்சில் களவெடுத்தாலே சொப் லிவ்ரிங் கிறிமினல் குற்றம் பொலிஸ் அறஸ்ற்பண்ணி கோட்டுக்கு கூட்டிக் கொண்டுபோய் எவ்வளவோ சிக்கல்....

உவ்வளவு லட்டு களவெடுத்தாக்களுக்கு என்ன நடக்கும் என்று சீனி குறைத்த ரீயைக்குடித்தபடி கேட்டா செக்கண்ட்புளோர் செல்லம்மா.. உலகர் பதில் சொல்லவில்லை சிந்தித்தார். எந்த மனிதரினின் பிழை கவலையின் உச்சக்கட்டம் இதுதான். பிழை விட்டவன் மனதுக்குள் கடவுளிடம் மன்னிப்பு கேட்கிறான்


கற்பூரத்துடன் சிலரது வேண்டுகோள்... சிதறு தேங்காய் கற்பூரத்துடன் சிலர் பால் பழம் அபிசேகத்துடன்... சிலர் உணவைச் சுருக்கி விரதம் இருப்போர் ஆலயம்தானே என வழங்கும் பிரசாதத்தை உண்டு கொழுத்தோர் சிலர்

ஏதோ அதிர்ச்சி செய்தியைக் கேட்டதுபோல் ஐ பொட் அகிலா தொடங்கினா செல்லா... யு நோ வட்... இந்தியாவிலேயே அதிகவருமானம் உள்ள கோவில் திருப்பதிதான் ஒரு பெரிய லட்டு 100 ரூபாய் சாதாரண றொட்டிக் கடைகளே எல்லாப் பக்கமும் கமெறா பூட்டி வைச்சிருக்கினம். உவ்வளவு பணமுள்ள கோவில்லை ஏன் ஒழுங்கான பாதுகாப்பில்லை எனச்சொல்லிவிட்டு

கூகிள் கோகிலாவைப்பார்த்து கோகி... உம்முடைய கசின் அமெரிக்காவிலை இருந்து வந்ததெண்டு சொன்னீர்... ஒருநாளைக்கு கூட்டிக்கொண்டு வாரும். என சொல்லும்போது



நேற்றுத்தான் கசின் வந்தவ அவ கலிபோர்னியாவிலை இருக்கிறவ நாங்கள் கலி போர்னியா.. கலா எண்டுதான் கூப்பிடுறநாங்கள். அமெரிக்க மெச்சிகன் போடர் சுவர்கட்டுறதிலை ஜனாதிபதி ட்றம்பிற்கு கன பிரச்சினையாம் எப்பிடி கட்டுறதெண்டு திக்கு முக்காடுறாராம் என்டு கலிபோர்னியா கலா சொன்னவ... என்று சொல்லும்போது...




செக்கண்ட்புளோர் செல்லம்மா சொன்னா ஏன் ஜனாதிபதி ட்றம் சீனாவோடை நல்லசினேகிதம் உலகத்திலேயே பெரிய சுவரை கட்டினது சீனா உலக அதிசயத்திலை சீனச்சுவரும் ஒண்டு அதைக்கட்டின பரம்பரையிலை ஆரன் இருந்தா கூப்பிட்டு கட்டலாம் தானே.

ஆட்டிடலறி அன்னம்மாவின் உலகரைப்பார்த்து சிரித்துக்கொண்டு சொன்னாகாதில் ஏன் ட்றம் மாறாட்டக்காரர் மாதிர் கதைக்கிற இலங்கை ஜனாதிபதி மைத்திரி, முந்தின ஜனாதிபதி இப்ப இடைக்கிடை பிரதமராக வந்து போற ராஜபக்ச எல்லாரோடையும் சினேகிதம் தானே...

அவேன்ரை ஆமியைக்கொண்டு முள்ளுக்கம்பி அடிப்பிக்கலாம்தானே என்று சொல்ல எல்லோரும் சிரிக்க... ரூபன் கதவைத் திறந்துகொண்டு வரும்பொழுது... யாரோ பின்னால் வந்ததைக்கண்டு ஐ பொட் அகிலாண்டேஸ்வரி... ஆச்சரியத்துடன்... கலா... எப்பிடி இடத்தை கண்டுபிடிச்சனீர் என கேட்க...

ஆட்டிடலறினம்மா செக்கண்ட்புளோர் செல்லம்மாவிடம் உது தான் கலிபோர்னியா கலா என்று முணுமுணுத்தா......

ஞாபகம் இருக்கிறதா? 01-15-2019 - 01-31-2019



15. சபரிமலை ஐயப்பன் மகரஜோதி



15. பட்டிப்பொங்கல்

15. 1799 ல் இலங்கைக்கு அடிமைகள் கொண்டுவருவது முற்றாக தடை-செய்யப்பட்டது
(ஆனால் தமிழர்கள் அகதிகளாக்கப்படுவது நிற்பாட்டப்படவில்லை)



17. மக்கள் திலகம் (மருதூர் கோபால மேனன் ராமச்சந்திரன்)
எம்.ஜி.ராமச்சந்திரன் பிறந்த தினம் 1917ம் ஆண்டு 17ம் திகதி (ஹந்தானா) கண்டியில் பிறந்தவர் (17ஜனவரி 1917...24 டிசம்பர் 1984)
1932ல் வெளிவந்த சதி லீலாவதியில் அவர் பெற்ற சம்பளம் நூறு ரூபாய்



19. சீர்காழி எஸ்.கோவிந்தராஜன் (1933..1988)

20. ராமநாதன் பெண்கள் கல்லூரி ஆரம்பமானது

24. சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில் நினைவுதினம் (1965)



25. சுன்னாகம் குமாரசாமிப்புலவர் (நினைவுதினம்)


30. மகாத்மா காந்தி நினைவு தினம்



30. அபிராமிப்பட்டர் தினம்

ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்
தைமாதக் கலந்துரையாடல்
"தமிழர் பண்பாட்டு மரபின் இயங்குநிலை"
சிறப்புப் பேச்சாளர்கள் உரை:
"தமிழர் பண்பாட்டு மரபின் இயங்குநிலை" - பேராசிரியர் இரா.மோகன்
"தொடரும் வழமைகள்" - திரு த.சிவபாலு M.A
"மறையும் வழமைகள்" - கலாநிதி ச.சிவநாயகமூர்த்தி M.A
"அருகும் வழமைகள்" - திரு. வைரமுத்து திவ்வியராஜன்
கவி அரங்கு
மயர்தெளிதல் அரங்கு
நாள்: 26-01-2019
நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை
இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
Unit 7, 5633, Finch Avenue East
Scarborough, M1B 5K9
(Dr. Lambotharan's Clinic - Basement)
கவி அரங்கு
தலைமை: கவிஞர் அகணி சுரேஸ்
பங்குபெறும் கவிஞர்கள்:
கவிஞர் மாவிலி மைந்தன் சி.சண்முகராஜா
கவிதாயினி பவானி தர்மகுலசிங்கம்
புலவர் முருகேசு மயில்வாகனன்
தீந்தமிழ்ப் பாவலன் வே.இராசலிங்கம்
அருட்கவி ஞானகணேசன்
கவிஞர் கவி விமலநாதன்
கவிஞர் இராஜ்மீரா இராசையா
கவிஞர் குமரகுரு கணபதிப்பிள்ளை
தொடர்புகளுக்கு: அகில் - 416-822-6316
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
அனுமதி இலவசம்!

"நாம் இல்லாத ஒரு இடத்தில் கூட நமக்கு
மரியாதை கிடைக்குமானால்
அதுவே நாம் வாழ்ந்ததின் அடையாளம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக நீளமான கடல் பாலம் குவைத்தில் திறக்கப்படுகிறது

- கலீல் பாகவீ - பரங்கிப்பேட்டை

உலகின் நான்காவது மிக நீளமான கடல் பாலம் குவைத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு 2019 பிப்ரவரி இறுதியில் திறக்கப்பட இருக்கிறது.

குவைத் தற்போது வளைகுடா நாடுகளில் மிக வேகமாக வளரும் நாடுகளின் பட்டியலில் உள்ளது. இந்த நிலையில் அந்த நாட்டின் வளர்ச்சிக்கு கட்டுமானத் துறை மிக முக்கியமான காரணமாக உருவெடுத்து இருக்கிறது. அதன் ஒரு கட்டமாக குவைத்தில் உலகிலேயே நான்காவது மிக நீளமான கடல் பாலம் "ஷேக் ஜாபர் அல் அஹமது அல் சபாஹ் கடல் பாலம்" என்ற பெயரில் கட்டப்பட்டு இருக்கிறது. இந்தப் பாலம் கடல் மீது கட்டப்பட்டு இருப்பதுதான் வியக்கத்தக்க விடயம் ஆகும்.



"பட்டு நகரம்" என அழைக்கப்படும் "சுபையா நகரம்", மக்கள் வாழ முடியாத பகுதியாக அறிவிக்கப்பட்டது. அங்கு, அதிக முதலீடுகளை கவரும் விதத்தில் இந்தப் பாலம் கட்டப்படுவதாக குவைத் அரசு தெரிவித்துள்ளது. குவைத் நகரையும், சுபையா நகரத்தையும் இணைக்கும் வகையில் அங்கு ஏற்கனவே ஒரு தரை வழிப்பாதை இருக்கும் நிலையில், அந்தப் பாதையூடாக சுபையா சென்றடைய 70 நிமிடம் தேவைப்படுகின்றது. ஆனால், இந்தப் புதிய கடல் பாலம் மூலம் 20 நிமிடத்தில் சுபையா சென்றடைந்து விடலாம்.

இப்பாலம் 36 கிலோ மீற்றர் நீளத்திற்குக் கட்டப்பட்டு இருக்கிறது. இதில் 27 கிலோ மீற்றர் பாலம் கடலில் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தை கட்ட 5 வருடம்



ஆகியுள்ளது. 2013 நொவம்பரில் இப் பாலத்தை கட்டத் தொடங்கி இருக்கின்றனர். சுமார் 300 கோடி டொலர் செலவில் இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. கடலுக்கு நடுவில் பெரிய அளவில் தூண்கள் நிறுத்தப்பட்டு பாலம் அமைக்கபட்டுள்ளது. அத்துடன், இப்பாலம் பயன்பாட்டிற்கு வரும் நேரத்தில் சுபையா நகரில் சுமார் 100 கோடி டொலர் அளவுக்கு முதலீடுகள் குவியும் என குவைத் அரசு நம்புகிறது. மேலும், அங்கு 5 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய மின் ஆலை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதனிடையே இக்கடல் பாலத்திற்கு கடந்த 2006ஆம் ஆண்டு உயிரிழந்த குவைத் இளவரசர் ஷேக் ஜாபர் அல் அஹமது அல் சபாஹ் அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த பாலம் 2018 டிசம்பர் இறுதியில் திறக்கப்பட திட்டமிடப்பட்டிருந்தது. சில காரணங்களால் தாமதமானது. இப்பாலம் பயன்பாட்டிற்கு தயாரானதையடுத்து சோதனை ஓட்டங்கள் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# கண்முன் வாழ்ந்த கர்ணன்!



இளமையில் வறுமை(யின்) கொடுமை
இனியதந்தையை இழத்தலும் கொடுமை
வளமுடன் படித்து வாழ்விலுயர
வசதிகளின்றிப் போதலும் கொடுமை
அளவிலாப் பாசம் அன்னையின்மீது
அதுபோல் பாசம் நடிப்பின்மீது
உளமதில் கொண்ட உறுதியினாலே
உழைப்பால் உயர்ந்த உன்னதமனிதர்!

மேடையில் நடித்து நடிகருமானார்
மேதினிபுகழ சினிமாவிலும் நடித்தார்
கோடையிடியென மேடையில் முழங்கும்
கோமளகுரலோன் அண்ணாவின் தம்பியாய்
சோடையின்றியே செய்தனர் அரசியல்
சோற்றுக்கே வழியிலா மக்களுக்கும்
கிடைத்திடச் செய்தனர் யாவுமே
கீழோர் மேலோரேனும் பேதமின்றி!

ஆண்டுபல தமிழகத்தின் முதல்வராக
அனைவரும் போற்றிட நல்லாட்சி
ஈண்டு செய்தனர் இணையற்று
ஈதல் செய்வதில் இவர்போலும்
மண்ணில் யாருமினிப் பிறப்பாரோ?
மாசின்றி உழைத்த செல்வமெலாம்
எண்ணியே பாராமல் உளம்நெகிழ
ஏழைகட்குத் தந்த கர்ணனிவர்!



கவிஞர் புரட்சிபாலன் - வன்கூவர்

மண்ணிலேமனிதராய் பிறந்ததற்கு
மாதவம் செய்திடல் வேண்டுமே
மண்ணிலே பிறந்திடும் யாவரும்
மனிதராய் வாழுத லாகுமோ?
எண்ணியே பார்த்திடில் மனிதருள்
எத்தனை மிருகங்கள் காண்போம்?
கண்ணியத்தோடு வாழ்பவர் எவரோ
காசினிபோற்றும் மனிதருள் புனிதர்!

மனிதருள் புனிதராய் வாழ்தற்கு
மலைபோல் புண்ணியம் வேண்டுமே
கனிதரும் மரங்களும் இங்குண்டு
காய்தரும் மரங்களும் இங்குண்டு
இனியொரு மனிதர் வருவாரோ
இங்கே யாவரும் கலங்கிட
மனிதருள் புனிதராய் வாழ்ந்து
மறைந்தார் "மக்கள்திலகம்" எம்.ஜி.ஆர்!

# தமிழ் உழவர் திருநாள்

நெற்கதிர் விளைய ஒளி மழை கொடுத்த கதிரவனுக்கு
உலகத்துக்கு உணவூட்ட உழைத்த தமிழ் உழவன்
கதிரவனுக்குச் செலுத்தும் காணிக்கைத்
திருநாளே தைப்பொங்கல்

ஏர்பூட்டி உழவும் வண்டி இழுக்கவும் உதவிய எருதுகளுக்கும்
பாலருக்குப் பால் கொடுத்துதவிய பசுக்களுக்கும்
உழவன் செய்யும் பாராட்டுப் பொங்கலே
பட்டிப்பொங்கல்

தைத்திங்கள் முதலாம் நாள் உலகத் தமிழர் எல்லாம்
அடிவானம் சிவக்கும்முன் அதிகாலை துயில் எழுந்து
தலைமுழுகிப் புத்தாடை அணிந்து தம்
மனைவாசல் முற்றத்தைப் பெருக்கிட்டு



கோமயத்தால் மெழுகி மாக்குறுணல் கோலம் போட்டு
வாசல் எல்லாம் மாவிலை பூவும் தோறணமும் கட்டி
தலைவாழை இலை விரித்து அதன்மேல்
முடித்தேங்காய் மாவிலையில் நிறைகுடம் வைத்து

அறுகம்புல் சாணமதாலைங்கரன் அருள் உருவை அமைத்து
அருகில் திருவிளக்கு ஏற்றிவைத்து பழம் பாக்கு வெற்றிலையோடு
பல இனப் பூக்களுடன் விபூதி சந்தனம் வைத்து
திருமகளின் வரவைக்காண்பர்

மண்பானை கழுவி அதன் குற்றம் அற திருநீறு சந்தனம்
குழைத்து அழகாய் அதன் மேல் குறியும் வைத்து
மஞ்சள் இஞ்சி மாவிலை கழுத்தில் கட்டி
மண் அடுப்புமேல் ஏற்றி வைத்திடுவர்


பானை நிறை தண்ணீர் பால் நிரப்பி பானை அடியில்
பால்பொங்கி வழியும் வரை தீயிட்டு எரிப்பர்
பால்பொங்கியதும் பானையில் பச்சை அரிசி
பாசிப்பயிறும் இட்டு பொங்கிடுவர்

பழவகையும் சர்க்கரை கற்கண்டு தேனும் இட்டு
முத்தமிழ் போல் இனிதான பொங்கல் பொங்கி
பாசமுள்ள மக்களோடு இணைந்து
பட்டாசு கொழுத்தி வெடிக்க வைப்பர்

நிறைகுடத்தின் முன்னே தலைவாழை இலை போட்டுஅதில்
நிறைவான பொங்கல்தனைப் படைப்பர்
குறையின்றிக் கனிந்த முக்கனிகளையும் வைத்து
ஆடவர் காட்டிடுவர் தூபதீபம்

அனைவரும் கூடி நின்று துதித்திடுவர் தேவாரபாடல்பாடி
குழந்தைகள் எல்லாம் கூடியே பொங்கல்தனை உண்ண
உறவினர் அயலவர்களுக்கும் கொண்டு சென்று
கொடுத்துண்டு களித்திடுவர் பொங்கலன்று

உலகமெல்லாம் உள்ள தமிழர் பெருநாள் இதனை
உழவனோடு உமையாளும் உறவுகளும்
பொங்கலோ பொங்கல் என்று சொல்லி
பொங்கிடும் பொங்கல் திருநாள்.



கவிநாதம் பரந்தாமன்

# படித்ததில் பிடித்தது




நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

## - மதுமிதா -

நகைச்சுவை...

ஒருமுறை ஆபிரஹாம் லிங்கன் அவர்களை காண ஒருவர் சொல்லிக் கொள்ளாமல் வந்திருந்தாராம், அந்த நேரம் பார்த்து அவர் வெளியே போயிருக்க, கொஞ்சம் நேரம் காத்திருந்து கடுப்பாகி, வீட்டு வாசலில் கழுதை என்று எழுதி வைத்து சென்றாராம்.

வந்தவர் யார் என்பதை எழுத்தை வைத்து அறிந்த ஆபிரஹாம் லிங்கன், அடுத்த நாள் அவரை சந்தித்து "நேற்று நீங்க எங்க வீட்டுக்கு வந்தீங்க போலிருக்குது,



உங்க பெயரை எழுதி வைச்சிட்டு போனீங்க, அதனால யார் வந்தது என்பதை அறிய ரொம்ப வசதியா போச்சு" என்றாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி? 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

# மூலிகை உணவு மருத்துவம்



வைத்திய கலாநிதி
கே.ரீ. கோபால்
647-456-9776

சீர் + அகம் - சீரகம். சீரகத்திற்குப் 'போசனகுடோரி' என்றும் ஒரு பெயர் உண்டு. சமிபாட்டைச் சீராக்குவதில் இதன் பங்கு உண்டு. முக்கியமாக குழந்தைகள், வயோதிபர் போன்றோர் பசியின்மை, அசீரணம் என்பவற்றால் அதிகம் பாதிக் கப்படுவதுண்டு. அதற்கு உணவில் சிறிதளவு சீரகத்தை சேர்த்தால் நற்பயன் கிடைக்கும். அகம் சீராகும்.

சிலருக்கு சாப்பாட்டுக் குழப்பநிலையில் 'விக்கல்' ஏற்படுவதுண்டு. இதற்கு 8 பங்கு திப்பலியும் 16 பங்கு சீரகமும் எடுத்து இலேசாக வறுத்து பொடி செய்து வைத்துக் கொண்டு அரை தேக்கரண்டி வீதம் எடுத்து சிறிது தேன் விட்டுக் குழைத்து சாப்பிடுவர நீங்கும். குழந்தை களுக்கு குறைந்தளவு கொடுக்கலாம்.

'எட்டுத் திப்பலி ஈரெட்டுச் சீரகம்
கட்டுத் தேனில் கலந்துண்ண
விக்கல் போகும்'

இப்படியான சீரகத்தின் தாவரவியல் பெயர் Cuminum Cyminum ஆகும். குடும்பம் Apiaceae. சீரகத்தில் நற்சீரகம், பெருஞ் சீரகம், கருஞ்சீரகம் என மூன்று வகை உண்டு. பெருஞ்சீரகத்தை சோம்பு என்றும் அழைப்பர். இதன் தாவரவியல் பெயர் Foeniculum Vulgare குடும்பம் Umbell , Ferae ஆகும். வயிற்றுவலி, சுரம், செரியாமை, இருமல், இரைப்பு, ஈரல் நோய், குரல் கம்மல் யாவற்றுக்கும் உகந்ததாகும்.

கருஞ்சீரகத்தின் தாவரவியல் பெயர் Nigella Sativa. குடும்பம் Ranunculaceae என்பதாகும். இது சமையல் அறையில் பாவிக்கும் பொருள் அல்ல. இருப்பினும் செரியாமையை நீக்குவதுடன் குடல் புழுக் களையும் அழிக்கும் தன்மை உடையது. பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஏற்படும் வலித்தன்மையை அகற்றும் ஆற்றல் உடையது.

இஞ்சியும் சுக்கும் தாவரவியல் பெயர் Zingiber officinale. குடும்பம் Zingiberaceae ஆகும். இஞ்சி என்பது புதிதாகப் பெறப்படும் பச்சைக்கிழங்காகும். இதனை முறைபடி சுண்ணாம்பு பூசி உலர்த்தி எடுக்கப்படும் பொருளை சுக்கு அல்லது வேர்க் கொம்பு என அழைக்கப்படும். மருத்துவ நிலையில் நோக்கும்போது இஞ்சிக்கும், சுக்குக்கும் வேறுபாடு உண்டு.

நமது சமையலில் இடையிடையே இஞ்சிக் கிழங்கை சேர்ப்பது வழக்கம். இஞ்சி அரையல், இஞ்சிச்சம்பல், இஞ்சி ஊறு



காய் என்ற விதமாக இது உணவில் இடம்பெறுகின்றது. இஞ்சியானது பசியைத் தூண்டக்கூடியது. உண்ட உணவை இலகுவில் சமிபாடு அடையச்செய்யும். மலமிழக்கியாகவும் செயல் புரிவதினால் மலச் சிக்கல் தவிர்க்கப்படுகின்றது. வயிற்றுக் கோளாறு தலைவலி காணும் இடத்து சிறு இஞ்சித் துண்டை எடுத்து நசியத்தட்டி தேனீரில் இட்டு அருந்த நற்பயன் கிட்டும். குழந்தையைப் பெற்றெடுத்த மாதர்களுக்கு பத்திய உணவில் பாவிக்கும்போது மிகமிக நன்மை பயக்கும்.

அடுத்து பொதுவாக சுக்கை எடுத்துக் கொண்டால் உணவில் சாதாரணமாக இடம் பெறும் உணவல்ல. ஆனால் வீட்டு வைத்தியத்தில் அது முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அதனால் தான் 'சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை சுப்பிரமணியர் போல் கடவுளுமில்லை' என்று நாட்டு வழக்கில் கூறுவர். காச்சல், தலைவலி, உடல் குளிர்ந்தநிலை, வயிற்றுக்கோ ளாறுகள், பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலித்தன்மை என்பவற்றிற்கு சிறிது சுக்கு சேர்த்து தயாரிக்கப்பட்ட தேனீர் அல்லது கோப்பி கொடுக்கச் சிறந்த பயன் கிடைக்கும்.

பலவீனத்தால் உணர்விழந்து உடல் குளிர்ந்து போனவர்களுக்கு சுக்குத்தூளை உள்ளங்கை, உள்ளங்கால் என்பவற்றில் தேய்த்துவர சுரணை (உணர்ச்சி) வரச் செய்யும். இதுவும் ஒரு முதலுதவி போன்றது.

சித்த மருந்துகளில் பலவற்றில் இஞ்சியும் சுக்கும் சேர்ப்பதுண்டு. அத்துடன் கொடுக்கும் மருந்துகள் சிலவற்றிற்கு அனுபானமாகவும் சேர்க்கும்படி கூறுவதுண்டு. தினமும் சிறிதளவு பாவித்து வந்தால் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழலாம்.

'காலையில் இஞ்சி கடும் பகல் சுக்கு மாலையில் 'கடுக்காய்' என்பர். காலையில் எடுக்கும் உணவில் இஞ்சியும், மதிய உணவில் சுக்கையும் இரவு உணவில் கடுக்காயையும் சேர்த்து உண்டு வந்தால் ஆரோக்கியமாக வாழலாம். நீண்டநாள் வாழ்வுக்கு வழியமைக்கும்.

இஞ்சியையும் மரவள்ளிக்கிழங்கையும் சேர்த்து உண்பதினால் தீங்கு உண்டா? என்ற எண்ணம் சிலரிடம் உண்டு. இரண்டும் ஒத்துவராத நச்சுத்தன்மையால் கெடுதியும், மரணமும் ஏற்பட்டிருப்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால் எல்லோருக்கும் அப்படி நிகழ்வதில்லை. மரவள்ளிக்கிழங்கு நாள்பட்டு நீலம் பாரித்த நிலையில் இருந்தால் அதனைப் பாவிப்பது நன்று அல்ல. அப்படியின்றி இருந்தால் பாவிப்பதினால் கெடுதியில்லை. எனவே பெரும்பாலும் பாவிக்கும் பொருட்களை கண்ணும் கருத்துமாக அவதானிக்க வேண்டும்.







பொதுவாக மரவள்ளிக்கிழங்கை சமைக்கும் போது அதனை நன்கு கழுவு தலுடன் கிழங்கை மூடியளவிற்கு நீர்விட்டு திறந்தபடி சமைக்க வேண்டும். வெப்பநிலை கூடிக்



காணப்படல் வேண்டும். இப்படி சமைப்பதினால் 'லினேசு' நொதியம் அழிக்கப் பட்டுவிடும். அதுமட்டுமன்றி ஐதரோசயனிக் கமிலம் (HCN) மாறிவிடும் என கூறப் படுகின்றது. இதுவே நச்சுத்தன்மையை ஏற்படுத்தும். இதில் எமக்கு நம்பிக்கை வராவிடில் இரண்டையும் கூட்டிப் பாகம் செய்வதை தவிர்ப்பது நன்றாகும்.

தொடரும்

## இயற்கை மருத்துவம்

- இதயத்தை வலுப்படுத்த - "செம்பருத்திப் பூ" 
- இருமல், மூக்கடைப்பு குணமாக்கும் - "கற்பூரவல்லி" (ஓமவல்லி). 
- நீரழிவு நோய் குணமாக்கும் - "அரைக்கீரை" 
- வாய்ப்புண், குடல்புண்களை குணமாக்கும்- "மணத்தக்காளிகீரை" 
- உடலை பொன்னிறமாக மாற்றும் - "பொன்னாங்கண்ணி கீரை" 
- இரத்தத்தை சுத்தமாகும் - "அருகம்புல்" 
- இரத்த அழுத்தத்தை குணமாக்கும் - "பசலைக்கீரை" 

# நம்வாழ்வு விடிந்திடட்டும்!

வெள்ளம் வடிந்தோட வேதனையும் விரைந்தோட
உள்ளமெலாம் உற்சாகம் ஊற்றெடுத்து நின்றிடட்டும்
நல்லவைகள் நம்வாழ்வில் நாளும்வர வேண்டுமென்று
நாம்பொங்கி மகிழ்ந்திடுவோம் நம்வாழ்வு விடிந்திடட்டும்!

இயற்கை தந்தவிடர்கண்டு ஏக்கமுற்று விழுந்திடாமல்
முயற்சியுடன் உதவிநின்றார் முழுமனதை வாழ்த்திநின்று
அயற்சிதனை விட்டெறிந்து அனைவருமே அணைந்துநின்று
உயற்சிதர வேண்டுமென்று உளமாரப் பொங்கிநிற்போம்!



நீர்பெருகி நின்றதனால் நீரருந்த முடியாமல்
ஊர்மக்கள் யாவருமே உயிர்துடித்து நின்றார்கள்
நீர்வற்றிப் போனாலும் நிம்மதியைத் தேடுமவர்
சீர்பெற்று வாழ்வதற்கு இப்பொங்கல் உதவிடட்டும்!

மார்கழி மாதமது மனங்குளிர வைத்தாலும்
மாமழையும் பேரழிவும் மனம்வருந்தச் செய்ததுவே
கோபமொடு கொடுமழையும் குளிர்காற்றும் சேர்ந்ததனால்
மார்கழியை நினைப்பதற்கே மக்களெலாம் நடுங்குகின்றார்!

நடுக்கமுறும் மனம்திரும்ப நம்வாசல் பொங்கல்வரும்
இறுக்கமெலாம் இறங்கிவிட இன்பமாய் பொங்கிடுவோம்
பொறுப்புடனே பொங்கல்செய்தால் பூரிப்புவரு மென்றெண்ணி
புத்தரிசி தனைப்பெற்று பொங்கல்பொங்கி மகிழ்ந்திடுவோம்!

சஞ்சலத்தில் உழன்றாரைச் சாதிமதம் பாராது
நெஞ்சார உதவிநின்ற நீள்கரங்கள் உடையாரை
கொஞ்சி யவர்கைபற்றி கூடவே வைத்தபடி
அஞ்சாமல் பொங்கல்செய்து அவர்கையிற் கொடுத்திடுவோம்!

பட்டாசு மத்தாப்பு புத்தாடை அத்தனையும்
இட்டமுடன் இருந்துவிடின் இனித்துவிடா பொங்கலென்பர்
துட்டகுணம் அட்டகாசம் துயர்படுத்தும் அத்தனையும்
பட்டென்று அகலுதலே பாங்கான பொங்கலாகும்!

மக்களது மனங்களிலே மாற்றம்பல வருவதற்கும்
மக்களெலாம் தோழமையில் மகிழ்ந்தென்றும் இருப்பதற்கும்
தைத்திங்கள் வருகின்ற தைப்பொங்கல் அமைகவென
முத்திக்கு வித்தான முழுமுதலை வேண்டிநிற்போம்

கோவில்சென்று கும்பிடுவோம் குறைசொல்லல் தவிர்த்திடுவோம்
பாவநிறை செயலையெல்லாம் பள்ளமதில் புதைத்திடுவோம்
தூய்மைநிறை பெரியோரை தொட்டுநின்று வணங்கிடுவோம்
வாய்மைகொண்ட மனத்தோடு வாழவெண்ணிப் பொங்கிடுவோம்!



எம். ஜெயராமசர்மா - மெல்பேண் அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

**Refinance** **Purchase** **Renewal**

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*

1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*








**Pradeepraj Mani**
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com

*Some conditions apply


MORTGAGE ALLIANCE

**Gaya Kathir**
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org